# கொக்குவில் நந்தாவில்

# கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்

# கும்பாபிஷேக மலர்

24.06.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்மிகு

**கொக்குவில் நந்தாவில்**

**கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்**



# புனராவர்த்தனப் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக

# சிறப்பு மலர்

## 24.06.2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் முகம்


**நூலின் பெயர்** : கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய புனராவர்த்தனப் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்

**நூலின் வகை** : சிறப்பு மலர்

**பதிப்புரிமை** : மலர்க்குழு

**வெளியீடு** : கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்

**தாள் வகை** : 100gsm Artpapers

**பக்கங்கள்** : 72

**பிரதிகள்** : 700

**அச்சுப்பதிப்பு** : அன்றா பிறிண்டேர்ஸ்,
379, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரினுள்ளே


1. முன்னுரை ----------------------------------------01
2. ஆசியுரைகள் ----------------------------------------03
3. பரிபாலன சபை 2016 - 2020----------------------------------------10
4. மகாகும்பாபிஷேக விஞ்ஞாபனம் 2020, 2008 ----------------------------------------11
5. ஆலயத் தோற்றமும் வளர்ச்சியும் ----------------------------------------13
6. ஆலயத்தின் அமைப்பும் கட்டடக்கலையும் ----------------------------------------27
7. நித்திய நைமித்திய பூசை ஒழுங்குகளும், நடைமுறைகளும் ----------------------------------------34
8. திரு ஊஞ்சல் ----------------------------------------44
9. சுவாமி திருவீதி உலா வரும் தினங்கள் ----------------------------------------50
10. ஆலயத்தின் கடந்த காலச் சிவாசாரியார்கள்----------------------------------------52
11. ஆலயத்தில் நிறைவேற்றப்பட்ட முக்கிய திருப்பணிகளும் நிகழ்வுகளும் -----54
12. நன்றியுரை ----------------------------------------56
13. கும்பாபிஷேக நிதி அறிக்கை----------------------------------------61



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

அண்டசராசரங்களை எல்லாம் காத்து, அழித்து, மறைத்து அருள் புரிந்து வருகின்றவரான சிவபெருமான், உமையம்மையான ஆதிபராசக்தியைக் கொண்டே ஐந்தொழில்களையும் செய்விக்கின்றார். இந்தப் பேரருட் சக்தியாக விளங்கும் அன்னையவள் மதுரையில் மீனாட்சியாகவும், காஞ்சியில் காமாட்சியாகவும், தஞ்சையில் முத்துமாரியாகவும், திருக்கடவூரில் அபிராமியாகவும் சமயபுரத்தில் கருமாரியாகவும், முன்னேஸ்வரத்தில் வடிவாம்பிகையாகவும், வற்றாப்பளையில் கண்ணகியாகவும், தெல்லிப்பழையில் துர்க்கையாகவும், நந்தாவில் பதியில் மனோன்மணியாகவும் பல்வேறு திருத்தலங்களிலே பல்வேறு திருநாமங் கொண்டு அருள்புரிந்து வருகின்றார்.

கொக்குவில் நந்தாவில் பதியிலே வீற்றிருக்கும் அன்னை மனோன்மணி அழகுருவானவள்; அன்பு மயமானவள்; சாந்தமும் கருணையும் கொண்டவள்; குளிர்ச்சி பொருந்தியவள்; தீமையை ஒழிப்பவள்; அடியார்கள் உள்ளத்தில் தேன்போன்று தித்திப்பவள்; வல்வினைகளையும் நோய்களையும் விரட்டி ஓட்டுபவள்; தன்னை நாடிவரும் அடியவருக்கு வேண்டிய வரம் அளித்துக் காப்பவள். இத்தனை பெருமை மிகு தாய்க்கும் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கும் மங்கலகரமான சார்வாரி வருடம் ஆனி மாதம் 10 ஆம் நாள் (24.06.2020) புதன்கிழமை திருத்தியைத் திதியும் பூச நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுப தினத்தில் காலை 5.50 மணி முதல் 6.30 மணி வரையிருந்த மிதுனலக்ன சுபமுகூர்த்த வேளையில் மஹாகும்பாபிஷேகம் வெகுசிறப்பாக நிறைவேறியுள்ளது.

காண்பதற்கரிய மகா கும்பாபிஷேக நிகழ்வையும் அதனையொட்டி நடைபெற்ற புனருத்தாரண வேலைகளையும் ஆலய வரலாற்றையும் எதிர்காலச் சந்ததியினர் அறிந்துகொள்ளக் கூடிய வகையிலான ஆவணமாக 'மகா கும்பாபிஷேக சிறப்புமலர்' ஒன்றை வெளியிட வேண்டுமென பரிபாலன சபையினர் விருப்பம் கொண்டனர். அதற்கமைவாக வெளிவரும் இக் கும்பாபிஷேக மலரினை அம்பாளின் பாதாரவிந்தங்களில் சமர்ப்பித்து வணங்குகிறோம்.இம்மலரில் ஆசியுரைகள், வாழ்த்துரைகள், ஆலய வரலாறு, ஆலய அமைப்பும் கட்டடக்கலையும், ஆலய உபயங்களும் நடைமுறைகளும், திருவூஞ்சற் பாடல், ஆலயத்தில் பூசைகளை மேற்கொண்ட சிவாசாரியார்கள், கும்பாபிஷேக வரவு செலவுக் கணக்கு மற்றும் நன்றியுரை போன்றவை அடங்கியுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய வரலாற்றினை எழுதுவதற்கு கடந்த காலங்களில் வெளிவந்த கட்டுரைகள், கும்பாபிஷேக மலர்கள், நூற்றாண்டு மலர் போன்றவையும் மூத்தோர் செவிவழி வழிகாட்டல்களும் துணை நின்றன.

ஆகம விதிமுறைகளுக்கமைவான ஆலயத்தின் அமைப்பு அங்கு காணப்படும் ஓவியங்கள், சிற்பங்கள், கட்டடக்கலை போன்றவை திராவிடக் கலைப்பாணியையும் நுட்பங்களையும் கொண்டு புராண இதிகாசக் கதைகளையும் அம்பாளின் பல்வேறு ரூபங்களையும், மூர்த்தங்களையும் கொண்டனவாக அமைந்துள்ளன. இவை பார்த்து இரசிப்பதற்காக மட்டுமன்றி அவற்றின் கருத்தினை விளங்கிக் கொள்ளவேண்டும் என்பதற்காக "ஆலயத்தின் அமைப்பும் கட்டடக்கலையும்" என்ற கட்டுரை மூலம் விபரிக்கப்பட்டுள்ளது.

எமது ஆலயத்திற்கென்றே தனித்துவமான உபயங்களும் நடைமுறைகளும் உள்ளன. ஆலய பரிபாலன சபையின் நிறைவேற்றுக் குழுக்களும், பதவி அலுவலர்களும் மாற்றமடையும் போது இவை தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்பட வேண்டியவை. எனவே இவற்றை "நித்திய நைமித்திய பூசை ஒழுங்குகளும் நடைமுறைகளும்" என்ற பகுதியினூடாக ஆவணப்படுத்தியுள்ளோம்.

மேலும் பழைமையும் பெருமையும் மிக்க அம்பாளின் திருவூஞ்சற் பாடலும் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேக நிதி அறிக்கையும் இதில் இடம்பெற்றுள்ளன. சிறு தொகையாகவோ பெருந்தொகையாகவோ நிதி வழங்கியோர் நன்றிக்கும் அம்பாளின் திருவருளுக்கும் பாத்திரமானவர்கள். அவர்களின் பெயர் விபரங்களைத் தருவது நிதிக் கையாளுகையின் வெளிப்படைத்தன்மையை விளக்குவதாக அமையும் என்பதால் அவை பற்றிய விபரமும் இங்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

நிறைவாக அம்பாளின் மகா கும்பாபிஷேக நிகழ்வு மிகவும் சிறப்பாக நிறைவேறுவதற்கு மட்டுமல்லாது இம் மகா கும்பாபிஷேக மலர் வெளிவரும் வரை பலரும் தங்களாலான உதவிகளை வழங்கியவண்ணம் இருந்துள்ளார்கள். அவர்களுக்கும் நன்றி செலுத்த வேண்டியது எமது கடமையாகும் என்ற வகையில் நன்றியுரையும் தரப்பட்டுள்ளது.

**ஆலய பரிபாலன சபையினர்**
**நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவமயம்

குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்



ஸ்தாபகர் :- ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
(முதலாவது குருமஹா சந்நிதானம்)
ஆதீனகுரு முதல்வர் :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

021 222 2870 ஸ்தாபிதம் : 1966

பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.

22.01.2021

## ஆசிச் செய்தி

கொக்குவில் நந்தாவில் பகுதியில் எழுந்தருளியிருந்து அருளாட்சிபுரியும் மனோன்மணி அம்பாளுக்கு நிறைவுபெற்ற கும்பாபிஷேகத்தை சிறப்புச் செய்யும் முகமாக கும்பாபிஷேக சிறப்பு மலர் வெளியிடுவதையிட்டு மகிழ்வடைகிறேன். "அம்பிகையை வழிபட்டால் அதிக வரம் பெறலாம்" என்னும் வாக்கிற்கு அமைய இவ் ஆலயத்தில் வேண்டுவதை ஈயும் பொருட்டு நீண்ட காலமாக உலக மாதாவாகிய அன்னை எழுந்தருளியிருந்து அருளாட்சி புரிகின்றாள்.

"கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்றும் "நித்தலும் எம்பிரானுடைய கோயில் புகுக" என்றும் "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்றும் கூறுகின்ற வாக்கியங்களுக்கு அமைய பல ஆலயங்களைக் கொண்ட இவ்வூரில் சிந்தனையாளர்களும், திறந்த மனமுடையவர்களும் நிறைந்து வாழுகின்றனர். அப்படிப்பட்ட கொக்குவில் நந்தாவில் பதியில் நடைபெற்ற கும்பாபிஷேகம் அனைவரது மனங்களிலும் இன்ப ஊற்றினையும் மன நிறைவையும் ஏற்படுத்தியுள்ளது. சிறப்பான முறையில் கும்பாபிஷேகத்தினை நிறைவுசெய்து அதன் தொடர்ச்சியாக கும்பாபிஷேக சிறப்பு மலரையும் வெளியீடு செய்து சைவத்தையும் தமிழையும் காக்கும் பெரும்பணி ஆற்றும் ஆலய பரிபாலன சபையினருக்கும் அம்பிகையின் அடியவர்களுக்கும் அவள் அருள் கிடைப்பதாகுக.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்**
ஆதீன குருமுதல்வர்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மீசாலை இலந்தைக்கூடல் வீரகத்திப்பிள்ளையார் திருக்கோவில்**
**Meesalai Elanthaikkodal Veerakaththippillaiyar Thirukkovil**
**මීසාලෙයි ඉලන්දයිකුඩල් වීරකත්තිපිල්ලෙයාර් කෝවිල**

முகாமையாளர்
"வேத சிவாகம வித்வத்ஜோதி"
**ப்ரம்மஸ்ரீ பாலமுரளீதரக்குருக்கள்**
**Pirammasri Balamuraleetharakkurukkal**
බ්‍රම්මශ්‍රී බාලමුරලීදරකුරුක්කල්

"சிவாகம சேகரர்"
**ப்ரம்மஸ்ரீ முரளீதர. வித்தியானந்தக்குருக்கள்**
**Pirammasri Muraleethara Vithyananthakkurukkal**
බ්‍රම්මශ්‍රී මුරලීදර විත්‍යානන්දකුරුක්කල්

**கேணியடி வீதி, மீசாலை மேற்கு, மீசாலை.**
Keniyady Veethi, Meesalai West, Meesalai.
මීසාලෙයි.

# பிரதிஷ்டா பிரதம குருவின்
# *ஆசிச்செய்தி*

அகிலாண்ட கோடி நாயகி, ஸ்ரீசக்கர நாயகி, லலிதா மஹா திரிபுர சுந்தரி மனோன்மணி அம்பாளுக்கு (24.06.2020) புதன்கிழமை பூச நட்சத்திரத்துடன் கூடிய நன்நாளிலே கும்பாபிஷேகம் நடந்தேறி நிறைவுற்றுள்ளது

திருவருட் பொலிவோடு மிளிர்கின்ற திருக்காட்சியை ஊனக்கண்ணாலே தரிசிக்கும் அடியார்களுக்கு அருள்சுரக்க வேண்டும் என்ற பெருநோக்கோடு பெருஞ்சாந்தி எடுக்கப்படுகிறது. அந்தவகையில் தேடிவரும் அடியவர்களுக்கு மனோன்மணித் தாய் திருவருள் சுரப்பதோடு, நடந்து முடிந்த கும்பாபிஷேகத்திற்கு பொருள் உதவி, சரீர உதவி செய்த உள்நாடுகளிலும், வெளிநாடுகளிலும் வாழும் அடியவர்கள் அனைவருக்கும் நல்லருள் சுரக்க வேண்டி பிரார்த்திக்கிறேன்.

கொடிய நோய்த்தாக்கத்திலிருந்து அனைத்து அடியவர்களையும் காப்பாற்ற அம்பிகையிடம் விண்ணப்பித்து பிரார்த்தித்து கும்பாபிஷேக சிறப்பு மலர் இனிதே வெளிவரவும், அதன் பயனாக அம்பாளது அதிசயங்களையும், அருளாட்சியையும் அடியவர்கள் அறிந்துகொள்ளவும் அம்பிகையை பிரார்த்தித்து அம்பிகை பாதம் பணிகின்றேன்.

பிரம்மஸ்ரீ பால முரளீதரக் குருக்கள்
பிரதிஷ்டா பிரதம குரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிவாகம சேகரர், சர்வ சாதக ரத்தினம்"

**பிரம்மஸ்ரீ மு. வித்தியானந்தக்குருக்கள்**

**(இலந்தைக்கூடல் வீரகத்திப்பிள்ளையார் ஆலய குருக்கள்)**

கேணியடி வீதி,
மீசாலை மேற்கு,
**மீசாலை.**

# ஆலய பிரதம குருவின்
# *ஆசிச்செய்தி*

இலங்கைத் திருநாட்டில் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் யாழ்ப்பாண மாநகரில்கொக்குவில் பதியிலே நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் எனும் திருநாமத்தோடு விளங்கும் அம்பிகையின் தேவஸ்தானத்தில் மகாகும்பாபிஷேகம் 24.06.2020 புதன்கிழமை பூச நட்சத்திரத்துடன் கூடிய நன்நாளிலே நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது.

இக்கும்பாபிஷேகத்தின் பயனாக நாட்டிலே நிகழுகின்ற அசாதாரண சூழ்நிலை நீங்கி உலக மக்கள் நோயிலிருந்து விடுபட்டுப் பேரானந்தப் பெருவாழ்வு வாழ்வதற்காக அம்பாளை பிரார்த்தனை செய்து ஆசிகள் கூறி அம்பிகையைச் சரணடைகின்றேன்.

**பிரம்மஸ்ரீ மு.வித்தியானந்தக் குருக்கள்**
கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SIVAPOOMI TRUST
## சிவபூமி அறக்கட்டளை

**Head Office :** Sivapoomi
Kondavil East,
Kondavil.

E.Mail - sivapoomi@gmail.com
Web - www.sivapoomi.org/.com

**T.P.No :** 021-222-7938



Incorporated by an order made under section 114 oh the trusts Ordinance by the Minister of Justice and Gazette in Gazette Extraordinary No 1685/26 dated 24.10.2010


# செஞ்சொற் செல்வரின்
# *ஆசிச்செய்தி*

**அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்**

**– பாரதியார்**

சர்வலோக நாயகியாகிய அம்பிகை, கொக்குவில் நந்தாவில் பதியில் கற்புலத்து மனோன்மணி அம்மன் என்ற நாமத்தோடு வீற்றிருந்து அருள் மழை பொழிகின்றாள். பலநூறு வருடப் பெருமை மிக்க இவ்வாலயத்தில் கும்பாபிஷேகம் இடம்பெற்று அதன் பயனாக கும்பாபிஷேக சிறப்பு மலரும் வெளியிடப்படுவது அறிந்து ஆனந்தமடைகிறேன். ஆலய பரிபாலனசபையின் முயற்சியால் ஆலயம் புதுப்பொலிவுடன் மிளிர்வது பெருமைக்குரிய விடயமாகும். நோய் தீர்க்கும் சக்தி மிக்க அம்பாளின் பக்தர்கள் உலகெங்கும் வாழ்கிறார்கள். நந்தாவில் குளத்தருகே அருளாட்சி செய்யும் அம்பாளின் அற்புதங்களை இன்றும் பலர் ஆச்சரியத்துடன் எடுத்துரைப்பார்கள் புதுமை நிறைந்த அம்பாளின் மகா கும்பாபிஷேகம் போல அம்பிகையின் சிறப்புக்களை எடுத்தியம்பும் கும்பாபிஷேக சிறப்பு மலரும் சைவத் தமிழ் உலகிற்கு வரலாறு பகரும் ஓர் ஆவணமாக வெளிவர எனது வாழ்த்துக்களையும் ஆசிகளையும் வழங்கி நாட்டில் சாந்தி சமாதானம் நிலவ அம்பாளைப் பிரார்த்திக்கிறேன்.

**கலாநிதி ஆறு.திருமுருகன்**
தலைவர் - சிவபூமி அறக்கட்டளை
தலைவர் - ஸ்ரீ துர்க்காதேவி, தேவஸ்தானம், தெல்லிப்பழை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிபாலன சபைத் தலைவரின்
# *வாழ்த்துச் செய்தி*

கற்புலத்து மாணிக்கமாய், கருணைமுகத் தேனமுதாய், அற்புதங்கள் தனை நிகழ்த்தும் ஆனந்த பைரவியாய் வற்றாத ஒளிவிளக்காய் வானவனின் குல விளக்காய் அருள்பாலித்து வரும் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாளின் கும்பாபிஷேகத்தினை முன்னிட்டு வெளிவரும் கும்பாபிஷேக மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மனநிறைவடைகிறேன்.

நீண்ட வரலாற்றுப் பின்னணியுடன் கூடிய கற்புலத்து மனோன்மணி அம்பாளது ஆலயமும் அம்பிகையின் அற்புதங்களும் எமது கிராமத்திற்குச் சிறப்பினையும் பெருமையையும் தந்து நிற்கின்றன. சிறிய ஆலயமாக இருந்த அம்பாளது கோவில், அடியவர்களது கொடையினாலும் அவர்தம் உடலுழைப்பினாலும் காலத்திற்குக் காலம் வளர்ச்சிகண்டு இன்று வானுயர்ந்த இரண்டு கோபுரங்கள், வில் வளைவுடன் கூடிய அழகிய உட்பிரகாரம், சிற்ப ஓவிய வேலைகளுடன் வண்ணமயமான கோபுர வாயில் மணிமண்டபம், அம்பாள் பவனிவருதற்கேற்ற வெளிப்புறப் பெருவீதி, சித்திரத் தேர், தீர்த்தக் கேணி முதலானவை அணி செய்யும் சிறப்பு மிக்க தலமாக விளங்குகிறது.

அம்பாளது அருட்பார்வையினால் துன்பங்கள் நீங்கி இன்பங்கள் சேரப் பெற்ற, உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உள்ள அடியவர்கள், காலத்திற்குக் காலம் தங்களது காணிக்கைகளை வழங்கி திருப்பணிக்காகப் பெரும்பங்காற்றி வருகிறார்கள். ஆகம விதிகளின்படி 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை புனருத்தாரணக் கும்பாபிஷேகம் செய்யவேண்டும் என்ற நியதியை அறிந்து, குறிப்பிட்ட சில வருடங்களுக்குள் ஆலயத்தில் பல பாரிய திருப்பணிகள் நிறைவேற்றி முடிக்கப்பட்டு 24.06.2020 ஆம் திகதி கும்பாபிஷேக பெருவிழாவும் நடந்தேறி நிறைவு பெற்றுள்ளது.

ஆலயத்தின் வளர்ச்சிக்காய் அயராது உழைக்கும் அடியவர்களுக்கும், அம்பாளது நித்திய நைமித்திய பூசைகளைச் சிறப்பாக நிறைவேற்றி வரும் அந்தணக் குருமாருக்கும், மஹா கும்பாபிஷேகப் பெருவிழாவை சிறப்பாக மேற்கொண்ட பிரதிஷ்டா குரு உட்பட்ட ஏனைய அந்தணச் சிவாசாரியார்களுக்கும் நன்றியுடன் கூடிய, அம்பாளின் அருளுக்காகப் பிரார்த்திக்கிறேன்.

அழகிற்கு அழகு சேர்ப்பது போல, மஹா கும்பாபிஷேகத்திற்காகச் செய்யப்பட்ட திருப்பணி வேலைகளோடு இன்னும் புதுப்பொலிவு பெற்றுள்ள அம்பாளின் ஆலயம், தெய்வீக உணர்வினையும், கலை நயத்தினையும் வெளிப்படுத்தி நிற்பதோடு எங்கள் கிராமத்தின் சிறப்பினைப் பொலிவு பெறச் செய்துள்ளது. சர்வலோக நாயகியாக இருந்து எமை எல்லாம் ஆட்கொள்ளும் நந்தாவில் பதியுறைந்த மனோன்மணித் தாயின் எல்லையில்லா அருட்கடாட்சம் தரணி எங்கும் பரவி அன்பும், அமைதியும், சுபீட்சமும் மேலோங்கி எல்லோரும் இன்புற்று வாழ வழிசெய்ய வேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன்.

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

**சி.ஜெயபாலசிங்கம் J.P**
தலைவர்
கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය, නල්ලූර්
**பிரதேச செயலகம், நல்லூர்**
**Divisional Secretariat, Nallur**


පොදු දුරකථන / ෆැක්ස් අංකය
பொதுத் தொலைபேசி/தொலைநகல் இல:
General Telephone/Fax No: 021 222 2208

ප්‍රාදේශීය ලේකම් / பிரதேச செயலர் / Divisional Secretary — Tel: 021 222 9801, e-mail: ds@nallur.ds.gov.lk
සහකාර ප්‍රාදේශීය ලේකම් / உதவிப் பிரதேச செயலர் / Asst. Divisional Secretary — Tel: 021 321 3215, e-mail: ads@nallur.ds.gov.lk
ගණකාධිකාරී / கணக்காளர் / Accountant — Tel: 021 222 1057, Fax: 021 222 1057, e-mail: acc@nallur.ds.gov.lk
සහකාර අධ්‍යක්ෂ - සැලසුම් / உதவி திட்டமிடல் பணிப்பாளர் / Asst. Director of Planning — Tel: 021 222 9962, Fax: 021 222 9962, e-mail: adplan@nallur.ds.gov.lk
පරිපාලන නිලධාරි / நிர்வாக உத்தியோகத்தர் / Administration Officer — Tel: 021 205 4064
දිවිනැගුම් කළමනාකරු / வாழ்வெழுச்சி முகாமையாளர் / Divineguma Manager — Tel: 021 222 [illegible]


# *வாழ்த்துச் செய்தி*

எமது பிரதேச செயலகப் பிரிவில் எழுந்தருளியிருக்கும் கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம் சுமார் 230 ஆண்டுகள் பழைமைவாய்ந்த ஓர் ஆலயமாகும். இவ்வாலயத்தில் எழுந்தருளியிருக்கும் மனோன்மணி அம்பாளுக்கும் இதர பரிவார தெய்வங்களுக்கும் பஞ்சதள இராஜகோபுரத்திற்கும் நிகழும் மங்களகரமான சார்வாரி வருஷம் ஆனி மாதம் 10 ஆம் நாள் 24.06.2020 ஆம் திகதி புதன்கிழமை மஹா கும்பாபிஷேகம் செய்வதற்கு எல்லாம் வல்ல அம்பாளின் அருள் கிடைத்தமையினையிட்டு பெருமகிழ்வடைகின்றேன். ஆலய மஹாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றதுடன் அடியவர்கள் அனைவரும் ஒற்றுமையாக சமூக இடைவெளியினைப் பின்பற்றி ஆலய மஹாகும்பாபிஷேக தரிசனத்தை நிறைவு செய்து பெருமாட்டியின் திருவருட்கடாட்சத்தினையும் பெற்றுள்ளார்கள்.

ஆலயத்தை சிறப்பான முறையில் புனரமைத்து மகாகும்பாபிஷேகப் பெரு விழாவினையும் நிறைவேற்றி முடித்த ஆலயப்பரிபாலன சபையினருக்கு எனது பாராட்டுக்களைக் கூறுவதோடு கும்பாபிஷேகத்தினை முன்னிட்டு பரிபாலனசபையினரால் வெளியிடப்படும் கும்பாபிஷேக மலருக்கு எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

**அ.யோ.எழிலரசி**
**பிரதேச செயலர்**
**நல்லூர்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி

## கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்

ஆலயங்கள் மனித சமுதாயத்தின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இவ் ஆலயங்களில் நடைபெறும் கும்பாபிஷேக நிகழ்வு அங்கு பிரதிஷ்டை செய்யப்படும் மூர்த்திகளுக்கு சிவாசாரியார்களால் நடாத்தப்படும் கும்பபூஜை, வேதபாராயணம், அக்னி காரியம் முதலிய செயற்பாடுகளால் சக்தியூட்டும் நிகழ்வாகக் கருதப்படுகின்றது. ஒவ்வொரு ஆலயத்தில் (12) பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறை இக்கும்பாபிஷேக நிகழ்வு நடத்தப்படவேண்டும் என்று ஆகமங்கள் கூறுகின்றன. அந்த வகையில் கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் 2009ஆம் ஆண்டு நடைபெற்ற கும்பாபிஷேகத்தின் பின் 24.06.2020 புதன்கிழமை தினத்தில் கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. இதற்காக அடியார்கள் மற்றும் பரிபால சபையினர் இணைந்து ஆலயத்தில் புனருத்தாரணப் பணிகள் செய்து இன்று இந் நிகழ்வினை நடாத்துவது சிறப்பாகும். இப் பணிகளை மேற்கொள்பவர்கள் இதய சுத்தியுடன் நான் செய்கின்றேன் என்ற அகங்காரம் இல்லாமல் எல்லாம் இறைவன் செயலே என்பதை உணர்ந்து யாவரும் சேர்ந்து உழைப்பது சிறந்தது.

இவ்வாறு சிறப்பு நிகழ்வுகளுக்கு மட்டுமல்லாது தினமும் அடியார்கள் ஆலய தரிசனம் செய்யும் பழக்கத்தை வழக்கமாகக் கொள்ள வேண்டும். அதற்காக ஆலயத்தில் கூட்டுப்பிரார்த்தனை, பஜனை, ஆன்மீக சொற்பொழிவுகள் முதலான நிகழ்வுகளை வாரம் ஒருமுறையாவது ஒழுங்கு செய்தல் சிறந்தது. இவை மக்களின் இன்றைய நெருக்கடி நிலைமைக்கு தீர்வாகவும் அமையலாம்.

கும்பாபிஷேக நிகழ்வுகள் யாவும் சிறப்பாக நடைபெறவும் அதனை முன்னிட்டு வெளிவரும் மலர் சிறப்பாக அமையவும் அடியார்கள் இடர் தீர்ந்து சுபீட்சம் பெறவும் ஆசி வேண்டி எல்லாம் வல்ல பரம்பொருளையும் பூஜ்ய குருதேவரையும் பிரார்த்திக்கின்றோம்.

**தவத்திரு வேலன் சுவாமிகள்**
**நல்லூர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குவில் நந்தாவில்
# கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்
# பரிபாலனசபை - 2016-2020

| | |
|---|---|
| **தர்மகர்த்தா** | : திரு.ச.தெட்சணாமூர்த்தி |
| **தலைவர்** | : திரு.சி.ஜெயபாலசிங்கம் |
| **செயலாளர்** | : திரு.சி.மாதவகுமாரன் |
| **பொருளாளர்** | : திரு.கு.சண்முகநாதன் |
| **உப தலைவர்கள்** | : திரு.தி.பாலகுமார் |
| | : திரு.வே.கருணாமூர்த்தி |
| **உபசெயலாளர்** | : திரு.ந.ஜங்கரன் |
| **சபை உறுப்பினர்கள்** | : திரு.இ.ரஞ்சன் |
| | : திரு.ப.பகீரதன் |
| | : திரு.ச.கௌசிகன் |
| | : திரு.ம.மதிவதனன் |
| | : திரு.இ.சிவனேசன் |
| | : திரு.பொ.இலட்சுமிகாந்தன் |
| | : திரு.ம.சவுண்டீஸ்வரன் |
| | : திரு.க.ஜெயராஜா |

**கும்பாபிஷேக மலர்க்குழு**

திரு. சி. ஜெயபாலசிங்கம்

திரு சி. மாதவகுமாரன்

திரு ந. ஜங்கரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1980 ஆம் ஆண்டு வரை மூலமூர்த்தியாக இருந்து
அருள்பாலித்த மனோன்மணி அம்மன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







திருவருள்மிகு

யாழ்ப்பாணம் - கொக்குவில்

# நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் தேவஸ்தானம்

**புனராவர்த்தன அஷ்ட பந்தன நவகுண்ட பக்ஷ மஹா யாக பிரதிஷ்டா**

## மஹா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி விஞ்ஞாபனம் - 2020

**எண்ணெய்க்காப்பு**
23-06-2020 செவ்வாய்க்கிழமை
காலை 6.00 - 3.00 மணி வரை

பொன் முடியினிற் பூத்த புதுமலர் முகத்தில் காட்டும்
இன்னருள் சுரக்க அன்பும் இன்ப நல்லகத்தில் ஆடும்
புண்ணியவாணிகள் புண்டரீகம் கற்புலத்தில்
மண்ணிய மனோன் மணித்தாய் மலரடி வாழ்த்துவோம்.

**மஹா கும்பாபிஷேகம்**
24-06-2020 புதன்கிழமை
காலை 5.50 - 6.30 வரை

**அம்பிகை அடியார்களே!**

இந்து சமுத்திரத்தின் முத்தென திகழும் இலங்கை திருநாட்டின் கலாசார விழுமியங்களையும் பாரம்பரியத்தையுங் கொண்ட யாழ்ப்பாணத்தில் கல்வி மான்களும், செல்வந்தர்களும் சிறந்து நிறைந்த விளங்கும் கொக்குவில் நந்தாவில் கற்புலத்து பதியில் அருளாட்சி புரிகின்ற மனோன்மணி அம்பாளுக்கும், இதர பரிவார தெய்வங்களுக்கும், பஞ்சதள இராஜ கோபுரத்திற்கும் நிகழும் சார்வரி வருடம் ஆனி மாதம் 10ம் நாள் (24-06-2020) புதன்கிழமை திருதியை திதியும், பூச நட்சத்திரமும், சித்த யோகமும் கூடிய சுப தினத்தில் காலை 5.50 மணி முதல் 6.30 மணிவரையுள்ள மிதுன லக்கின சுப முகூர்த்தத்தில் மஹா கும்பாபிஷேகம் திருவ இறையருள் கூடியிருப்பதால் அடியார்கள் மஹா கும்பாபிஷேக பெருவிழாவிலும் அதற்கு முன் நடைபெறவுள்ள கிரியா வைபவங்களிலும் பின் நடைபெறும் மண்டலாபிஷேகத்திலும் கலந்து பெருவாழ்வு பெறுவீர்களாக.

### கிரியாகால விபரம்

**ஆனி மாதம் 5ம் நாள் (19-06-2020) வெள்ளிக்கிழமை**

அதிகாலை 5.00 மணிக்கு கோதூளிகா முகூர்த்தத்தில் கருமாரம்பம் இடம்பெறும்.
ஸ்ரீ விநாயகர் வழிபாடு, சிவாச்சாரிய வரணம், பிரதிஷ்டா சங்கல்பம், அனுக்ஞை, தேவ அனுக்ஞை, பிராமண அனுக்ஞை, திரவிய சுத்தி, தீர்வி விசாகம், கணபதி ஹோமம், கோபூஜை, விநாயகர் அபிஷேகம், பூர்ணாகுதி ஹோமம், சம்ஹிதா ஹோமம்.
மாலை 4.00 மணிக்கு விநாயகர் வழிபாடு, பேரிதாடனம், கிராமசாந்தி, அர்வேசபலி, திசா ஹோமம், யந்திர பூஜை.

**ஆனி மாதம் 6ம் நாள் (20-06-2020) சனிக்கிழமை**

காலை 9.00 மணிமுதல் விநாயகர் வழிபாடு, நவக்கிரக மகம், சாந்தி ஹோமம், மூர்த்தி பூஜை பூர்த்தி.
மாலை 4.00 மணிக்கு விநாயகர் வழிபாடு, இரக்ஷோக்ன ஹோமம், வாஸ்துசாந்தி, மிருத்சங்கிரகணம்.

**ஆனி மாதம் 7ம் நாள் (21-06-2020) ஞாயிற்றுக்கிழமை**

காலை 10.00 மணிக்கு விநாயகர் வழிபாடு, சூரிய அக்னி சங்கிரகணம், காவேரி தீர்த்த சங்கிரகணம்.
மாலை 6.00 மணிக்கு விநாயகர் வழிபாடு, அங்குரார்ப்பணம், இரக்ஷாபந்தனம், நவ கொடியேற்றம், யாக பூஜை, அக்னி காரியம், நவ அக்னி விபஜனம், [illegible] பிரசன்ன பூஜை, கும்பஸ்தாபனம், கலாகர்ஷணம், ஷண்மந்திர ஹோமம், கும்ப யாகசாலை பிரவேசம், மூலமந்திர ஹோமம், பூர்ணாகுதி, தீபாராதனை, பிரதட்சண நமஸ்கார வந்தனம், வேதாரணம், விபூதி பிரசாதம் வழங்கல்.

**ஆனி மாதம் 8ம் நாள் (22-06-2020) திங்கட்கிழமை**

காலை 9.00 மணிக்கு விநாயகர் வழிபாடு, விசேஷ சந்தி யாக பூஜை, தேவி கட்டளை ஹோமம், பூர்ணாகுதி, தீபாராதனை, பிரதட்சண நமஸ்கார வந்தனம், திருமுறை பாராயணம், திருவருள் பிரசாதம் வழங்கல்.
மாலை 5.00 மணிக்கு விநாயகர் வழிபாடு, பூதசுத்தி, யாகபூஜை, நவ அக்னி பூஜை, வேதமந்திர ஹோமம், பூர்ணாகுதி, தீபாராதனை, பிரதட்சண நமஸ்கார வந்தனம், திருமுறை பாராயணம், திருவருள் பிரசாதம் வழங்கல். இரவு 6.00 மணிமுதல் 7.52 மணிவரையுள்ள சுப முகூர்த்தத்தில் தயிலா [illegible], [illegible] ஸ்தாபனம், விம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம்.

**ஆனி மாதம் 9ம் நாள் (23-06-2020) செவ்வாய்க்கிழமை**

காலை 6.00 மணிக்கு விநாயகர் வழிபாடு, விசேஷ சந்தி, யாகபூஜை, நவ அக்னி பூஜை, மூலமந்திர ஹோமம், பூர்ணாகுதி, விசேஷ திரவிய ஹோமம், பூர்ணாகுதி, தீபாராதனை, பிரதட்சண நமஸ்கார வந்தனம், திருமுறை பாராயணம், திருவருள் பிரசாதம் வழங்கல், பிரதட்சண நமஸ்கார வந்தனம், திருமுறை பாராயணம், திருவருள் பிரசாதம் வழங்கல்.

**அடியார்கள் காலை 6.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரையில் எண்ணெய்க்காப்பு சாத்துவார்.**

மாலை 5.00 மணிக்கு விநாயகர் வழிபாடு, பூத சுத்தி, யாக பூஜை, நவ அக்னி பூஜை, மூலமந்திர வேத மந்திர ஹோமம், [illegible] யாக பூஜை, நவ அக்னி பூஜை, மூலமந்திர ஹோமம், கர்ப்பகிரக துவார பூஜை, கௌதுக பந்தனம், நியாசம், ஸ்பர்சாகுதி, ஜெயாதி ஹோமம், பூர்ணாகுதி, தீபாராதனை, பிரதட்சண நமஸ்கார வந்தனம், திருமுறை பாராயணம், திருவருள் பிரசாதம் வழங்கல்.

**ஆனி மாதம் 10ம் நாள் (24-06-2020) புதன்கிழமை**

அதிகாலை 5.00 மணிக்கு விநாயக வழிபாடு, விசேஷ சந்தி, யாக பூஜை, நவ அக்னி பூஜை, மூலமந்திர ஹோமம், மஹா பூர்ணாகுதி, தீபாராதனை, பிரதட்சண நமஸ்கார வந்தனம், வேத ஸ்தோத்திர திருமுறை பாராயணம், நாத கீத வாத்தியாதசவி சமர்ப்பணம், பலிகள், தானம், சகல[illegible] வாத்திய சகிதம் கும்பம் திருவீதி புறப்பாடு.
காலை 5.50 மணிமுதல் 6.30 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் ஸ்தூபி, இராஜ கோபுர கும்பாபிஷேகம் தொடர்ந்து விநாயகப் பெருமான், மனோன்மணி அம்பாள் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மஹா கும்பாபிஷேகம், மஹா சுவி நிவேதனம், அலங்கார தீபம், ஆசீர்வாதம், தசமங்கள தரிசனம், மஹாபிஷேகம், தொடர்ந்து விசேஷ பூஜை, வசந்த மண்டப பூஜை, சுவாமி உள்வீதி, வெளிவீதி, திருஉலாவும் நிகழும்.

குறிப்பு:- மஹா கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 45 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும். மண்டலாபிஷேகத்தில் பங்குபெறும் அடியார்கள் முன்கூட்டியே தேவஸ்தான பரிபாலன சபையோடு தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

அடியார்கள் கிரியா காலங்களில் பால், தயிர், இளநீர், கரும்பு, தேன், அபிஷேகப் பொருட்கள், பூமாலைகள், சகிதம் வருகை தந்து கிரியைகளை சிறப்பித்து கும்பாபிஷேகத்திற்கு தேவையான சகல உதவி ஒத்தாசைகளை வழங்கி மனோன்மணி அம்பாளின் அருட் கடாட்சத்தை பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
ஆலய பரிபாலன சபை

சோதி அச்சகம் வசந்தசாலை, கொக்குவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் - கொக்குவில்

# நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் தேவஸ்தானம்

புனராவர்த்தன அஸ்டபந்தன நவகுண்டபக்ஷ மஹாயாக

# மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

(21-03-2008) வெள்ளிக்கிழமை

அம்பிகை அடியார்களே!

## கிரியாகால விபரம்

பங்குனி மாதம் 3ம் நாள் (16-03-2008) ஞாயிற்றுக்கிழமை

பங்குனி மாதம் 4ம் நாள் (17-03-2008) திங்கட்கிழமை

பங்குனி மாதம் 5ம் நாள் (18-03-2008) செவ்வாய்க்கிழமை

பங்குனி மாதம் 6ம் நாள் (19-03-2008) புதன்கிழமை

பங்குனி மாதம் 7ம் நாள் (20-03-2008) வியாழக்கிழமை

பங்குனி மாதம் 8ம் நாள் (21-03-2008) வெள்ளிக்கிழமை

19-03-2008 காலை 10.00 மணிமுதல் தைலாப்பியங்கம் பக்தர்கள் எண்ணைக்காப்பு சாத்துதல் 20-03-2008 நண்பகல் வரை

## குருமார் விபரம்

கும்பாபிஷேகம் சிறப்புறு

சர்வபோதகம்

சிவாசாரியார்கள்

முகூர்த்த நிர்ணயம்

பிரதிஷ்டா பிரதமகுரு

பிரம்மஸ்ரீ. சபா ஸ்ரீ ... குருக்கள்

உபசாதகம்

ஆலய பிரதம குருக்கள்

உதவிக் குருமார்

வேதபாராயணம்


யாகசாரியார்கள்

அருளுரை


ஆலய பரிபாலன சபை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இராஜகோபுர கும்பாபிஷேகம்



மூலஸ்தான ஸ்தூபி கும்பாபிஷேகம்



வசந்த மண்டப ஸ்தூபி கும்பாபிஷேகம்



தெற்கு வாசல் கோபுர கும்பாபிஷேகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரதான கும்பங்கள் ஊர்வலமாக எடுத்துவரும் போது



குருமார் கௌரவிப்பின் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொக்குவில் கிழக்கு நந்தாவில்

# கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்

## தோற்றமும் வளர்ச்சியும்

ஆலயத்தின் வரலாறு ஒன்றை ஆராயும் போது புதைபொருட்கள், கல்வெட்டுக்கள், செப்பேடுகள், எழுத்தாவணங்கள், கர்ணபரம்பரைக் கதைகள் போன்றவற்றைக் கொண்டே ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். அரசர்களால் கட்டுவிக்கப்பட்ட கோவில்களுக்கும் தேவாரப் பாடல் பெற்ற திருத்தலங்களுக்கும் மேற்கூறிய ஆதாரங்கள் நிறைய இருக்கும். ஆயினும் மக்களால் ஸ்தாபிக்கப்பட்டுக் கட்டுவிக்கப்பட்ட பல ஆலயங்களுக்கு மேற்குறிப்பிட்டது போன்ற வரலாற்று ஆதாரங்கள் இல்லை. கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தைப் பொறுத்தவரை அமைந்துள்ள சூழலும், கர்ணபரம்பரைக் கதைகளும், பதிவு செய்யப்பட்ட எழுத்தாவணங்களும், இதற்கு முன் வெளியிடப்பட்ட வரலாற்றுக் குறிப்புக்களும் தான் ஆலய வரலாற்றை எழுதத்துணை நிற்கின்றன.

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம் அமைந்துள்ள சூழல் நீர்வளம், நிலவளம் நிரம்பப் பெற்றது. இப்பிரதேசம் 500 ஏக்கர் வரையான நிலப்பரப்பைக் கொண்டுள்ள வயல்களும் தோட்டங்களும் நிரம்பப் பெற்ற செழிப்பான இடமாகும். இதற்குக் காரணம் ஆலயத்திற்கு பின்புறமாக நந்தாவில் வயல் வெளியில் அமைந்திருந்த ஏழு குளங்களாகும். இவற்றுள் தூர்ந்தவை போக தற்போது இரண்டு குளங்கள் உள்ளன. மழைகாலங்களில் இப் பிரதேசம் கடல்போல் காட்சியளிக்கும்.

நந்தாவில் என்பது நந்தா + வில் எனப் பிரிக்கப்படலாம். நந்தா – வற்றாத, வில் - குளம் எனப்பொருள்படும். எனவே நந்தாவில் என்பது குண்டு வற்றாத குளம் என்ற பொருளில் வந்தது. அது குண்டு வற்றாத அம்பிகையின் அருளாகவும் உள்ளது நந்தாவில் பிரதேசத்தில் இடையிடையே கற்றிடல்களும், மணற்றிடல்களும் உள்ளன. திடலான இடங்களில் குடியிருந்த மக்கள் தாழ்வான பிரதேசங்களில் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டனர். தமக்கு மேலான ஒரு சக்தி தம்மை வழிநடத்தி, உணவளித்துக் குறைநீக்கிக் காக்கின்றது எனக் கருதினர். அதன் காரணமாக நந்தாவிலின் திடலான இடத்தில் சக்திக்கு ஓர் ஆலயம் அமைத்து வழிபடத் தொடங்கினர் என வரலாறு சான்று பகர்கிறது. அதே வேளை, இலங்கையில் கண்ணகிக்கு கோவில்களை அமைத்த காலத்தில் நந்தாவிலில் கண்ணகிக்கு சிலை வைக்கப்பட்டு கண்ணகி வழிபாடு ஆரம்பமானது என்பதற்கான கர்ணபரம்பரைக் கதைகளும் உள்ளன.

இந்தியாவில் சேரன் செங்குட்டுவன் என்ற அரசன் கண்ணகிக்குச் சிலை எடுத்து சிலப்பதிகார விழாவைக் கொண்டாடினான். அவ்விழாவில் கலந்து கொண்ட இலங்கை மன்னன் கஜபாகு, தானும் சந்தனக் கட்டையில் செதுக்குவிக்கப்பட்ட கண்ணகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மனின் சிலையையும், சிலம்பையும் எடுத்துக் கொண்டு கடல் மார்க்கமாக வந்து இலங்கையின் வடபாலுள்ள சம்பில் துறைமுகத்தில் (மாதகல், ஜம்புகோளப்பட்டினம்) இறங்கினான். அங்கிருந்து அச்சிலையை தரைமார்க்கமாகத் தென்பகுதிக்கு கொண்டு செல்லும் வழியில் பல்வேறு இடங்களில் தங்கியிருந்து சென்றான். அவ்வாறு அவன் தங்கிச் சென்ற இடங்களிலெல்லாம் பிற்காலத்தில் கண்ணகிக்கு சிலை வைத்து வணங்கப்பட்டது. அவ்வாறு உருவான ஆலயங்கள் ஐம்பதுக்கு மேற்பட்டவை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ளன. அவற்றுள் மாதகல் பாணாவெட்டிக் கண்ணகை அம்மன், களவோடை கண்ணகை அம்மன், மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன், வற்றாப்பளை கண்ணகை அம்மன் போன்ற ஆலயங்கள் சிலவாகும்.

**அம்மையின் அற்புதம்**

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணைச் சிவன் கோவிலென வழங்கும் வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் கோவிலை, ஸ்ரீ வைத்திலிங்கச் செட்டியார் ஸ்தாபித்தார். இவர் அக் கோயிலை கட்டுவதற்குக் கற்களை பல்வேறு இடங்களிலும் தேடிவந்தார். அவ்வாறு தேடி வந்த போது எமது ஆலயம் அமைந்துள்ள நந்தாவில் பகுதி கற்புலமாக அமைந்திருப்பதைக் கண்டு மகிழ்ந்தார். தனது வேலையாட்கள், சிற்பிகள் சகிதம் அங்கு தங்கியிருந்து கற்களைத் தோண்டி எடுக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார். ஒரு நாள் ஆலயப்பகுதியில் “ஒளிகண்டார், திரவியம் கண்டார்” அம்பிகையின் அருளை எண்ணி வியந்தார். அம்பிகையை வணங்கி அனுமதி பெற்றுத் தனது பணியைத் தொடர்ந்தார். இச்சம்பவத்தால் அம்பிகையின் புகழ் அயற்கிராமம் எங்கும் பரவியது. மக்கள் பெருந்தொகையில் வருகை தந்து அம்பாளைத் தரிசிக்கத் தொடங்கினர். சிவன் கோயில் கட்டடப் பணியை நிறைவு செய்த செட்டியார் தனது கற்றச்சர்களைக் கொண்டே அம்பாளுக்கு கற்கோவிலை அமைத்தார். இங்குள்ள வேளாண் பெருமக்களும், பிராமணக் குடும்பம் ஒன்றைக் குடியமர்த்தி அம்பாளுக்கு பூசைகள் ஒழுங்காக நடைபெறச் செய்து ஆலயத்தை சிறந்த முறையில் பராமரித்து வந்தார்கள்.

சிறிதாக இருந்த ஆலயத்தை கற்கோயிலாக கட்டி உதவிய செட்டியார் வாழ்ந்த காலம் 1790 வரையானதாகும். எனவே இக் கோவில் ஏறக்குறைய 230 ஆண்டுகளுக்கு முன்னரே கற்கோவிலாக கட்டப்பட்டிருக்க வேண்டும் இதனை உறுதி செய்வதாக 1822 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் கச்சேரி கோவிற் பதிவுகளிலும் இக்கோவில் 1784 ஆம் ஆண்டிலேயே கல்லால் கட்டப்பட்டிருந்ததாகவும் தினமும் 2 நேரப் பூசைகள் நடைபெற்றதாகவும் வருடந்தோறும் வரும் ஜூன் மாதத்தில் 10 நாட்கள் திருவிழா நடைபெற்றதாகவும் உள்ளது. மேலும் 1852ம் ஆண்டு கார்த்திகை மாதம் 01 ஆம் திகதி வண்ணார்பண்ணை நொத்தாரிசு கந்தர் பரமானந்தரால் புத்தூர் காசிநாதர் பெண் தெய்வானைக்கு எழுதிய சீதன உறுதிப்படி வடக்கெல்லை கண்ணகை அம்மன் தேரோடும் வீதி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை நோக்கும் போது 170 ஆண்டுகளுக்கு முன்னாலே இக்கோவிலில் திருவிழாக்கள் பூசைகள் சிறப்புற நடந்துள்ளன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதும் தேரோடியது என்பதும் அறிய முடிவதோடு தேர்த்திருவிழா பெருவிழாவாக கொண்டாடப்பட்டிருக்கிறது என்பதும் தெளிவாகின்றது.

## கண்ணகை அம்மன் மனோன்மணி அம்மனான கதை

நாவலர் காலத்தில் கண்ணகை வழிபாடு தொடர்பாக எழுந்த கண்டனப் பிரசங்கங்களின் விளைவாக அவரது காலத்திலும் அவருக்கு பிற்பட்ட காலத்திலும் பல கண்ணகை அம்மன் ஆலயங்கள் இராஜராஜேஸ்வரி, மீனாட்சி, புவனேஸ்வரி, மனோன்மணி போன்ற ஆலயங்களாக மாற்றம் பெற்றன. அவ்வகையில் கவரப்பட்ட கொக்குவில் கிராமத்தின் சைவப் பெருங்குடி மக்களும் கண்ணகை அம்மனுக்குப் பதிலாக சாந்த மூர்த்தமான அம்மன் சிலை ஒன்றை பிரதிஷ்டை செய்ய வேண்டும் என விரும்பினார்கள். அதன் பயனாக 1920, 1921 காலப்பகுதிகளில் "இராஜராஜேஸ்வரி விக்கிரகத்தை வைப்பதற்கு சிலர் முயற்சி செய்தனர். இதனால் கருத்து வேற்றுமை தோன்றவே ஊர் பெரியோர்களும், சைவப் பெரியோர்களும் ஒன்றுகூடிச் சாந்தசொரூபியான மனோன்மணி அம்மனைப் பிரதிஷ்டை செய்ய வேண்டும் எனத் தீர்மானித்தார்கள். 1922 ஆம் ஆண்டில் மனோன்மணி அம்பாள் சிலை இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்டுப் பிரதிஷ்டை செய்யப்பட்டு மகாகும்பாபிஷேகமும் மிகச் சிறப்பாக நடாத்தப்பட்டது. அன்று முதல் இவ்வாலயம் **"கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அமபாள் ஆலயம்"** என்று பெயர் கொண்டு அழைக்கப்பட்டு வருகின்றது. அக்காலத்தில் இப்பகுதியில் வைத்தியராக இருந்த திருவாளர் அ.சின்னத்துரை அவர்கள் மனோன்மணி அம்பாள் சிலையை இந்தியாவில் இருந்து கொண்டு வந்து இவ்வாலயத்தில் பிரதிஷ்டை செய்வதில் பெரும்பங்காற்றியமை குறிப்பிடத்தக்கது.

1930 ஆம் ஆண்டளவில் ஏற்கனவே இருந்த பரிவார மூர்த்தி ஆலயமான பிள்ளையார் ஆலயத்துடன் முருகன், வைரவருக்கும் ஆலயங்கள் நிர்மாணிக்கப்பட்டன. இக்காலத்தில் ஆலயத்தில் சைவப்பிரசங்கங்கள் நிகழ்த்தப்பட்டு ஊரிலே நல்ல சைவப்பாரம்பரியமும் பேணி வளர்க்கப்பட்டது.

ஆலயத்தை மேலும் எழுச்சி பெற வைப்பதற்கும் நிர்வகிப்பதற்குமென 1938 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் திகதி ஒன்று கூடிய பெரியோர்கள் ஒரு பொது நிர்வாக அமைப்பினை உருவாக்கினார்கள். இதன் தலைவராக அப்பொழுது கொக்குவில் கிராமச் சங்கத் தலைவராக இருந்த திரு.சி.முத்துவேலு JP அவர்களும் செயலாளராக திரு.இ.சீனிவாசகம் அவர்களும் தனாதிகாரியாக திரு த.பொன்னம்பலம் அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். இச்சபையால் ஆலயம் பரிபாலனம் செய்யப்பட்டு வந்த போதும் ஆலயத்தை நிர்வகிப்பதற்குப் பிரமாணங்களும் கோவிற்பூசகரை வழிப்படுத்தக்கூடிய விதிகளும் அவசியம் என்பது உணரப்பட்டது. 1943 ஆம் ஆண்டிலே வைத்தியர் அ.சின்னத்துரை, ஆசிரியர் அருணாச்சலம், திருவாளர் ஆ.தம்பிமுத்து, திருவாளர் ஆ.கந்தையா, திருவாளர் நி.வ.ஜயாத்துரை, திருவாளர் அப்பாபிள்ளை போன்றவர்களும் அக்காலத்தில் உடையாராக இருந்த திரு சிதம்பரப்பிள்ளை அவர்களும் இணைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டத்திற்கான அழைப்பைச் சைவபரிபாலன சபையின் இந்துசாதனப் பத்திரிகை மூலமும், முரசறைந்தும் ஊரவர்களுக்கு விடுவித்தனர். இதன் பயனாக 200 இற்கு மேற்பட்ட ஆலய அடியார்கள் ஒன்று கூடினர். இக்கூட்டத்தில் ஆலயத்தைப் பரிபாலனம் செய்ய ஏற்கனவே இருந்த சி.முத்துவேலு, JP அவர்களுடன் மலாயன் பென்சனியர் சி.நவரத்தினம், சி.அருளம்பலம் ஆகியோரைக் கொண்ட தர்மகர்த்தாக்களுடன் 15 பேர் கொண்ட பரிபாலனசபை உருவாக்கப்பட்டது. இவை 1943 ஆம் ஆண்டு பிரசித்த நொத்தாரிசு திரு.மு.மதியாபரணம் அவர்களால் முடிக்கப்பெற்ற 194 ஆம் இலக்க அதிகாரப் பத்திரத்தால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இக்காலப்பகுதியில் ஆலய அபிவிருத்திப் பணிகளுக்கு நிதி தேவைப்பட்ட போது எமது பிரதேசத்தில் திறம்பட இயங்கிக் கொண்டிருந்த பொற்பதி ஐக்கிய பண்டகசாலையின் முகாமையாளராக இருந்த திரு S.சபாரத்தினம் அவர்கள் பண்டகசாலை அங்கத்தவர்களின் முழு ஆதரவினைப் பெற்று பங்குப்பணத்தின் ஆதாயப் பணத்தை ஆலயத்திற்கு வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

1953ஆம் ஆண்டளவில் நீராவியடியைச் சேர்ந்த திரு.மு.பொன்னையா (சாமியார்) அவர்கள் எடுத்த முயற்சியின் பயனாக ஊர் மக்களினதும் மனோன்மணி சனசமூக இளைஞர்களினதும் புகையிரதப்பகுதி ஊழியர்களினதும் பங்களிப்புடன் அம்பாளுக்கு தீர்த்தக் கேணி ஆலயத்திற்குத் தெற்குப் புறத்தில் வெட்டப்பட்டதுடன் ஆலயத்துடன் இணைந்ததாக தெற்குப் பக்கத்தில் ஒரு பூந்தோட்டமும், செங்கழுநீர்த்தொட்டியும் அமைக்கப்பட்டன.

ஆலயத்தில் காலத்திற்குக் காலம் தொண்டுகள் புரிந்தவர்கள் ஏராளம் அவர்கள் எல்லோரையும் இங்கு குறிப்பிட முடியா விட்டாலும் இரண்டு பெண் அடியவர்களை இங்கு குறிப்பிட்டே ஆக வேண்டும். அவர்களில் ஒருவர் திருமதி S. இராசமணி. இவர் ஆலய வீதிகளில் உழவாரத்திருப்பணிகளை மேற்கொண்டு திருவீதியை அமைக்கும் பணியை முதன் முதலில் மேற்கொண்டவர். மற்றயவர் திருமதி க. யோகம்மா. அவர் நித்தமும் ஆலயத்திற்கு வருகை தந்து பூவும் பூ மாலையும் வழங்கி அம்பாளை புகழ்ந்து பாடி சரியை வழித் தொண்டாற்றியவர்.

பூந்தோட்டம் அமைத்துப் பராமரிப்பதில் காலத்திற்குக் காலம் பலரும் ஈடுபட்டு வந்துள்ளனர். 1969, 1972 காலப்பகுதியில் மனோன்மணி சனசமூக நிலைய அங்கத்தவர்களான கா. சிவகுமாரன், இ.ஸ்ரீரங்கநாதன், தா.ஸ்ரீரவீந்திரா, ந.விமல்ராஜ் போன்றோர் அப்பகுதியில் இருந்த அரச மரத்தைத் தறித்து நிலத்தில் இருந்த கற்களை கிழறி எடுத்து பூந்தோட்டத்தை விஸ்தரித்ததுடன் ஆலயத்திற்கு பின்புறத்தே இருந்த கிணற்றைத் துப்புரவு செய்து நீர்பாய்ச்சும் வசதியை ஏற்படுத்தியதுடன் அதற்குப் பாதுகாப்பு மதிலை திருவாளர் இ.இராசேந்திரத்தின் உதவியுடன் அமைத்துப் பராமரித்தனர். அதனைத் தொடர்ந்து சில காலம் சி.இராசையா அவர்களும் அதன் பின் திருவாளர் சி.நமசிவாயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களும் பூந்தோட்டத்தைப் பராமரித்து ஆலயத்திற்குத் தேவையான பூக்களைப் பெற உதவினர். பின்பு சில காலம் கைவிடப்பட்டிருந்தது. 2019ஆம் ஆண்டு முதல் திருவாளர் தி.பாலகுமாரன் அவர்கள் தனது சொந்தச் செலவில் தீர்த்தக்கேணிக்குத் தெற்குப்பக்கமாக பூந்தோட்டம் ஒன்றை அமைத்து அதனைச் சிறந்த முறையில் பராமரித்து வருகின்றார்.

1950-1960 காலகட்டத்தில் நந்தாவில் அம்மன் கோவில் திருவிழாவிற்கு யாழ் நகரின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மக்கள் வந்து கூடுவர். ஆலய வீதிகளில் மாட மாளிகைகள் போன்ற வடிவத்தில் சிகரங்கள் கட்டப்பட்டு அலங்கரிக்கப்படும். வாண வேடிக்கைகள், சின்ன மேளம், தவில் நாதஸ்வரக் கச்சேரிகள் போன்றவை விடிய விடிய இடம்பெறுவதுண்டு. ஆயினும் ஆலயத்தில் இவ்வாறான கேளிக்கைகள் நடாத்துவது ஆலயத்தின் ஒழுக்கநெறிக்கு ஒவ்வாது என்பதாலும் ஆலய அடியவர்களின் பக்திக்கும் மன ஒருமைப்பாட்டிற்கும் இடையூறினை உருவாக்கும் என்பதாலும் மனோன்மணி சனசமூக நிலைய இளைஞர்களும் பெரியோர்களும் கிராம வாசிகளும் ஒன்றிணைந்து இவை தொடர்ந்தும் இடம்பெறுவதை நிறுத்துவதற்கு முன்னின்று உழைத்ததுடன் அதில் வெற்றியும் கண்டார்கள்.

1964ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் டாக்டர் சி.இராசா அவர்களைத் தலைவராகவும், மலாயன் பென்சனியர் பொ.கனகரத்தினத்தை தனாதிகாரியாகவும் கா.பொ.செல்லையா அவர்களைச் செயலாளராகவும் கொண்ட தேர்த்திருப்பணிச்சபை ஒன்று உருவாக்கப்பட்டது. இச்சபை உருவாக்கத்தில் திரு.பொ.பரராஜசிங்கம், திரு.அ.நடராஜப்பெருாள், திரு.பொ. பத்மநாதன், திரு.சி.கந்தையா, திரு இரத்தினம் ஆசிரியர் ஆகியோரது பங்கு அளப்பரியது. இதன் பேறாகத் திருநெல்வேலியைச் சேர்ந்த பிரபல சிற்பாசாரியார்களான தம்பித்துரை சகோதரர்களைக் கொண்டு பல ஆயிரம் ரூபா செலவில் சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய அழகிய சிற்ப தேர் உருவாக்கப்பட்டு 1966 ஆம் ஆண்டிலே வெள்ளோட்டம் இடம்பெற்றது.

1965 ஆம் ஆண்டு அப்பையா அன்கோ பங்காளராகிய அமரர் ஆ.அப்பையா, அமரர் பொ.காசிப்பிள்ளை ஆகியோரின் பங்களிப்பினால் திருக்கோயில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு 28.01.1966 இல் மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற மண்டலாபிஷேக காலத்தில் தினமும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் சுவாமிநாதத் தம்பிரான் (மணிஐயர்) அவர்களினால் இரவு நேரங்களில் சைவப்பிரசங்கங்கள் நிகழ்த்தப்பட்டன. இப்பிரசங்கங்களைக் கேட்பதற்கு அயலூர்களிலிருந்து பெருந்தொகையான மக்கள் வந்து கூடுவர்.

தமிழர் வாழ்விலே காணப்பட்ட அன்னதானம் செய்யும் மரபு எமது ஆலயத்திலும் தொன்றுதொட்டு நிகழ்ந்து வந்துள்ளது. மகோற்சவ காலத்தில் பிராயச்சித்த அபிஷேகம் நடைபெறும் தினம், ஆலயத்தில் மகேஸ்வர பூசைஇடம்பெறுவது வழமை. 1950களில் அமரர் S. வல்லிபுரம் என்பவரால் செய்யப்பட்டு வந்த அன்னதானம் காலப்போக்கில் பிராயச்சித்த அபிஷேகத்தை செய்யும் செல்லையா குடும்பத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வந்தது. அக்காலங்களில் அன்னதானம் கொடுப்பதற்கு தனியான இடவசதி இல்லாமையினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிமண்டபத்தில் சேலையினால் மறைப்புக்கட்டி அன்னதானம் நடைபெற்று வந்தது. ஆயினும் சித்திரத்தேர் செய்யப்பட்ட 1966ஆம் ஆண்டு முதல் திருவாளர் M.S மணியம், திருவாளர் சி. தாமோதரம்பிள்ளை, திருவாளர் செ. இராசையா, திருவாளர், சி. இராசையா ஆகியோரைக் கொண்ட அன்னதான சபை ஒன்று இயங்கி வந்தது. இச்சபை காலப்போக்கில் ஆலயத்தோடு இணைந்ததாக ஆலயத்திற்கு தெற்குப்பக்கமாக ஒரு அன்னதான மண்டபத்தை அமைத்து அதிலே அன்னதானத்தை நடாத்திவந்தது. இச்சபை 63 நாயன்மார்களின் குருபூசைகளையும் சிறப்பாக நடாத்தி வந்தது.

1960ஆம் ஆண்டு இச்சபை மண்டபத்திலே சமய வளர்ச்சிக்காக திருவாளர் வ.ம. நடராஜா அவர்களின் தலைமையில் இந்துசமய அபிவிருத்தி சங்கம் என்ற பெயரில் சபை ஒன்று ஆரம்பிக்கப்பட்டு சமய அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்து வந்தது. திரு.வ.ம.நடராஜா அவர்களைத் தொடர்ந்து இச்சபையின் தலைவராக இராமகிருஷ்ண பாடசாலை அதிபராக இருந்த திரு க.சுந்தரம் அவர்களும், அவரைத்தொடர்ந்து திரு. க. தர்மலிங்கம் அவர்களும் தலைமையேற்று இச்சங்கத்தை வழிநடத்தி வந்தார்கள். இச்சபை சிறுவர்களுக்கான பண்ணிசை வகுப்புக்களை நடாத்தி வந்ததுடன் ஆண்டுதோறும் சமய அறிவுப்போட்டி, பண்ணிசைப்போட்டி போன்றவற்றையும் ஆலயத்தின் திருவெம்பா காலத்தில் திருவாதவூர் அடிகள் புராணப்படிப்பினையும், கந்தசஷ்டி காலத்தில் கந்தபுராண படிப்பையும் வெகுசிறப்பாக மேற்கொண்டு வந்தனர். தற்பொழுது அன்னதானம் கொடுக்கும் நிகழ்வு ஆலய உற்சவகாலங்களிலும் ஆடிப்பூரத்திருவிழா தினத்திலும் மிகச்சிறப்பாக நடாத்தப்பட்டு வருகிறது. இதற்கு வேண்டிய நிதியை திருவிழா உபயகாரர்களும், பொதுமக்களும், வெளிநாடுகளில் வாழ்கின்ற அடியவர்களும் வழங்கி வருகின்றனர்.

1967 – 1978 காலப்பகுதியில் ஆலயத்தின் வடக்கு, தெற்கு மற்றும் மேற்குப் பக்கக் கொட்டகைகள் ஓட்டினால் வேயப்பட்டதுடன் நிலமும் சீமெந்திடப்பட்டது. பூந்தோட்டத்தைச் சுற்றி சுவர் கட்டப்பட்டு கட்டாக்காலி விலங்குகளில் இருந்து பூந்தோட்டம் பாதுகாக்கப்பட்டது. 1948ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட தர்மகர்த்தாவும் பரிபாலனசபையுமே நீண்டகாலமாக ஆலயத்தை பரிபாலனம் செய்து வந்தது. இப்பரிபாலன சபையில் பலர் அமரத்துவம் அடைந்த போதும் வெற்றிடங்கள் நிரப்பப்படாமையினால் இதன் செயற்பாடுகள் திருப்தியற்றுக் காணப்பட்டன. 1978ஆம் ஆண்டு இச்சபையில் தர்மகர்த்தா திரு.சி.அருளம்பலத்துடன் திரு.E.S.சின்னத்துரை, திரு.வ.ம நடராஜா, ஆசிரியர் திரு.S.சோமசுந்தரம், வழக்கறிஞர் திரு.ப.ஆறுமுகம் ஆகியோர் மட்டும் எஞ்சியிருந்தனர். இந்நிலையில் பரிபாலன நடவடிக்கைகளைப் பலப்படுத்தும் நோக்கத்துடன் எம்.எஸ்.மணியம், செ.இராசையா, பொ.பரராசசிங்கம், இ.ஸ்ரீசண்முகவரதன் ஆகியோரின் முயற்சியின் பயனாக ஏற்கனவே இருந்த தர்மகர்த்தா சி.அருளம்பலத்துடன் செ.ஆறுமுகம், க.இராமநாதன் ஆகியோர் தர்மகர்த்தாக்களாக நியமிக்கப்பட்டதுடன் 15 உறுப்பினர்களைக் கொண்ட பரிபாலனசபை ஒன்றும் உருவாக்கப்பட்டது. இப் பரிபாலன சபையின் தலைவராக ஓய்வுபெற்ற தபாலதிபர் திரு வ.ம நடராஜா அவர்களும் செயலாளராக திரு சோ. சிவபாதசுந்தரம் அவர்களும் பொருளாளராக திரு.மு.சுப்பிரமணியம் அவர்களும் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவர் திரு.வ.ம நடராஜா அவர்களின் மறைவின் பின் இராமகிருஸ்ண பாடசாலை அதிபர் திரு.இ.கந்தையா அவர்கள் தலைவராக நியமிக்கப்பட்டார். இவர்களின் முயற்சியால் ஆலயத்திற்கு ஒரு இராஜகோபுரம் இல்லையே என்ற குறையை நீக்க 19.01.1979ஆம் ஆண்டு வெள்ளிக்கிழமை சுபவேளையில் இராஜகோபுரமும் அதனோடு இணைந்ததாக மணி மண்டபமும் அமைப்பதற்கு கால்கோளிடப்பட்டது. கோபுரவேலைகள் தென்னிந்திய சிற்பாசாரியார்களான தஞ்சாவூர் பன்னீர்ச்செல்வம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இக்கோபுரம் 15 அடி அகலமும் 32 அடி நீளமும் கொண்ட தளத்தில் 57 அடி உயரம் உடையதாக ஐந்து தளங்களும் 5 கலசங்களும் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. கோபுரத்தில் அழகிய சிற்பவடிவங்கள் புராணக்கதைகளை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளன. மணிமண்டபம் சீமெந்தினால் அழகிய சிற்பவேலைப்பாடுகளுடன் கூடியதாக அமைக்கப்பட்டுள்ளதுடன் கோபுரத்தின் இருபக்கங்களிலும் காண்டாமணிக் கோபுரங்களும் அழகுற அமைக்கப்பட்டு 07.02.1982 இல் இராஜ கோபுர கும்பாபிஷேகம் இணுவில் சிவஸ்ரீ இராமநாத குருக்களால் நடாத்தப்பட்டது. வடக்குப் பக்கத்திலுள்ள காண்டாமணிக் கோபுரம் 1968 ஆம் ஆண்டிலும் தெற்குப் பக்கத்திலுள்ள காண்டாமணிக் கோபுரத்திலுள்ள காண்டாமணி 1981 ஆம் ஆண்டிலும் அமைக்கப்பட்டன. இவற்றை அமைப்பதற்கான நிதியை முறையே திரு.மயில்வாகனம் அவர்களும் திரு.சி.தாமோதரம்பிள்ளை அவர்களும் வழங்கியிருந்தனர்.

இக்காலகட்டத்தில் இறப்பின் காரணமாக ஏற்பட்ட வெற்றிடங்கள் அவ்வப்போது நிரப்பப்பட்டன. தனாதிகாரியாக இருந்த மு.சுப்பிரமணியத்தின் இடத்திற்கு திரு.பொ. கனகரத்தினம் அவர்களும் அவரின் மறைவிற்கு பின் திரு.இ.நடராஜா அவர்களும் நியமிக்கப்பட்டனர். செயலாளராக இருந்த திரு.சோ.சிவபாதசுந்தரம் அவர்களின் மறைவிற்கு பின் அவரது இடத்திற்கு திரு.தா.முத்தையா அவர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

16 வருடங்கள் கழிந்த நிலையில் மீண்டும் கும்பாபிஷேகம் செய்ய வேண்டியதை உணர்ந்த சபையினர் பாலஸ்தாபனம் செய்து புனருத்தாரணப் பணிகளை அராலியூர் திரு.சி.தம்பிராசா சிற்பாசாரியார் தலைமையிலான குழுவினரைக் கொண்டு செய்வித்தனர். விநாயகர், சுப்பிரமணியர், வைரவர் சந்நிதானங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டன. இவற்றைப் புனரமைப்பதற்கு முறையே திரு சின்னத்துரை சரவணபவானும், திரு சுப்பையா தியாகராஜாவும், திரு கந்தையா சிவானந்தனும் உதவியுள்ளார்கள். புனருத்தாரண வேலைகள் நிறைவடைந்ததை தொடர்ந்து 03.09.1982 இல் ஜினோர்த்த அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடாத்தப்பட்டதுடன் அதனை முன்னிட்டு 17.10.1982 இல் கும்பாபிஷேக மலரொன்றும் வெளியிடப்பட்டது.

1985 ஆம் ஆண்டில் அம்பாள் விக்கிரகம் சேதமாக்கப்பட்டமையால் புதிய விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. தம்பப்பிள்ளையார், சண்டேஸ்வரி கோவில், நவக்கிரக மண்டபம் ஆகியன அமைக்கப்பட்டதுடன் விக்கிரகங்களும் பிரதிஷ்டை செய்யப்பட்டன. இவற்றை அமைப்பதற்கான நிதியுதவியை முறையே திரு.பொ.பரராஜசிங்கம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.எஸ்.பரமநாதன், திரு.எஸ்.இராசையா ஆகியோர் வழங்கியிருந்தனர். கும்பாபிஷேகத்தினை 19.03.1985ஆம் திகதியன்று நயினை சிவஸ்ரீ பரமேஸ்வரக் குருக்கள் அவர்கள் நடத்தி வைத்தார். அன்று முதல் புரட்டாதிச் சனிக்கிழமைகளில் விஷேட அபிஷேகங்களும் வழிபாடுகளும் நடைபெற்று வருகின்றன.

1987 இல் இந்திய இராணுவ நடவடிக்கை காரணமாக ஆலயத்தின் கூரை, கோபுரம் முதலியவற்றில் சேதங்கள் ஏற்பட்டன. இவை 1988,1989 காலப்பகுதியில் சீர்செய்யப்பட்டன. 1987 ஆம் ஆண்டில் சீர்திருத்தக் கருத்துக்களைக் கொண்ட வழிபடுவோர் சிலர் ஆலயத்தை நிர்வகிப்பதற்கு அமைப்புத்திட்ட விதிகள் (யாப்பு) அவசியமானது எனவும் அதனடிப்படையிலேயே ஆலயம் நிர்வகிக்கப்பட வேண்டும் எனவும் கோரி வழிபடுவோர் சங்கம் ஒன்றினை ஆரம்பித்தனர். இதன் தலைவராக சி.பத்மநாதன் அவர்களும் செயலாளராக திரு.இ.இராசேந்திரம் அவர்களும் தனாதிகாரியாக திரு.ச.பரந்தாமன் அவர்களும் பணிபுரிந்தார்கள்.

இக்காலத்தில் ஆலய வளர்ச்சியில் அக்கறை கொண்ட திரு. சி.குகனேந்திரன்(சின்னமணி), திரு.செ.செல்வராஜா, திரு.நா.பேரின்பநாயகம், திரு.த.பிரேமராஜன், திரு.இ.ரஞ்சன் ஆகியோர் எடுத்த முயற்சியினால் அனைவரது ஒத்துழைப்புடனும் வழிபடுவோர் சபை, பரிபாலனசபை உறுப்பினர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து 10.03.1991 இல் ஆலய முன்றலில் ஒரு பொதுக்கூட்டத்தைக் கூடி இடைக்காலநிர்வாக சபை ஒன்றினைத் தெரிவு செய்தனர்.

இதே காலத்தில் சில விசமிகளால் அம்பாள் சிலை மீண்டும் சேதமாக்கப்பட்டது. உடனடியாகச் செயற்பட்ட சபையினர் ஆலய பிரதமகுருவான சிவஸ்ரீ ஜெயந்திநாதக் குருக்களை இந்தியாவிற்கு அனுப்பி மனோன்மணி அம்பாள் சிலை ஒன்றைப் பெற்று பிரதிஷ்டை செய்ததுடன் திருவாளர் க.இராமநாதன் அவர்களுடைய நிதி உதியைப் பெற்று வசந்த மண்டப விமானத்தை சிற்ப வேலைப்பாடுகளுடன் புனரமைத்ததுடன் திருவாளர் தாமோதம் பிள்ளை அவர்களின் நிதி உதவியைப் பெற்று மூலஸ்தான விமானத்தை திரிதள அமைப்பைக் கொண்டதாக நிர்மாணித்து மகாகும்பாபிஷேகத்தை ஆலய குருக்களான சிவஸ்ரீ ஜெயந்தி நாத குருக்களைக் கொண்டு 27.03.1991 இல் சகலரது ஒத்துழைப்புடனும் மிகச்சிறப்பாக நடத்தினார்கள்.

இடைக்கால சபையினர் ஆலயத்திற்கென விரிவான அமைப்புத்திட்ட விதிகளைத் தயாரித்து அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டனர். இதனடிப்படையில் முதலாவது வழிபடுவோர் மகாசபைப் பொதுக்கூட்டம் 13.12.1992 இல் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு வழிபடுவோர் 263 பேர் சமுகம் கொடுத்திருந்தனர். இதில் ஆலய தர்மகர்த்தாக்களாக கா.சோ.நடராசா, க.தர்மலிங்கம், செ.இராசையா ஆகியோரும் 15 பேர் கொண்ட பரிபாலனசபையும் தெரிவுசெய்யப்பட்டது. பரிபாலனசபையின் தலைவராக அமரர்.க.இராமநாதன் அவர்களும், செயலாளராக திரு.சி.ஜெயபாலசிங்கம் அவர்களும், தனாதிகாரியாக திரு.ச.பரந்தாமன் அவர்களும் தெரிவு செய்யப்பட்டார்கள். புதிய யாப்பின்படி ஆலயத்தை நிர்வகிக்கும் அதிகாரம் பரிபாலன சபைக்கே வழங்கப்பட்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1993 ஆம் ஆண்டிலே அம்பாளுக்கு ஒரு கைலாசவாகனம் நல்ல சிற்ப வேலைப்பாடுகளுடன் 27 அடி உயரம் கொண்டதாக திருநெல்வேலியைச் சேர்ந்த சிற்பாசாரியார் சீவரத்தினத்தால் உருவாக்கப்பட்டு 19-06-1994 ஆம் ஆண்டிலே வெள்ளோட்ட விழாவும் கொண்டாடப்பட்டது. அன்று முதல் ஏழாம் நாள் திருவிழாவாகக் கைலாசவாகனத் திருவிழா நடைபெற்றுவருகின்றது,

புதிய அமைப்புத்திட்ட விதிகளுக்கு அமைவாக இரண்டாவது வழிபடுவோர் மகாசபைக் கூட்டம் 28.05.1995 இல் நடைபெற்று புதிய பரிபாலனசபையும் தெரிவு செய்யப்பட்டது. தர்மகர்த்தாக்களாக திரு.க.சோ.நடராஜா, திருவாளர் செ.இராசையா, திருவாளர்.சு.சிங்காரவேலு ஆகியோரும் 15 பேர் கொண்ட பரிபாலனசபையும் அதன் தலைவராக திரு.க.இராமநாதனும் செயலாளராக திரு.சி.ஜெயபாலசிங்கமும் பொருளாளராக திரு.செ.இராசலிங்கமும் தெரிவு செய்யப்பட்டனர். கடந்த காலங்களில் தர்மகர்த்தாக்களுக்கு ஆலோசனைகளை வழங்கும் சயையாகவே பரிபாலனசபை இருந்தது. ஆயினும் புதிய யாப்பின் படி நிர்வாகம் சம்மந்தமான முழு அதிகாரமும் பரிபாலனசபைக்கே வழங்கப்பட்டுள்ளது.

இக்காலத்தில் நாட்டில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கை காரணமாக யாழ்ப்பாணத்திலிருந்து மக்கள் சாவகச்சேரி, வன்னி போன்ற இடங்களிற்கு இடம்பெயர்ந்தனர். இதனால் 1995.10.30 – 1996.04.26 வரையான காலப்பகுதியில் ஆலயத்தில் பூசைகள் எதுவும் நடைபெறவில்லை. இடம்பெயர்ந்தவர்கள் ஏப்ரல் மாதத்தில் திரும்பிவர அனுமதிக்கப்பட்டனர். ஆயினும் பரிபாலன சபையின் தலைவர், செயலாளர், பொருளாளரால் உடனடியாக வருகை தரமுடியவில்லை. அந்நேரத்தில் வருகை தந்தவர்களில் உபதலைவர்களான திரு.து.வைத்திலிங்கம், திரு.சி.மாதவகுமாரன் தர்மகர்த்தா திரு.செ.இராசையா, திரு.நா.பேரின்பநாயகம் ஆகியோர் இணைந்து நித்திய நைமித்திய பூசைகள் நடைபெற வழிவகுத்தனர். அதுவரை காலமும் ஆலயத்தில் பூசைகளை செய்து வந்த சிவஸ்ரீ ஜெயந்திநாதக் குருக்கள் மீண்டும் ஊருக்குத் திரும்பி வராதமையினால் கோண்டாவிலைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ வரதராஜசர்மாவைக் கொண்டு பூசைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் 1996 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மகோற்சவம், இலட்சார்ச்சனை போன்றவை வழமை போல நடந்தேறியது. சிவஸ்ரீ ஜெயந்திநாதக்குருக்கள் இவ் ஆலயத்தில் நீண்டகாலமாகப் பூசை செய்து வந்ததுடன் ஆலய வளர்ச்சிக்கும் பூரண ஒத்துழைப்பை வழங்கி வந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

1997 தை மாதம் 18 ஆந் திகதி முதல் புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த சிவஸ்ரீ சபாரத்தினக்குருக்கள் சந்தனக்குருக்கள் வருடாந்த ஒப்பந்த அடிப்படையில் ஆலயத்தில் உள்ள குடிமனையில் தங்கியிருந்து நித்திய, நைமித்திய பூசைகளை மேற்கொள்வதற்கு நியமிக்கப்பட்டார். இக்காலப்பகுதியிலேயே அர்ச்சனை ரிக்கற்றுக்கள், கொடுப்பனவு வவுச்சர்கள், நித்திய நைமித்திய பூசைகளுக்கான பொருட்கள் வழங்கும் ஏற்பாடுகள் முதலியன அறிமுகப்படுத்தப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1995-1999 காலப்பகுதியில் பலவருடங்களாக வர்ணம் பூசப்படாத நிலையிலிருந்த இராஜகோபுரம், மணிமண்டபம் முதலியவற்றுக்கு வர்ணம் பூசப்பட்டதுடன் ஸ்நபன மண்டபம், தெற்குப்புற உள்வீதி போன்றவற்றின் ஓட்டுக்கூரைகள் அகற்றப்பட்டு ரூபா 40 லட்சம் செலவில் சீமெந்தினால் வில் வடிவமான கூரை அமைக்கப்பட்டது.

2000 – 2001 காலப்பகுதியில் வசந்தமண்டபம், சுற்றுப்புற பரிவார மூர்த்தி கோவில்களில் ஒன்றான முருகப்பெருமான் கோவில், நவக்கிரக மண்டபம் ஆகியவற்றின் இருப்பிட அமைப்பில் காணப்பட்ட அளவுப்பிரமாண வேறுபாடுகள் சீர்செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடாத்தப்பட்டது. அம்பாள் அடியார்களின் வேண்டுகோளுக்கிணங்க திருமண மண்டபமொன்று "மனோன்மணி அம்பாள் திருமண மண்டபம்" என்ற பெயரில் அமைக்கப்பட்டு 28.01.2001 இல் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளின் ஆசியுடன் திறந்து வைக்கப்பட்டது.

இச்சந்தர்ப்பத்தில் ஏற்கனவே இருந்த பரிபாலனசபையின் ஆயுட்காலம் நிறைவுபெறவே மூன்றாவது வழிபடுவோர் மகாசபைக் கூட்டம் 08.07.2001 இல் கூட்டப்பட்டு புதிய பரிபாலனசபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இதில் தர்மகர்த்தாக்களாக ஏற்கெனவே இருந்த செ.இராசையாவுடன் சின்னத்தம்பி இராசையாவும், சி. கந்தையாவும், தர்மகர்த்தாக்களாகவும் 15 பேரைக்கொண்ட பரிபாலன சபையில் தலைவர், செயலாளர், தனாதிகாரியாக முறையே திரு.க.இராமநாதன், திரு.சி.ஜெயபாலசிங்கம், திரு. தி.பாலகுமாரன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்கள் எடுத்த முயற்சியின் பயனாக பரிவாரமூர்த்தி கோவில்களில் ஒன்றான பிள்ளையார் ஆலயம் பிரமாணத்திற்கமைவாக புனருத்தாரணம் செய்யப்பட்டதுடன் 11.06.2003 இல் குடமுழுக்கு பெருஞ்சாந்தியும் செய்யப்பட்டது. இதுவரை ஆலயத்திற்கு ஒரு மஞ்சம் இல்லையே என்ற குறையை நீக்குமுகமாக மூன்றாம் திருவிழா உபயகாரர்களான திரு.பொ.பரராசசிங்கம் குடும்பத்தினர். திரு.இரத்தினம் குடும்பத்தினர் முன்வந்து மஞ்சமொன்றை அமைத்து உதவினர். இதனால் 25 அடி உயரமும் சித்திரவேலைப்பாடுகளும் கொண்ட மஞ்சம் பல லட்சம் ரூபா செலவில் உருவாக்கப்பட்டு 2003 ஆம் ஆண்டில் வெள்ளோட்டம் நடைபெற்றது. தற்போது மூன்றாம் திருவிழாவாக மஞ்சத்திருவிழா நடைபெற்று வருகின்றது. இக்காலத்தில் தீர்த்தக்கேணியின் புனிதத்தன்மையைப் பேணுவதற்காக கேணியைச் சுற்றி கற்சுவர் அமைக்கப்பட்டதுடன் தெற்குப் புறத்தே அம்பாள், விநாயகர் முருகப் பெருமான் சகிதம் வைக்கப்பட்டுத் தீர்த்தம் ஆடுவதற்கு வசதியாக அழகிய தீர்த்தக் கொட்டகை ஒன்றும் திரு.சி.அருளம்பலம் குடும்பத்தினரின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டது. பரிபாலனசபையின் தலைவராக இருந்த திரு.க.இராமநாதன் அவர்கள் 2006 ஆம் ஆண்டில் அமரத்துவம் அடைந்ததைத் தொடர்ந்து அதுவரை உப தலைவராக இருந்த திரு.சி.மாதவகுமாரன் அவர்கள் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

1991 ஆம் ஆண்டின் பின் மீண்டும் மகா கும்பாபிஷேகம் செய்ய வேண்டும் என்பதை உணர்ந்த பரிபாலனசபையினர் 21.02.2008 அன்று பாலஸ்தாபனம் செய்து மூலஸ்தானம், பரிவாரக்கோவில்கள், ஸ்தூபி, வசந்தமண்டபத்தின் விமானம் போன்றவற்றில் திருத்தங்களை மேற்கொண்டனர். தெற்குப்புற சபாமண்டபம் விதிமுறைக்கேற்ப மாற்றியமைக்கப்பட்டது. சண்டேஸ்வரி ஆலயம் இருந்த இடத்திலிருந்து சற்றுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உள் - வடக்கு வீதி



வசந்த மண்டப உற்சவ மூர்த்திகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவர் ஓவியங்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர்த்து சரியான இடத்தில் வைக்கப்பட்டதுடன் தேரடி வைரவருக்கும் சிறு ஆலயம் அமைக்கப்பட்டது. இக்காலப் பகுதியில் ஆதிமூலம், அர்த்தமண்டபத் தூண்கள், வசந்த மண்டபம் போன்றவற்றுக்கு மாபிள்கள் பதித்தல், உள்வீதி நிலத்திற்கு ரெறாசோ இடல் ஆலயம் முழுவதும் வர்ணம் பூசுதல் போன்ற பாரிய திருப்பணி வேலைகளும் செய்யப்பட்டு 21.03.2008 ஆம் திகதியன்று ஜீர்ணோர்த்த அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் சிவஸ்ரீ சபா சந்தனக் குருக்களைக் கொண்டு நிகழ்த்தப்பட்டது.

ஆலயத்தில் பாரிய திருப்பணி வேலைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வந்தமையால் நான்காவது வழிபடுவோர் மகாசபைக் கூட்டம் நீண்ட இடைவெளிக்குப் பின் 29.08.2010 ஞாயிற்றுக்கிழமை கூட்டப்பட்டது. அதில் தர்மகர்த்தாவாக திரு ச.தெட்சனாமூர்த்தியும் அவருடன் 15 பேரைக் கொண்ட பரிபாலன சபையும் தெரிவு செய்யப்பட்டது. பரிபாலன சபையின் தலைவராக திரு.சி.ஜெயபாலசிங்கம் அவர்களும் செயலாளராக திரு.சி.மாதவகுமாரன் அவர்களும் பொருளாளராக திரு.கு.சண்முகநாதன் அவர்களும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

ஆலயத்தின் திருமண மண்டபம் தற்காலத்திற்கேற்ப புனரமைக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மண்டபத்தின் உள்ளே இருந்த பிரிவுச் சுவர் அகற்றப்பட்டு நீள அகலம் என்பன அதிகரிக்கப்பட்டதுடன், தரைக்கு மாபிள் பதிக்கப்பட்டு மின்சார விளக்குகள் மற்றும் மின்விசிறிகள் பொருத்தப்பட்டன. அத்துடன் சகல வசதிகளுடனும் கூடிய புதிய சமையலறை ஒன்றும் நிர்மாணிக்கப்பட்டு மண்டபம் முழுவதும் வர்ணம் தீட்டப்பட்டது.

மீண்டும் 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் திருமண மண்டபத்தின் முகப்பு பகுதியில் கர்ண கூடு, மையசாலை என்பன அமைக்கப்பட்டு அழகுபடுத்தப்பட்டதுடன் 700 இருக்கைகள் கொள்வனவு செய்யப்பட்டு இருக்கை வசதி மேம்படுத்தப்பட்டது. மேலும் கதிரையில் இருந்து உணவு உண்ணக் கூடியவாறு சாப்பாட்டு மண்டபம் நிர்மாணிக்கப்பட்டு தேவையான வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் புதிய மணவறை ஒன்று திருமண மண்டபத்திற்கு கொள்வனவு செய்யப்பட்டதுடன் மண்டபத்தின் முன் வாயில் பகுதிக்கு ரெறாசோ இடப்பட்டு அழகுபடுத்தப்பட்டது. காலத்திற்கு காலம் மேற்கொள்ளப்பட்ட புனரமைப்புக்கள் மூலம் தற்போது 1000 பேரைக் கொள்ளக் கூடிய மண்டபமாக ஆலயத்தின் திருமண மண்டபம் உள்ளது.

2011 ஆம் ஆண்டு ஆலயத்தின் தெற்கு வாயிலில் 27 அடி உயரமான கோபுரத்திற்கு அத்திபாரம் இடப்பட்டு கோபுரத் திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு அதில் 37 பொம்மைகள் வைக்கப்பட்டு வர்ணம் தீட்டப்பட்டு அழகுற நிறைவு செய்யப்பட்டதுடன் தெற்கு வாயில் கோபுரத்தில் இருந்து தெற்கு வெளி வீதிவரை தரைக்கு கொங்கிறீற்றும் இடப்பட்டது. இத்திருப்பணிக்கான பெருமளவு நிதியுதவியினை திரு ச.கதிர்காமத்தம்பி, திரு சே.வேல்முருகு குடும்பத்தினர் வழங்கி உதவினர். அதே போல தெற்கு வாசல் கதவின் மேற்பகுதி சிற்ப வேலைகளினால் அழகுபடுத்தப்பட்டது. தெற்கு வாயில் கோபுரத்தின் குடமுழுக்கு கும்பாபிஷேகம் அம்பாளது அருட்பார்வையினால் 05.05.2014 ஆம் ஆண்டு நடந்தேறியது.

மேலும் இக் காலப்பகுதியிலேயே திரு.பொ.பரராஜசிங்கம் அவர்களின் நிதிப்பங்களிப்புடன் ஆலயத்தின் கோபுர வாயில் மணி மண்டபத்தின் மேற்கூரையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையார், முருகன், அம்பாள் ஆகியோரின் சிற்பங்கள் வைக்கப்பட்டன. கிழக்கு மற்றும் தெற்குச்சுற்றுப்பிரகாரச் சுவர்களில் மையசாலைகள், கர்ண கூடுகள், சிற்பங்கள் வைக்கப்பட்டு வர்ணம் தீட்டப்பட்டு அழகுபடுத்தப்பட்டன. ஆலயத்தின் பிரதான கோபுரத்திற்கு பஞ்சவர்ணங்கள் தீட்டப்பட்டதுடன் நீண்ட காலமாக வர்ணம் தீட்டப்படாதிருந்த ஆலயத்தின் தேரும் அழகான முறையில் வர்ணம் தீட்டப்பட்டது.

2014 - 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆலயத்தின் ஓட்டுடன் காணப்பட்ட தேர்க் கொட்டகை வெளிநாட்டில் வசிக்கும் அம்பாளது அடியவர் திரு.இராமநாதன் அருட்செல்வன் குடும்பத்தின் பெரும் நிதிப்பங்களிப்புடன் புனரமைப்புச் செய்யப்பட்டது, அதாவது ஓட்டுக் கூரை அகற்றப்பட்டு சீமெந்தினாலான கூரை இடப்பட்டு பத்மம் அமைக்கப்பட்டதுடன், உச்சியில் முடியும் சுற்றுப்புறச் சுவரில் கபோதகமும் அமைக்கப்பட்டன. குண்டுத் தாக்கத்தால் சேதமடைந்திருந்த தேர்க் கொட்டகையின் இரும்புக் கதவுகள் அகற்றப்பட்டு புதிய கதவுகள் பொருத்தப்பட்டன. இக்காலப்பகுதியில் சுவிஸில் வசிக்கும் திரு.கோபாலகிருஸ்ணன் குடும்பத்தினரின் நிதி உதவியுடன் ஆலயத்தின் ஈசான மூலையில் குழாய்க் கிணறு ஒன்றும் 25 அடி உயர தண்ணீர்த் தாங்கி ஒன்றும் அமைக்கப்பட்டதுடன் ஆலயத்தின் வெளிவீதியை சுற்றி நீர் தெளிக்கக் கூடிய வகையில் நீர்க்குழாய்கள் பொருத்தப்பட்டுள்ளன.

2010 ஆம் ஆண்டின் பின் 5 ஆவது வழிபடுவோர் மகாசபைக்கூட்டம் 16.10.2016 ஆம் திகதியன்று நடைபெற்றது. அதில் தர்மகர்த்தாவாக திரு.ச.தெட்சணாமூர்த்தி அவர்களும் பரிபாலனசபையின் தலைவராக திரு.சி.ஜெயபாலசிங்கம் அவர்களும் செயலாளராக திரு. சி.மாதவகுமாரன் அவர்களும் பொருளாளராக திரு.கு.சண்முகநாதன் அவர்களும் தெரிவு செய்யப்பட்டார்கள்.


2016 ஆம் ஆண்டு ஆலயத்தின் சுற்றுப்புறத் தூய்மையிலும் அழகிலும் கவனம் செலுத்தப்பட்டன. அதாவது ஆலயத்தின் வடக்கு புறத்தில் குண்டும் குழியுமாகக் காணப்பட்ட பகுதி மண் இடப்பட்டு செப்பனிடப்பட்டதுடன் தொடர்ச்சியாக வீதிகள் அடியவர்களது ஒத்துழைப்புடன் பராமரிக்கப்படுகின்றன. அவ்வாறே ஆலயத்தின் வெளிவீதியில் நாட்டப் பட்டுள்ள ஆல்,அரசு,தேக்கு,மலைவேம்பு, வேம்பு, திருவாத்தி, சந்தனம், உருத்திராக்கம் முதலிய மரங்கள் நிழல் தருவதுடன் மனதுக்கும் சாந்தியைக் கொடுக்கின்றன. ஆலயவீதியில் அமைந்துள்ள மனோன்மணி சனசமூக நிலையமும், இந்துசமய அபிவிருத்திச் சங்கமும் ஆலயவளர்ச்சிக்கு உதவுவனவாக அமைந்துள்ளன.

ஆலயத்தின் வடகிழக்கு மூலையில் தற்போது சப்பறம், கைலாசவாகனம், மஞ்சம் போன்றவற்றிற்குரிய கொட்டகைகள் அமைக்கப்பட்டுள்ள காணி 1994 ஆம் ஆண்டில் திரு.இராசலிங்கம் நடராசா அவர்களாலும் ஆலயத்தின் கிழக்கு பக்கத்தில் ஒரு பரப்புக்காணி காசிப்பிள்ளை மகள் ஜெகதீஸ்வரன் கிருஸ்ணலீலா அவர்களாலும் தற்போது சனசமூக நிலையம் அமைக்கப்பட்டுள்ள காணியில் 6.2 குழியளவு காணி திரு பத்மநாதன் நிர்மலா அவர்களாலும் ஆலயத்திற்கு அன்பளிப்பு செய்யப்பட்டன.

ஆலயத்தின் முன்வீதியில் அருகருகே காணப்படும் பழைமைவாய்ந்த வேப்பமரமும் அரச மரமும் தலவிருட்சங்களாக அடியார்களால் வழிபாடாற்றப்பட்டு வருகின்றன. வேப்பமரம் அம்பாளையும் அரசமரம் சிவனையும் குறிப்பதாக அடியார்கள் நம்புகிறார்கள். 2008 ஆம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேர் மாளிகை



மஞ்சம், கைலாச வாகன மாளிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டிலே இடம்பெற்ற அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகத் தேவைக்காக, அன்றைய நிர்மாண வேலைகளை மேற்கொண்ட ஸ்தபதி அவர்களால் உருவாக்கப்பட்ட "அதிகார நந்தியை" எங்கே வைப்பது என்று சிந்தித்த போது ஸ்தபதி அராலியூர் நவரத்தினம் அவர்கள் தனக்கு கிடைத்த அம்பாளது வாக்கின்படி ஆலய வாசலில் தேர்முட்டிக்கும் தலவிருட்சங்களில் ஒன்றாக காணப்படும் வேப்ப மரத்திற்கும் இடையில் கிழக்கு நோக்கிப் பார்த்தவாறு அதனை வைக்க வேண்டும் எனக் கோரிய போது பரிபாலன சபையினரும் அதனை அனுமதித்தனர். அவ் அதிகார நந்தி வழமைக்கு மாறாக கிழக்கு நோக்கிப் பார்த்தவண்ணம் அமைந்திருப்பது அற்புதமானது. குட்செட் வீதியால் போய்வரும் அடியவர்கள் புகையிரதப் பாதையை கடந்து வந்து அந்த நந்தியை வலம் வந்து வணங்கி தமது வேண்டுதல்களை நிறைவேற்றி வருகின்றனர்.

இதுவரை பூசைகளை மேற்கொண்ட சிவஸ்ரீ குமரகுருபரக்குருக்கள் வெளிநாடு செல்ல விரும்பியதால் அவரது இடத்திற்கு 15.01.2020 முதல் சிவஸ்ரீ வித்தியானந்தக்குருக்கள் நியமிக்கப்பட்டார்.

அம்பாளது ஆலயத்தில் 1922, 1938, 1966, 1982, 1991 மற்றும் 2008 ஆண்டு காலப் பகுதிகளில் மஹா கும்பாபிஷேகங்கள் மேற்கொள்ளப்பட்டு 12 ஆண்டுகளின் பின்னர் மீண்டும் 31.10.2019 இல் கோபுரக் கலசம், காண்டாமணிக் கோபுரக்கலசம் என்பன இறக்கப்பட்டதுடன் கோபுரத்திற்கும் மணிக் கோபுரங்களுக்கும் வர்ணம் தீட்டும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து 31.01.2020 இல் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு புனருத்தாரண வேலைகள் இடம்பெற்றுள்ளன. கர்ப்பக்கிருகம், முருகன் ஆலயம் என்பனவற்றின் உட்புறம் கருங்கல்லாலும் மகா மண்டபம் மாபிள் கற்களாலும் அழகுபடுத்தப்பட்டுள்ளதுடன் ஸ்நபன மண்டபத்தின் முன்புறம் அம்பாள், பிள்ளையார், மற்றும் வள்ளி தெய்வானை சமேத முருகப் பெருமானின் திருவுருவங்கள் அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடியதாக புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. ஆலயத்தின் கோபுர வாயில் மணிமண்டப நிலத்திற்கு ரெறாசோ இடப்பட்டு அதனைச் சுற்றி வெள்ளிரும்புக் கம்பிகளிலான வேலியும் அமைக்கப்பட்டது. ஆலயத்தின் வெளிப்புற சுற்றுப்பிரகாரச் சுவர்களின் கிழக்கு, தெற்குப் பக்கங்களில் சாலை, கர்ணக்கூடுகள், திருவாசிகள் அமைக்கப்பட்டு அம்பாளது திருவுருவங்களான முத்துமாரி, காமாட்சி, இந்திராணி, கருமாரி, கௌமாரி, காளி, போன்ற பல்வேறு வடிவங்களும் அஷ்ட லட்சுமிகளான சந்தானலட்சுமி, கஜலட்சுமி, ஆதிலட்சுமி, வீரலட்சுமி, விஜயலட்சுமி, மகாலட்சுமி, ஐஸ்வர்யலட்சுமி, தானியலட்சுமியும் அமைக்கப்பட்டுள்ளன.

அவ்வாறே ஆலயத்தின் தேர்க் கொட்டகையின் படிக்கு மேலான கூரை சீமெந்து இடப்பட்டு (கொங்கிறீற் கூரை) சுற்றிவர அழகிய கபோதகம் அமைக்கப்பட்டுள்ளது. இவற்றுக்கெல்லாம் வேண்டிய நிதி உதவிகள் உள்ளூரிலும், வெளியூரிலும் உள்ள அம்பாளின் அடியவர்களினால் வாரி வழங்கப்பட்டுள்ளது.

அம்பாளது திருவருளினால் 2020ஆம் ஆண்டின் கும்பாபிஷேகத்திற்கான திருப்பணி வேலைகள் யாவும் மிகக்குறுகிய காலத்தில் நிறைவு செய்யப்பட்டு 24.06.2020 ஆம் திகதி புதன்கிழமை சிவஸ்ரீ முரளீதரக் குருக்களைக் கொண்டு மஹா கும்பாபிஷேகம் நிகழ்த்தப்பட்டதுடன் தொடர்ந்து 45 நாட்கள் மண்டலாபிஷேகம் சிறப்புற நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தின் முன்புறம் அமைந்துள்ள அலங்கார வளைவும் தேர்க்கொட்டகையும், வடகிழக்கு மூலையில் அமைக்கப்பட்டு அழகாகக் காட்சிதரும் மஞ்சம், கைலாசவாகனம், சப்பறம் போன்றவற்றின் கொட்டகைகளும், தீர்த்தக்கேணியும் கம்பீரமாக நிமிர்ந்து நிற்கும் இராஜகோபுரமும், மணிமண்டபம், காண்டாமணிக்கோபுரம் போன்றவையும் கண்கொள்ளாக் காட்சியாக உள்ளன. ஆலயத்தின் உள்ளே மூலஸ்தானம், அர்த்தமண்டபம், ஸ்நபன மண்டபம், மகா மண்டபம், வசந்தமண்டபம் முதலான மண்டபங்களும் பரிவாரமூர்த்தி கோயில்களும் ரெறாசோ இடப்பட்ட நிலமும் அழகிய ஓவியங்களுடனும், சிற்பவேலைப்பாடுகளுடனும் கூடிய தூண்களும் சுவர்களும் பார்ப்பவரை மெய்சிலிர்க்க வைப்பனவாக அமைந்துள்ளன.

இங்கிருந்து அருளாட்சி புரியும் அன்னை மனோன்மணி கேட்டவர்க்கு கேட்டவரம் தருகிறாள். அடியவர் துயர் போக்குபவராக உள்ளார். இதனால் ஆலயத்தை நோக்கி தினமும் உள்ளூர் வெளியூர்களிலிருந்து அடியவர்கள் வந்து வரம் வேண்டுகின்றார்கள்.

**நீங்களும் அம்பாளின் அருளைப் பெறவேண்டுமாயின் தொண்டுகள் செய்யலாம்; பாடிப்பரவலாம்; பூக்கள், மாலைகள் கொடுத்து உதவலாம்; சந்நிதானத்தை தூய்மைப்படுத்த சரீரத்தொண்டாற்றலாம். இவை இயலாது போனாலும் அவள் சந்நிதானத்திற்கு வருகைதந்து வணங்கி வலம்வந்து ஓரிடத்தில் அமர்ந்து கண்களை மூடி அமைதியாக அவளை நினைந்து தியானம் செய்யுங்கள். உங்கள் குறைகளைக் கேளுங்கள், அம்பாள் தாயல்லவா! நிச்சயமாக அவள் அருள் கிடைக்கும்.**

**"நம்பினோர் கெடுவதில்லை"**

**சி.மாதவகுமாரன்**
செயலாளர்
ஆலய பரிபாலன சபை.

## சண்டேஸ்வரர் வழிபாட்டு முறை

கோவில்களில் விநாயகரை வழிபடுவது போல நிறைவாக சண்டேஸ்வரரை வழிபட்டால் தான் ஆலய வழிபாடு முழுமை அடையும். சண்டேஸ்வரர் சன்னிதானம் கருவறைக்கு இடப்பக்கத்தில் கோமுகிக்கு அருகாமையில் அமைக்கப்பட்டிருக்கும். இங்கு சண்டேஸ்வரர் தெற்கு நோக்கியவாறு காட்சியளிப்பார். ஆலயத்திற்குச் சென்று கும்பிட்ட பலனைப் பக்தர்களுக்கு அளிக்கும் அதிகாரம் இவருக்குண்டு. எனவே ஆலய தரிசன நிறைவில் இவரது சன்னிதானத்திற்கு வலப்புறமாகச் சென்று சண்டேஸ்வரரை வழிபட்டு விட்டு வந்த வழியே திரும்ப வேண்டும்.

இவர் எப்பொழுதும் தியானத்தில் இருப்பதால் மெல்ல கை தட்டி ஆலய தரிசன பலனைத் தந்தருள வேண்டும் என்று பிரார்த்திக்க வேண்டும்.

### இவரது சந்நிதானத்தில் செய்யக்கூடாதவை

- உரத்துக் கை தட்டக் கூடாது
- ஆடைகளில் இருந்து எடுக்கப்பட்ட நூல் இழைகளையோ, நூல் திரிகளையோ போடக் கூடாது.
- சண்டேஸ்வரர் சன்னிதானத்தை முழுமையாகச் சுற்றி வரக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1982 இல் ஆலய முகப்புத் தோற்றம்



1982 இல் ஆலய பக்கத் தோற்றம்



1987 இல் ஆலய பக்கத் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய அமைப்பும் கட்டடக்கலையும்

**கோ**வில் என்பது இறைவன் உறைகின்ற இடம் எனப்படும். இந்துப் பண்பாட்டில் கோவில் இறை நிலையின் இருப்பிடமாக அன்றிப் பண்பாட்டின் நிலைக்களமாகவும் திகழ்ந்து வந்துள்ளது. பண்டைக் காலம் முதல் கோவில்கள் கலைகளின் பொக்கிசமாகவும் இருந்து வந்துள்ளன. கோவில்களை மையமாக வைத்தே கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, ஆடற்கலை மற்றும் இசைக்கலை போன்றவை எல்லாம் வளர்க்கப்பட்டன.

கொக்குவில் கிழக்கு நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம் இயற்கை எழில்மிகுந்த சூழலில் உருவானது. 1870 ஆம் ஆண்டளவில் வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலைக் கட்டுவித்த வைத்திலிங்கச் செட்டியாரால் கற்கோவிலாக அமைக்கப்பட்டது. படிப்படியாக வளர்ச்சியடைந்து இன்று ஆகம விதிகளுக்கமைவான கோவில் அமைப்புடனும் கலை நுட்பங்களுடன் கூடிய கட்டட நிர்மாணிப்புக்களையும், சிற்ப வேலைப்பாடுகளையும் ஓவியங்களையும் கொண்டதாக காணப்படுகிறது.

தற்போது இவ் ஆலயத்தின் நடுவே மூல மூர்த்தியான மனோன்மணி அம்பாளுக்கான சந்நிதானமும் அதனைச் சூழ பரிவார மூர்த்திகளான விநாயகர், முருகப்பெருமான், வைரவருக்கான சந்நிதானங்களும் அமைக்கப்பட்டுள்ளதுடன் நவக்கிரகங்கள், சண்டேஸ்வரி ஆகியோருக்கும் தனித்தனி சந்நிதானங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மனித உடலும் கோவிலின் அமைப்பும் ஒத்ததன்மை கொண்டவையென்பர். மனிதன் ஒருவன் தலையை மேற்கு திசையாக வைத்து கால்நீட்டிப் படுத்திருப்பின் தலை கர்ப்பக் கிருகத்தையும் காற்பாதங்கள் கோபுரத்தையும் மூலாதாரம் கொடி மரத்தையும் (ஸ்தம்ப மண்டபம்) குறிக்கும்.

கோவிலிலும் பரிவாரக் கோவில்களிலும் விக்கிரகங்கள் வைக்கப்பட்டுள்ள பகுதி கருவறை எனப்படும். மனித உடலின் கருவறை அமைப்பு இருளானது. ஒருவழி வாசல் கொண்டது. அதனை ஒத்ததாகவே கோவில்களிலும் இறைவிக்கிரகங்கள் வைக்கப்படும் கருவறை அமைக்கப்படுகிறது. மூலவர் (மூலஸ்தானம்) வைக்கப்பட்டுள்ள கருவறை கர்ப்பக்கிருகம் எனப்படும். நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்திலும் கர்ப்பக் கிருகத்தை அடுத்து அர்த்த மண்டபம், மகாமண்டபம், ஸ்நபன மண்டபம், ஸ்தம்ப மண்டபம், பிரகார மண்டபம் போன்றவை அமைக்கப்பட்டுள்ளன.

கர்ப்பக்கிருகத்தில் கருங்கல்லில் செதுக்கப்பட்ட மனோன்மணி அம்பாள் விக்கிரகம் நின்ற கோலத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. மீன் விழி போன்ற கண்களையும் கருணைப் பொலிவான முகமும் கொண்டமைந்த அம்பாளின் தோற்றம் அற்புதமானது. அம்பாளின் நான்கு கரங்களில் வலது மேற்கரத்தில் அக்ஷ மாலையும், இடது மேற்கரத்தில் தாமரை மொட்டும் காணப்பட வலது கீழ் கை அஞ்சேலென அபயம் காட்டுவதாகவும், இடது கீழ்க்கை வரங்களை அள்ளி வழங்கும் வரதகரமாகவும் காணப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மூலஸ்தானத்திலும் பரிவாரக் கோவில்களிலும் விக்கிரகங்களின் கீழே இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ளன. இவ்வியந்திரங்கள் பொதுவாக ஐம்பொன், நவரத்தினம் போன்றவற்றைக் கொண்டிருக்கும். ஒவ்வொரு தெய்வத்திற்கும் ஒவ்வொரு வகையான மந்திரங்கள் இருப்பது போல இயந்திரங்களும் வெவ்வேறாக அமைந்திருக்கும். இவ் இயந்திரங்கள் மூர்த்தி பேதங்களுக்கேற்ப மாறுபட்டிருக்கும். இயந்திரங்களில் அக்ஷரங்கள், மூல மந்திரங்கள், காயத்திரி மந்திரம் போன்றவை எழுதப்படும். இவை மந்திரசக்தியால் உருவேற்றப்படக் கூடியவை. யந்திரபூசையின் போது மந்திரங்களால் உருவேற்றப்பட்ட யந்திரங்கள் மின்னேற்றப்பட்ட மின்கலங்கள் போல சக்திவாய்ந்தவையாக இருக்கும். இதன் சக்திக்கேற்ப அடியவர்களைக் கவர்ந்திழுக்கும் தன்மையும் அருட்கடாட்சமும் இருக்கும். எமது ஆலயத்திலும் மூலஸ்தானத்தில் உள்ள யந்திரத்தில் ஸ்ரீசக்கரம் வரையப்பட்டுள்ளது. "எவன் ஸ்ரீசக்கரத்தில் தேவியை நன்றாக அர்ச்சிக்கின்றானோ! எவன் தேவியின் வித்தை மந்திரத்தை அறிந்திருக்கின்றானோ! எவன் தேவியை ஆயிரம் நாமங்கள் சொல்லித் துதிக்கின்றானோ! அவனைத்தான் தேவி வழிபாட்டைச் செய்யும் மிக நல்லவன்" என்று புராணங்கள் கூறுகின்றன. எமது ஆலயம் சிறப்பாக வளர்ந்து வர இந்த ஸ்ரீசக்கரமே பிரதான காரணமாகும்.

மனோன்மணி அம்பாளது ஆலயத்தில் கருவறையின் மேல் அமைக்கப்பட்டுள்ள விமானம், மூன்று தளங்களைக் கொண்டது. அதன் கீழ்ப்பகுதி அகன்றதாகவும் மேலே செல்ல படிப்படியாக ஒடுங்கிச் சென்று சிகரமாக அமைக்கப்பட்டுள்ளது. சிகரத்தின் மேற்பகுதி ஸ்தூபி எனப்படும். அதன் உச்சியில் செப்பினாலான கலசமொன்று பொருத்தப்பட்டு அழகாகக் காட்சி தருகிறது. ஒவ்வொரு தளத்திலும் கர்ணக் கூடுகளும், மையசாலைகளும் அந்தந்த திசைக்குரிய தெய்வங்களும் காணப்படுகின்றன. அதே போல அம்பாளின் பலவித திருவுருவங்களும் பல்வேறு நிலைகளில் கலை நுணுக்கத்துடன் அமைக்கப்பட்டுள்ளன. விமானத்தின் கிழக்குப் பகுதியில் பல்வேறு நிலைகளில் மனோன்மணி அம்பாளும் மேற்குப் புறத்திலே இருந்த, நின்ற கோலங்களில் கரும்புடன் இராஜேஸ்வரியும், மனோன்மணியும் மகேஸ்வரியும் வடக்குத் திசையில் கையில் கிளியுடன் மீனாட்சி அம்மனும் கண்ணகை அம்மனும், பிராமியும், கிருஷ்ணரும் ராதையும் தெற்கே அர்த்தநாரீஸ்வரரும் முத்துமாரி, வைஷ்ணவியும் கலை நுணுக்கத்தோடு தத்துவ ரூபமாக அமைக்கப்பட்டுக் காட்சியளிக்கின்றன.

கர்ப்பக்கிருகமும் அதனை அடுத்துள்ள அர்த்தமண்டபமும் பொழியப்பட்ட வெண் சுண்ணாம்புக் கல் கொண்டு கட்டப்பட்டுள்ளதாயினும் 2020 ஆம் ஆண்டில் இவற்றின் உட்பகுதி கிறனைற்கல்லால் மூடப்பட்டுள்ளது. அர்த்த மண்டபத்தை அடுத்துக் காணப்படுவது மகா மண்டபம் எனப்படும். மகாமண்டபம் கிழக்கு, தெற்கு, வடக்கு பக்கங்களில் வாயில்களைக் கொண்டுள்ளன. மகா மண்டபத்தின் வடக்கே (வலதுபுறமாக) சபா மண்டபம் உள்ளது. இதன் உட்பகுதிச் சுவர்களும் தூண்களும் மாபிள் பதிக்கப்பட்டுள்ளன. இங்கு விநாயகர், அம்பாள், வள்ளி தெய்வானை சமேதராக முருகப் பெருமான் ஆகியோரின் ஐம்பொன்னினாலான உருவச்சிலைகள் தெற்கு நோக்கியதாக வைக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிள்ளையார் ஆலயம்




முருகன் ஆலயம்




நவக்கிரக ஆலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வைரவர் ஆலயம்



வெளி வைரவர் ஆலயம்



சண்டேஸ்வரி ஆலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகா மண்டபத்தின் வடக்கு நோக்கிய வாயிலை அடுத்துத் திருமஞ்சனக் கிணறு அமைக்கப்பட்டுள்ளது. மகாமண்டபத்திற்கு அடுத்துள்ள மண்டபம் ஸ்நபன மண்டபம் எனப்படும். மகா மண்டபத்திற்கும் ஸ்நபன மண்டபத்திற்கும் இடையிலான வாயிலின் இரண்டு புறங்களிலும் சாமரை வீசும் பெண்களும் மண்டபத்தின் உட்சுவர்களில் சுவரோவியங்களும் வரையப்பட்டுள்ளன.

ஸ்நபன மண்டபத்தின் முன்னே ஸ்தம்ப மண்டபம் உள்ளது. இம்மண்டபத்தில் நந்தி, பலிபீடம், கொடித்தம்பம், தம்பப்பிள்ளையார் ஆகியன காணப்படுகின்றன. இவை கிறனைற் கல்லினாலான பீடத்திலே வைக்கப்பட்டுள்ளன. கொடித்தம்பம் 19 அடி உயரமான தேக்கமரத்தில் செய்யப்பட்டு அழகான வேலைப்பாடுகளுடன் கூடிய பித்தளைத் தகட்டினால் சுற்றப்பட்டுள்ளது. ஸ்நபன மண்டபத்தையும் ஸ்தம்ப மண்டபத்தையும் பிரிக்கும் பகுதியில் விநாயகர், மனோன்மணி அம்பாள், வள்ளி தெய்வானை சமேத முருகன் ஆகியோரின் சிற்பங்கள் தனித்தனி திருவாசிகளோடு அமைக்கப்பட்டுள்ளதுடன் அவற்றினைச் சிற்ப வேலைகளுடன் கூடிய தூண்கள் தாங்கி நிற்குமாறு அமைக்கப்பட்டுள்ளன. இவை ஆலயத்தினுள் நுழையும் அடியவர்களுக்கு இறை உணர்வை ஊட்டுவதுடன் ஒரு வித அமைதியையும் ஏற்படுத்துவனவாக உள்ளன.

அம்பாள் சந்நிதானத்தில் பரிவாரமூர்த்திகளான விநாயகர், முருகன், வையிரவருக்கு தனித்தனி சந்நிதிகள் உள்ளன. ஒவ்வொன்றும் பொழிந்தெடுக்கப்பட்ட வெண்சுண்ணாம்புக் கல்லால் கட்டப்பட்டு அவற்றின் மேல் விமானம் முறையே வட்டம், எண்கோணம், சதுர வடிவான தளத்தின் மேலே பிரமாண அளவுகளுக்கேற்ப படிப்படியாக ஒடுங்கிச் சென்று சிகரத்தில் ஸ்தூபியையும் செப்பினாலான கலசத்தையும் கொண்டுள்ளன. விநாயகர் சந்நிதான விமானத்தில் இருந்த நிலையிலான விநாயகரும், மூசிக வாகனமும், பூதகணங்களும், முருகன் சந்நிதான விமானத்தில் மயிலின் மேல் இருந்த நிலையில் முருகனும், வைரவர் சந்நிதான விமானத்தில் நாய் வாகனத்துடன் நின்ற நிலையில் வைரவரும் பூத கணங்களும் அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் காணப்படுகின்றன. மூலஸ்தானத்திற்கு வலதுபுறமாக தெற்கு நோக்கிய வாயில் உடையதாக சண்டேஸ்வரி சந்நிதானமும் ஸ்தம்ப மண்டபத்திற்கு வலதுபுறமாக நவக்கிரக மண்டபமும் அமைக்கப்பட்டுள்ளன.

அம்பாள் சந்நிதானத்தின் வலதுபுறமாக பிரகாரத்தின் வடக்குப் பக்கமாக அமைந்திருக்கும் வசந்த மண்டபத்தின் வாயிலில் இரு மருங்கிலும் தீபம் தாங்கிய பாவைகள் காணப்படுகின்றன. இம் மண்டபத்தில் ஐம்பொன்னிலான அம்பாள், சுக்கிரவார சிறிய அம்பாள் ஆகியோரின் விக்கிரகங்கள் வைக்கப்பட்டுள்ளன.

சபா மண்டபத்தின் விமானம் செவ்வக வடிவமான தளத்தில் அமைக்கப்பட்டுள்ளது, அதன் மேல் வடக்கு, கிழக்கு, மேற்குப் பக்கங்களில் முறையே இருந்த நிலையில் மனோன்மணி, சரஸ்வதி, இலக்குமி ஆகியோரின் திருவுருவங்கள் காணப்படுகின்றன. பண்டிகையின் கிழக்கு மேற்கு பகுதிகளில் யாழியுடன் கூடிய மகரம் நாசித்தலையுடன் அமைக்கப்பட்டுள்ளதுடன் மேலே மூன்று செப்பினாலான கலசங்கள் அமைக்கப்பட்டு அழகாகக் காட்சி தருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாள் சந்நிதானத்தைச் சுற்றி வலம் வருவதற்கு வசதியாக அமைக்கப்பட்டுள்ள பகுதி பிரகார மண்டபம் எனப்படும். சுற்றுப்பிரகாரத்தின் நிலம் ரெறாசோ இடப்பட்டுள்ளதுடன் மேற் பகுதிக் கூரை வில் வடிவமாக சீமெந்தினால் அமைக்கப்பட்டுள்ளது. இப்பிரகார மண்டபத்தை அலங்கரிப்பதாக தூண்களும் சுவர்களும் அலங்கார வளைவுகளும் காணப்படுகின்றன. தூண்களின் அடிப்பகுதி சதுரவடிவமாகவும் மேற்பகுதி அறுகோண வடிவிலும் அமைக்கப்பட்டு படிப்படியாக ஒடுங்கிச் செல்லும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளன. தூண்களின் அடிப்பகுதியில் சிங்க முகமும் நடுப்பகுதியில் நந்தியும், மேற்பகுதியில் அன்னப்பட்சியும் புடைப்புச் சிற்பங்களாக செதுக்கப்பட்டுள்ளன. மேற்பகுதியின் நான்கு பக்கங்களிலும் போதிகைகள் காணப்படுகின்றன. இவ்வாறாக சுற்றுப்பிரகாரத்தில் 60 தூண்கள் உள்ளன.

சுற்றுப்பிரகாரத்தில் வசந்தமண்டபத்தை அடுத்து கிழக்குப் புறத்தில் களஞ்சிய அறை, யாகசாலை, வைரவர் சந்நிதானம், காண்டாமணிக்கோபுர அறை, பிரதான இராஜகோபுர நுழைவாயில் போன்றவையும் தெற்கே காரியாலயமும் மடப்பள்ளியும் அதனுடன் இணைந்தவாறு வசந்தமண்டபத்திற்கு நேரெதிரே தெற்குப் புறமாக திருமண மண்டபத்திற்கு செல்வதற்கான வாயிலும் களஞ்சிய அறைகள், தெற்கு கோபுர வாயில், களஞ்சிய அறை, வாகனசாலை, மின்சாரக் கட்டுப்பாட்டு அறை என்பன காணப்படுகின்றன.

அம்பாள் சந்நிதானத்தின் பிரதான நுழைவாயிலில் 57 அடி உயரம் கொண்ட பஞ்சதள கோபுரம் ஐந்து வாயில்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. கோபுரத்தின் பிரம்பாகத்தில் 8 தூண்கள் காணப்படுகின்றன. அவை நுட்பமான சிற்ப, சித்திர வேலைப்பாடுகளுடன் கூடியதாகவும் பூங்கொத்து, பாம்பு, யானை, புறா, மாலை, போன்றவற்றின் அழகிய வடிவங்கள் கொண்டு கண்கவர் எழில் தோற்றமுடையவையாகவுமுள்ளன. கோபுரத்தில் 214 பொம்மைகள் வைக்கப்பட்டுள்ளதுடன். கோபுரத்தின் அடித்தளம் செவ்வக வடிவத்தை கொண்டதாகவும் மேலே செல்லச் செல்ல படிப்படியாக ஒடுங்கிச் சென்று சிகரத்தில் பண்டிகைகளையும் அதில் செப்பினாலான ஐந்து கலசங்களையும் கொண்டுள்ளன. எல்லாத் தளங்களிலும் சாலைகள், கர்ணகூடுகள், கோபுரம் தாங்கிப் பூதங்கள், இறைசிற்பங்கள் என்பன எமது சமயக் கிரியைகள், புராணக் கதைகளை விளக்கும் கலை அம்சம் பொருந்திய சிற்பங்களாக வடிவமைக்கப்பட்டுள்ளன. பொதுவாக கோபுரங்கள் அமைக்கும் போது பிரதானமாக கிழக்குப் பக்கத்தில் மூலமூர்த்திக்குரிய சிற்பங்களும் வடக்குப் பகத்தில் பிரமாவிற்குரிய சிற்பங்களும், மேற்குப் பக்கத்தில் திருமாலுக்குரிய சிற்பங்களும், தெற்குப் பக்கத்தில் சிவனுக்குரிய சிற்பங்களும் வைக்கப்படுவது வழமை. அந்த அடிப்படையிலேயே இவ் ஆலயத்திலும் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கோபுரத்தின் கிழக்கு நோக்கிய பகுதியில் அமைந்துள்ள ஐந்து வாயில்களிலும் இருபுறமும் வாயிற்காவலர்கள் காணப்படுகின்றனர். கீழ்த் தளத்தில் அலங்கரிக்கப்பட்ட அம்பிகைக்கு அந்தணரொருவர் தீபாராதனை செய்யும் காட்சியும், தோழிகள் புடைசூழ சிவன் பார்வதியின் திருமணக் காட்சியும், முதலாம் தளத்தில் சிவனது தாண்டவக் கோலமும் இடபத்தில் மனோன்மணி அம்பாள் வீற்றிருக்கும் காட்சியும், சிவனும் உமை அம்மையும் இடபத்தில் அமர்ந்திருக்கும் காட்சியும், உமையின் தாண்டவக் கோலமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உட்பிரகார கிழக்கு வீதியும் வசந்த மண்டபமும்



உட்பிரகார வடக்கு வீதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் தளத்தில் பிரம்மா, மகேஸ்வரி, கௌரி, வைஷ்ணவி, பார்வதி, சாமுண்டி முதலான சப்தமாதாக்களும் மூன்றாம் தளத்தில் இருந்த நிலையிலான சந்தான இலக்குமி, கஜலக்குமி உட்பட்ட அஷ்டலக்குமிகளின் சிற்பங்களும் நாலாம் தளத்தில் நின்ற கோலத்தினாலான அறுவகைச் சக்திகளின் வடிவங்களும், ஐந்தாம் தளத்தில் இருந்தநிலையிலான விநாயகரும் மனோன்மணியும் நின்ற கோலத்தில் முருகப்பெருமானின் சிற்பங்களும் மிகுந்த அலங்கார வேலைப்பாடுகள் கொண்டமைந்துள்ளன. அதன் மேலே உள்ள பண்டிகையில் வடக்கு தெற்குப் புறங்கள் ஒவ்வொன்றிலும் ஆறு கந்தர்வர்களைக் கொண்ட மகரங்கள் அமைக்கப்பட்டு அவற்றில் இருந்த கோலத்தில் முறையே மஹாலஷ்மியும் சரஸ்வதியும் காணப்படுகின்றனர்.

கோபுரத்தின் வடக்கு பக்க முதலாம் தளத்தில் வைரவரும் சமயக்குரவர்களான அப்பர், சுந்தரர், திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் போன்றவர்களும் இரண்டாம் தளத்தில் பிரம்மாவும் அவரின் தேவியர்களும் மூன்றாம், நான்காம், ஐந்தாம் தளங்களில் பிராமிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

கோபுரத்தின் மேற்குப் புறத்தில் திருமாலின் மச்சாவதாரம், கூர்மாவதாரம், நரசிம்மாவதாரம், பலராமர், இராமர், இலக்குமணன், அனுமன், கிருஷ்ணர் போன்றவை வனப்பு மிகுந்தவையாக காணப்படுகின்றன. கோபுரத்தின் தெற்குப்புறம் முதலாம் தளத்தில் பிச்சாடமூர்த்தியும், ஏகபாதமூர்த்தியும், இரண்டாம் தளத்தில் கண்ணப்பநாயனார் அம்பினால் கண்ணைக் குத்தி எடுத்து சிவலிங்கத்திற்கு அப்பும் காளாத்தீஸ்வரர் காட்சியும், இருந்த கோலத்தில் இராஜராஜேஸ்வரியும் காஞ்சியில் உமை சிவலிங்கத்தை மண்ணில் அமைத்து வழிபடும் காட்சியும் எழில் மிகுந்தவையாக காணப்படுகின்றன. மூன்றாம் தளத்தில் கல்லால மரத்தின் கீழ் சிவன் தெட்சணாமூர்த்தியாக அமர்ந்திருக்கும் காட்சியும் சிவபக்தர்களும் ரதியும், மன்மதன் கையில் வில் கொண்டு சிவனது தவத்தை குழப்பும் காட்சியும் நான்காம் தளத்தில் பாதிசிவன் பாதி உமையின் நின்ற கோலமும் நடுவில் இருந்த கோலத்தில் காமாட்சி அம்பாளும் ஐந்தாம் தளத்தில் இருந்த கோலத்தில் மனோன்மணி அம்பாளும் நந்தி, கஜலட்சுமி போன்றவற்றின் சிற்பங்களும் தத்துவ ரீதியாகவும் கலை நுணுக்கத்தோடும் அமைக்கப்பட்டு வர்ணம் தீட்டப்பட்டு பார்ப்பவர் மனதைக் கொள்ளை கொள்ளும் வண்ணம் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளன. கோபுரத்தின் இரண்டு பக்கங்களிலும் காண்டாமணிக் கோபுரங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றிலும் காண்டாமணிகள் பொருத்தப்பட்டுள்ளன.

கிழக்கு நோக்கிய நுழைவாயிலின் இரண்டு புறத்திலும் துவாரசக்தி பாலகிகளின் சிற்பங்கள் காணப்படுகின்றன. அம்மன் ஆலயங்களில் காணப்படும் துவாரபாலகிகளை ஹரபத்ரா, சுபத்ரா என்று அழைப்பார்கள். அவற்றின் மேற்கைகளில் உருத்திராட்ச மாலையும், தாமரை மொட்டும் காணப்படுகின்றன. இடது புறத்தில் உள்ள துவாரசக்திபாலகியின் கீழ்க்கைகளில் ஒன்று கதாயுதத்தைக் கொண்டிருக்க மறுகைச் சுட்டுவிரல் உள்ளே சென்று வழிபாடு செய்யுங்கள் என்பதைச் சுட்டுவதாகவும் உள்ளது. வலது புறத்தே உள்ள துவாரசக்தி பாலகியின் கீழ்க்கைகளில் ஒன்றில் கதாயுதத்தைக் கொண்டிருக்க மறுகையின் உயர்த்தி நீட்டிய சுட்டு விரல் ஆலயத்தினுள் கவனமாகவும் தூய்மையுடனும் நடந்துகொள்ள வேண்டும் என்பதனையும் குறிப்பதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஆலயத்தின் வெளியே நுழைவாயிலுக்கு (கோபுர வாயிலுக்கு) முன்னால் அமைந்துள்ள பகுதி மணி மண்டபம் எனப்படும். மணிமண்டபத்தின் நிலம், ரெறாசோ இடப்பட்டுள்ளதுடன் அழகிய புடைப்புச் சிற்பவேலைப்பாடுகளையும் போதிகைகளையும் கொண்ட தூண்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. மணிமண்டபத்தின் முன்புறத்தே சீமெந்தினாலான கூரையில் மேலே மனோன்மணி அம்பாளின் திருவுருவம் மையத்திலும், அதன் வலது புறத்தே விநாயகரும் இடது புறத்தே வள்ளி, தெய்வானை சமேத முருகப்பெருமானும் திருவாசிகளினுள் அமைக்கப்பட்டு கந்தர்வர்கள் இருவர் மாலையிடுவது போன்று அமைக்கப்பட்டுள்ள காட்சி ஆலயத்தின் அழகை மேலும் மேன்மையுறச் செய்கிறது. மணிமண்டபத்தின் வடக்குப் பக்கத்தில் இருந்த நிலையில் மனோன்மணி, வைஷ்ணவி, காமாட்சி, விசாலாட்சி, மதுரை மீனாட்சி, அன்னபூரணியும் தெற்குப் பக்கத்தில் பிரம்மகி, ஆதிபராசக்தி, மகாலட்சுமி, முத்துமாரி, சரஸ்வதி ஆகியோரின் திருவுருவங்களும் கலை நுணுக்கத்துடன் அமைக்கப்பட்டுள்ளன.

மணிமண்டபத்தை அடுத்துத் தெற்குபக்கமாக திருமண மண்டப வாயில் அமைந்துள்ளது. வாயிலின் முன்புற மேற்பகுதியில் நடுவே மையசாலை அமைக்கப்பட்டு சிவன் பார்வதி திருக்கல்யாணக் காட்சியும் அதன் ஒரு பக்கத்தில் மனோன்மணி அம்மனும் மறுபக்கத்தில் சரஸ்வதியும் நின்ற கோலத்தில் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளன. கிளி முகத்துடடன் நாதஸ்வரக் கலைஞர், எருது முகத்துடன் மனித வடிவில் தவில் வாசிக்கும் கலைஞர், தம்புராவுடன் நந்தி, நாரத முனிவர், தோழிப் பெண்கள், ஆகியோர் புடைசூழ பார்வதிராஜன் தனது மகள் பார்வதியை சிவபெருமானுக்கு நீர் இறைத்துத் தத்தம் பண்ணிக் கொடுக்க, புரோகிதர் ஒருவர் திருமணத்தை நடத்தி வைக்கும் காட்சி அற்புதமாக சிற்ப வடிவில் வடிவமைக்கப்பட்டுள்ளன. இவை பார்ப்பதற்கு விநோதமாகவும் அழகாகவும் காட்சியளிக்கின்றன. கல்யாண மண்டபத்தின் தெற்குப் புறச்சுவரிலும் ஆலயத்தின் தெற்குப் பக்க சுற்றுப்புறச் சுவரிலும் கபோதகம் அமைக்கப்பட்டு அதன் மேல் கர்ணகூடுகளும் திருவாசிகளில் தனித்தனியே தானியலட்சுமி, ஐஸ்வர்யலட்சுமி, மகாலட்சுமி, விஜயலட்சுமி, வீரலட்சுமி, ஆதிலட்சுமி, கஜலட்சுமி, சந்தானலட்சுமி போன்ற அஷ்டலட்சுமியைக் குறிக்கும் திருவுருவங்களும் அம்பாளின் வெவ்வேறு சக்தி வடிவங்களும் வைக்கப்பட்டுள்ளன. இவை கருணை பொழியும் முகங்களைக் கொண்டவையாக உரிய ஆயுதங்கள், ஆடை, அணிகலன்களுடன் செதுக்கப்பட்டு உயிர்ப்புமிக்கவையாகக் காணப்படுவதுடன் தெய்வீக உணர்வையும் ஏற்படுத்துகின்றன.

ஆலயத்தின் வெளிச்சுற்றுப் பிரகாரத்தில் கிழக்கே தேர்க்கொட்டகையும், அதிகார நந்தியும் தலவிருட்சங்களும், வடகிழக்கு மூலையில் மஞ்சம், கைலாச வாகனம், சப்பறக் கொட்டகைகளும், தெற்கே மனோன்மணி அம்பாளது தீர்த்தக் கேணியும் காணப்படுகின்றன. தீர்த்தக்கேணி 75 அடி நீளமும் 70 அடி அகலமும் கொண்டதாக நான்கு பக்கமும் படிகள் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. கேணியின் தெற்குப் புறத்தே தீர்த்தம் நடைபெறும் போது அம்பாள், விநாயகர், முருகன் வைக்கப்படுதற்குரிய கொட்டகை அமைக்கப்பட்டுள்ளது. மேலும் தீர்த்தக் கேணிக்கு மேற்குப் புறத்திலே ஆலயத்திற்குரிய மலசல கூடம் அமைந்துள்ளது. கிழக்கே கொக்குவில் மனோன்மணி சனசமூக நிலையமும், இந்துசமய அபிவிருத்திச் சங்கமும் ஒரே கூரையின் கீழ் அமையப்பெற்றுள்ளமை ஆலயச் சூழலுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தெற்கு வாசல் கோபுரம்



அதிகார நந்தி




திருமண மண்டப முகப்புத்தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கிழக்குப்புற வாயில் தோற்றமும் தலவிருட்சமும்



தீர்த்தக் கேணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் அழகு சேர்க்கிறது. ஆலயத்தின் தென்மேற்கு மூலையில் உதவிப் பூசகருக்கான தங்குமிடமும், ஆலயத்தின் மேற்குப் பக்கத்தில் ஆலயக் குருக்களுக்குரிய தங்குமிடமும் அமைந்துள்ளன. ஆலயத்திற்கு நியமனம் செய்யப்படும் குருக்கள் மற்றும் உதவிப்பூசகர்கள் தமது சேவைக்காலத்தில் குறித்த தங்குமிடங்களில் தங்கியிருந்தே கடமையாற்ற வேண்டும் என்பது பரிபாலன சபையின் நியமன நிபந்தனைகளில் ஒன்றாகக் காணப்படுகிறது.

ஆலயத்தின் தெற்கு வாயிலில் 3 தளங்களைக் கொண்ட 27 அடி உயரமான கோபுரம் உள்ளது. இதன் விமானத்தில் மீனாட்சி, வைஷ்ணவி, விசாலாட்சியும் கிழக்கே மனோன்மணியும் வடிவுடையாளும் இருந்த கோலத்தில் அமைக்கப்பட்டுள்ளன. தெற்கே துவாரத்தின் (வாயில்) இரு புறமும் இரண்டிரண்டாக ஆறு துவாரபாலகிகளும் முதலாம் தளத்தில் பிள்ளையாரும் முருகனும் காணப்படுகின்றார்கள். விமானத்தின் மேலே பண்டிகையில் கிழக்கே சரஸ்வதியும் மேற்கே இலட்சுமியும் மகரத்தில் திருப்பொலிவோடு காணப்படுகின்றார்கள். கோபுர ஸ்தூபியில் மூன்று கலசங்கள் வைக்கப்பட்டுள்ளன. கோபுரத்தின் முற்பகுதி வில் மண்டபத்தை கொண்டமைந்துள்ளது. கோபுரத்தை தாங்கும் தூண்களின் மேற்பகுதியில் போதிகைகளும் கந்தர்வர்களும் அழகுற அமைக்கப்பட்டுள்ளார்கள். கோபுர நுழைவாயின் இருபுறமும் துவாரபாலகிகள் காணப்படுகின்றார்கள்.


நிறைவாக நந்தாவில் அம்மன் கோயிலின் அமைப்பு சிவாகம விதிமுறைகளுக்கேற்ப அமைக்கப்பட்டுள்ளதுடன் திராவிட கட்டட அமைப்பைக் கொண்டது. இங்கு காணப்படும் சிற்பங்களும், ஓவியங்களும் பக்திப்பரவசமூட்டுவனவாகவும், புராண இதிகாச கதைகளை நினைவுபடுத்துவனாகவும் உள்ளதோடு கலையம்சம் மிக்கனவாகவும் உள்ளன.

### மாவிலை தோரணம்



மங்கலச் சடங்குகளில் (பூர்வக்கிரியை) மாவிலைகள் உட்புறமாக மடித்துச் சொருக வேண்டும். தோரணங்களில் அம்புக்குறி மேல்நோக்கி இருக்கத்தக்கதாக ஐந்து எண்ணிக்கை கொண்டதாக மடிக்கப்பட வேண்டும்.

அமங்கலச்சடங்குகளில் (அபரக்கிரியை) மாவிலைகள் வெளிப்புறமாக மடித்துச் சொருக வேண்டும். தோரணங்களின் அம்புக்குறிகள் மூன்றாகவும் கீழ் நோக்கியவாறும் இருத்தல் வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய நைமித்திய பூசை ஒழுங்குகளும் நடைமுறைகளும் மற்றும் அம்பாள் திருவீதி உலாவரும் தினங்களும்

## பூசைகள்

**நித்திய பூசை ஒழுங்குகள்**

| | | |
|---|---|---|
| உதயப் பூசை | - | காலை 6.00 மணி |
| காலைப் பூசை | - | காலை 8.30 மணி |
| உச்சிக்காலப் பூசை | - | நண்பகல் 12.00 மணி |
| மாலைப் பூசை | - | மாலை 5.00 மணி |

உச்சிக்காலப் பூசை: தம்ப பிள்ளையார், நந்திபலிபீடம், அம்பாளுக்கு மட்டும் நடைபெறும்.

### பூசைகள் பின்வரும் ஒழுங்கில் நடைபெறும்.

விநாயகர் பூசையுடன் ஆரம்பித்து, தொடர்ந்து அம்பாளுக்கும் சபைக்கும் பூசைகள் நடைபெறும் அங்கிருந்து ஸ்தம்ப மண்டபத்தில் தம்பப் பிள்ளையார், பலிபீடம், நந்தி பூசைகள் நடைபெற்று வலஞ்சுழியாக சுற்றிவந்து முருகனுக்கும், நவக்கிரகங்களிற்கும் அடுத்து வசந்த மண்டபம், வைரவருக்கு பூசைகள் நடைபெற்று சண்டேஸ்வரி பூசையுடன் நிறைவுபெறும்.

- மாலை நேரங்களில் வைரவர் பூசையைத் அடுத்து வெளி வைரவர் பூசை இடம்பெறும் அதனைத் தொடர்ந்து சண்டேஸ்வரி பூசை நடைபெறும்.
- சுவாமி வீதி உலாவரும் வேளைகளில் நவக்கிரக பூசையை அடுத்து வைரவர் பூசை, வெளி வைரவர் பூசை, வசந்தமண்டப பூசை என்பன நடைபெற்று அம்பாள் வீதி உலா புறப்படுவார்.

அம்பாள் வசந்தமண்டபத்தை வந்தடைந்தவுடன் தீபம் காட்டப்பட்டு தொடர்ந்து சண்டேஸ்வரி பூசை இடம்பெற்று பூசைகள் நிறைவுபெறும்.

### *மாதாந்த நிகழ்வுகள்*

## 1. தை மாதம்

மாதப்பிறப்பு, பௌர்ணமி, சதுர்த்தி, கார்த்திகை , தைப்பூசம், குளிர்த்தி போன்றவை இடம்பெறும் தினங்களில் அபிஷேகம் நடைபெறும்.

**குளிர்த்தி அபிஷேகம்**

தைப்பொங்கல் தினத்திற்கு முன்னைய 8 நாட்களும் குளிர்த்தி அபிஷேகம் பிற்பகல் 5.00 மணிக்கு இடம்பெற்று 9 ஆம் நாள் தைப்பொங்கல் தினத்தன்று மாலை அம்பாள் ஆலயத்தில் இருந்து புறப்பட்டு உடையார் ஒழுங்கை, பொற்பதி வீதி, ஆடியபாதம் வீதி, கோவில் வீதி வழியாக ஆலயத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தடையும், அடுத்த நாள் ஸ்நபன மண்டபத்தில் சங்குகள் வைக்கப்பட்டு வசந்த மண்டபத்தில் எழுந்தருளி அம்பாளுக்கு 108 சங்காபிஷேகம் இடம்பெற்று குளிர்த்திக் கஞ்சி வார்க்கப்படும்.

**தைப்பூசம்**

தைப்பூசத் தினத்தன்று காலை 7.00 மணிக்கு 108 சங்காபிஷேகம் இடம்பெற்று அம்பாள் தாமரை வாகனத்தில் வீதிவலம் வருவார்.

## 2. மாசி மாதம்

மாதப்பிறப்பு, பௌர்ணமி, சதுர்த்தி, கார்த்திகை, மாசி மகம், சிவராத்திரி போன்றவை இடம்பெறும் தினங்களில் அபிஷேகம் இடம்பெறும்.

**சிவராத்திரி**

சிவராத்திரி தினத்தில் நான்கு சாம அபிஷேகமும் பூசையும் முறையே மாலை 6.30 மணி, இரவு 8.30 மணி, நள்ளிரவு 11.30 மணி மற்றும் அதிகாலை 5.00 மணிக்கு இடம்பெறும். நான்காம் சாமப் பூசையைத் தொடர்ந்து அம்பாள் உள்வீதி, வெளிவீதி உலா வருவார்.

## 3. பங்குனி மாதம்

மாதப்பிறப்பு, பௌர்ணமி, சதுர்த்தி, கார்த்திகை, பங்குனித் திங்கள் (சகல திங்களும்) மற்றும் மணவாளக் கோலம் ஆகிய தினங்களில் அபிஷேகம் இடம்பெறும்.

**பங்குனித் திங்கள் பொங்கல்**

பங்குனி மாதத்தில் வரும் திங்கட்கிழமைகளில் அடியார்களால் ஆலயத்தின் முன் வீதியில் பொங்கல் மேற்கொள்ளப்படும். பொங்கும் அடியவர்களுக்கு தேவையான வசதிகள் (கொட்டகை, மின்விளக்கு, அடுப்பு) பரிபாலனசபையால் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

**மணவாளக்கோலம்**

ஆலயத்தின் அம்பாள் பிரதிஷ்டை செய்த தினமான பங்குனி மாத **மகத் தினத்தில்** மணவாளக் கோலம் கொண்டாடப்படும். அன்றைய தினம் அம்பாளுக்கு 1008 சங்காபிஷேகமும், பரிவார மூர்த்திகள், எழுந்தருளி உற்சவ மூர்த்திகள், நவக்கிரகங்கள், வசந்தமண்டப உற்சவ மூர்த்தி போன்றவற்றுக்கு ஸ்நபன அபிஷேகமும் பூசைகளும் திருவூஞ்சலும் இடம்பெற்று அம்பாள் உள்வீதி, வெளிவீதி உலாவருவார். அன்றைய தினம் அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. சித்திரை மாதம்

மாதப்பிறப்பு, பௌர்ணமி, சதுர்த்தி, கார்த்திகை, வருடப்பிறப்பு போன்றவை இடம்பெறும் தினங்களில் அபிஷேகம் இடம்பெறும்.

**சித்திரை வருடப்பிறப்பு**

சித்திரை மாதம் 1 ஆம் திகதி வருடம் பிறக்கும் நேரத்தில் விசேட பூசைகள் இடம்பெற்று ஆலயக்குருக்கள், உதவிப் பூசகர், ஆலயத்துடன் தொடர்புடைய ஊழியர்கள், நித்திய தொண்டர்களுக்கு ஆலய பரிபாலன சபையால் கைவிசேஷடம் வழங்கப்படும்.

பூசைகள் நிறைவடைந்ததும் ஆலய பிரதமகுருவினால் குறித்த வருடப் பிறப்பின் சிறப்பம்சங்கள் பொதுவான பலாபலன்கள் தொடர்பாக வாக்கிய பஞ்சாங்கத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் விடயங்களை அடியவர்களுக்கு வாசித்துக் காட்டப்படும்.

**சித்திரா பௌர்ணமி**

அம்பாளுக்கு விசேட அபிஷேகம் இடம்பெறும், அன்னையர்களுக்கு பிதிர்க்கடன் செய்ய வரும் அடியவர்களுக்கு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படுவதுடன் அன்றைய தினம் சபையினால் சித்திரைக் கஞ்சி வழங்கப்படும்.

## 5. வைகாசி மாதம்

மாதப்பிறப்பு, பௌர்ணமி, வைகாசி விசாகம், சதுர்த்தி, கார்த்திகை, இலசட்சார்ச்சனை போன்றவை இடம்பெறும் தினங்களில் அபிஷேகம் இடம்பெறும்.

### இலட்சார்ச்சனை

வைகாசி மாதப் பௌர்ணமியை நிறைவு நாளாகக் கொண்டு 11 நாட்கள் இலட்சார்ச்சனை இடம்பெறும். தினமும் பி.ப 4.30 மணிக்கு அம்பாளுக்கு விசேட அபிஷேகம் இடம்பெற்று தொடர்ந்து இலட்சார்ச்சனை ஆரம்பமாகும். தொடக்கத்தில் ஒன்பது குருக்களும் ஆதிமூல அம்மனுக்கு தீபாராதனை செய்து வரிசையாக வந்து ஸ்தம்ப மண்பத்திற்கு அடுத்த மண்டபத்தில் ஓம குண்டத்திற்கு முன் இடப வாகனத்தில் வைக்கப்பட்ட சிவன், பார்வதியைக் குறித்து நிற்கும் கும்பத்திற்கு ஒவ்வொருவராகத் தீபாராதனை செய்வார்கள். அதனைத் தொடர்ந்து விஷேச சந்தி, நியாசம் முதலியன நடைபெற்று வசந்த மண்டப பூசை இடம்பெற்று தொடர்ந்து நவசக்தி அர்ச்சனை, புஷ்பாஞ்சலி, ஹோமம், ஜபஹோமம், சமர்ப்பணம், வேதம், ஸ்தோத்திரம், ஆசீர்வாதம், தேவாரம், புராணம் முதலியன நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலட்சார்ச்சனை பூர்த்தி நாளான பதினொராம் நாள் காலையில் அம்பாளுக்கு சங்காபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து சஹஷ்ரநாம அர்ச்சனை குங்குமத்தால் செய்யப்படும். சங்காபிஷேகத்திற்குரிய கும்பம், சங்கு போன்றவை ஸ்நபன மண்டபத்தில் வைக்கப்பட்டு வசந்தமண்டபத்தில் எழுந்தருளி அம்மனுக்கு அபிஷேகம் செய்யப்படும். மாலை பூர்ணாகுதி நடைபெற்று இலட்சார்ச்சனை பூர்த்தியாகி அம்பாள் உள், வெளி வீதி உலாவருவார்.

பதினொரு நாட்களும் பயன்படுத்தப்படும் புஷ்பம், பத்திரம் பற்றிய விபரங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 ஆம் நாள் | - வில்வம் | 2 ஆம் நாள் | - | வன்னி |
| 3 ஆம் நாள் | - விளாத்தி | 4 ஆம் நாள் | - | நொச்சி |
| 5 ஆம் நாள் | - நெல்லி | 6 ஆம் நாள் | - | மஞ்சள் பூ |
| 7 ஆம் நாள் | - மாவிலங்கு | 8 ஆம் நாள் | - | முட்கிளுவை |
| 9 ஆம் நாள் | - துளசி | 10 ஆம் நாள் | - | வெள்ளைபூ |

11 ஆம் நாள் - காலை - குங்குமம்
மாலை - கதம்பம் (பல இனப் புஷ்பங்கள்)

## 6. ஆனி மாதம்

மாதப்பிறப்பு, பௌர்ணமி, சதுர்த்தி, கார்த்திகை, ஆனி உத்தரம் போன்றவை இடம்பெறும் தினங்களில் அபிஷேகம் நடைபெறும்.

## மஹோற்சவம்

**கிராம சாந்தி மற்றும் பந்தல்கால் நாட்டல்**

கொடியேற்ற தினத்திற்கு முதல் பொருத்தமான தினத்தில் அம்பாளுக்கு அபிஷேகம் நடைபெற்று பந்தல்கால் நடப்படும். மாலையில் கிராம சாந்தி இடம்பெறும்

**கொடிச்சீலை எடுத்து வருதல்**

ஆனி மாத பௌர்ணமி தினத்திற்கு தீர்த்தோற்சவம் வரக்கூடியவாறு மஹோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பதினொரு நாட்கள் (11) இடம்பெறும். கொடியேற்ற தினம் காலையில் கொடிச்சீலை பொற்பதி விநாயகர் ஆலயத்தில் இருந்து பொற்பதி வீதி, ஆடியபாதம் வீதி, கோவில் வீதி வழியாக ஆலயத்திற்கு எடுத்துவரப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிழாக்கள்

**1 ஆம் நாள் : கொடியேற்றம்**

கொடியேற்ற தினத்தன்று விநாயகர், அம்பாள், முருகன் ஆகியோர் முறையே எலி, ரிஷபம், மயில் வாகனத்தில் வெளிவீதி பவனி வருவார்கள்.

**2 ஆம் நாள் : ஒரு முகத் திருவிழா**

இரண்டாம் நாள் விநாயகர், அம்பாள், முருகன் ஆகியோர் அன்னப்பட்சி வாகனத்தில் வெளிவீதி பவனி வருவார்கள்.

**3 ஆம் நாள் : மஞ்சத் திருவிழா**

மூன்றாம் நாள் மதியம் அம்பாள் கைலாச வாகனத்தில் உள்வீதி வலம் வருவார். மாலை விநாயகர், அம்பாள், முருகன் ஆகியோர் திருமஞ்சத்தில் வெளிவீதி பவனி வருவார்கள்.

**4 ஆம் நாள் : திருவிழா**

நான்காம் நாள் மாலை விநாயகர், அம்பாள், முருகன் முறையே **காராம்பசு, கடா, காராம்பசு** வாகனங்களில் வெளிவீதி பவனி வருவார்கள்.

**5 ஆம் நாள் : திருவிழா**

ஐந்தாம் நாள் விநாயகர், அம்பாள், முருகன் ஆகியோர் **இடப** வாகனங்களில் வெளிவீதி பவனி வருவார்கள்.

**6 ஆம் நாள் : திருவிழா**

ஆறாம் நாள் விநாயகர், அம்பாள், முருகன் ஆகியோர் **பாம்பு** வாகனங்களில் வெளிவீதி பவனி வருவார்கள்.

**7 ஆம் நாள் : கைலாசவாகனத் திருவிழா**

ஏழாம் நாள் விநாயகர், அம்பாள், முருகன் ஆகியோர் கைலாசவாகனத்தில் வெளிவீதி பவனி வருவார்கள்.

**8 ஆம் நாள் :**

எட்டாம் நாள் விநாயகர், அம்பாள், முருகன் ஆகியோர் **குதிரை** வாகனங்களில் வெளிவீதி பவனி வருவார்கள்.

**9 ஆம் நாள் : சப்பரத் திருவிழா**

ஒன்பதாம் நாள் விநாயகர், அம்பாள், முருகன் ஆகியோர் **இடப** வாகனங்களில் வெளிவீதி பவனி வருவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 10 ஆம் நாள்: தேர்த் திருவிழா

பத்தாம் நாள் விநாயகர், முருகன், அம்பாள் ஆகியோர் முறையே சிறிய தேரில் பிள்ளையாரும் அடுத்து வரும் தேரில் வள்ளி தேவசேனா சமேத முருகப் பெருமானும் தொடர்ந்து சித்திரத்தேரில் அம்பாளும் ஆரோகணித்து எழுந்தருளி வீதி வலம் வருவர்.

தேர் இருப்பிடத்தை அடைந்ததும் அம்பாளுக்கு பச்சை சாத்தப்பட்டு இரதத்தில் இருந்து இறக்கப்பட்டு வசந்தமண்டபத்திற்கு எழுந்தருள செய்யப்பட்டு நவசக்தி அர்ச்சனை இடம்பெறும்.

மாலை விநாயகர், அம்பாள், முருகன் உள்வீதி உலா வந்து, வெளி வீதியில் தேர்முட்டியைச் சுற்றி வலம் வந்து தேரடி பார்க்கும் நிகழ்வு இடம்பெறும்.

### 11 ஆம் நாள்: தீர்த்தத் திருவிழா

வழமைபோல் அபிஷேகம் பூசைகளைத் தொடர்ந்து ஸ்தம்ப பூஜை, பேரிதாடனம், சூர்ணோற்சவம், வசந்தமண்டப பூஜை இடம்பெற்று அதனைத் தொடர்ந்து யாக தரிசனம், வெளிவீதி வந்து தீர்த்தக் கேணியில் தீர்த்தோற்சவம் இடம்பெறும். தொடர்ந்து வீதிப் பிரதட்சணம் முடித்து உள்வீதி சுற்றி வந்து யாக தரிசனம், மஹாபூரணாதி, வாயிலில் பாததீர்த்தம் முடித்துக் கொண்டு நேரடியாக வசந்தமண்டபத்தில் எழுந்தருளிவித்தல் .

அடுத்து கும்பஉத்தாபனம், வீதிப்பிரதட்சணம், புஷ்பாஞ்சலி, யாககும்பாபிஷேகம் இடம்பெறும்.

பதினொராம் நாள் இரவு கொடியிறக்கம் இடம்பெற்று அந்தணச் சிவாசாரியர்களுக்கான கௌரவம் ஆலய பரிபாலன சபையால் மேற்கொள்ளப்படுவதுடன், ஆலய மஹோற்சவ குருவின் ஆசியுரையும் ஆலய பரிபாலன சபையின் நன்றி பகிர்தலும் இடம்பெறும். தொடர்ந்து மஹோற்சவ குரு அடியவர்களுக்கு ஆசி வழங்குவார்.

### 12 ஆம் நாள் : பிராயச்சித்த அபிஷேகம்

பன்னிரண்டாம் நாள் அதிகாலையில் பிராயச்சித்த அபிஷேகம் நடைபெறும். தொடர்ந்து காலை 8.00 மணிக்கு ஸ்நபன அபிஷேகம் இடம்பெறும்.

மாலை **பூங்காவனத்திருவிழா இடம்பெறும்** அன்றைய தினம் விசேட பூசைகள் இடம்பெற்று அம்பாள் அழகிய பூந்தண்டிகையில் பவனி வருவார்.

### 13 ஆம் நாள் : விஷேட சங்காபிஷேகம்

பதின்மூன்றாம் நாள் காலையில் 108 சங்காபிஷேகம் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூங்காவனத்தை தொடர்ந்து தேரடி வைரவர் பொங்கல் நடைபெறும். அன்றைய தினம் மாலை 4.00 மணியளவில் வைரவப்பெருமானுக்கு விஷேட அபிஷேகம் இடம்பெற்று மடை வைக்கப்படும்.

## 7. ஆடி மாதம்

மாதப்பிறப்பு, பௌர்ணமி, சதுர்த்தி, கார்த்திகை, ஆடிப்பூரம், ஆடிச்செவ்வாய், ஆடி ஆமாவாசை, வரலட்சுமி பூசை போன்றவை இடம்பெறும் தினங்களில் அபிஷேகம் நடைபெறும்.

**ஆடிச் செவ்வாய்**

ஆடி மாதத்தில் வரும் செவ்வாய்க் கிழமைகளில் அம்பாளுக்கு அபிஷேகம் நடைபெறும்.

**ஆடிப்பூரம்**

ஆடிப்பூர தினத்தன்று அம்பாளுக்கு அபிஷேகம் இடம்பெற்று பூப்புனித நீராட்டு சடங்கு இடம்பெறும். அதனைத் தொடர்ந்து அம்பாள் உள்வீதி, வெளிவீதி உலா வருவார். மதியம் அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

**ஆடி அமாவாசை**

பிதிர்க்கடன் செய்யும் அடியவர்களுக்கு மனோன்மணி தீர்த்தக் கேணியில் பிதிர்க்கடன் செய்ய வசதி செய்து கொடுக்கப்படும்.

**வரலட்சுமி விரதம்**

காலையில் அபிஷேகமும் மாலையில் தீபபூசையும் இடம்பெற்று சுக்கிரவார அம்மன் வீதி உலாவர அதனுடன் தீபம் ஏற்றிய பெண்கள் ஆலயத்தைச் சுற்றி வருவார்கள். அதனைத் தொடர்ந்து காப்புக்கட்டல் இடம்பெறும்.

## 8. ஆவணி மாதம்

மாதப்பிறப்பு, பௌர்ணமி, சதுர்த்தி, கார்த்திகை, போன்றவை இடம்பெறும் தினங்களில் அபிஷேகம் நடைபெறும்.

**ஆவணிச் சதுர்த்தி**

இத்தினத்தில் பிள்ளையார் முன்றலில் கும்பம் வைத்து விநாயகருக்கு அபிஷேகம் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து விநாயகர் உள்வீதி உலாவருவார்.

## 9. புரட்டாதி மாதம்

மாதப்பிறப்பு, பௌர்ணமி, சதுர்த்தி கார்த்திகை, நவராத்திரி தினங்கள் மற்றும் புரட்டாதிச் சனிக்கிழமைகளில் அம்பாளுக்கு அபிஷேகம் இடம்பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புரட்டாதிச் சனி**

புரட்டாதிச் சனிக்கிழமைகளில் நவக்கிரகங்களுக்கு முன் கும்பம் வைத்து அபிஷேகம் இடம்பெறும். அடியவர்கள் நவக்கிரகங்களுக்கு தண்ணீர் வார்க்கவும் அர்ச்சனை செய்யவும் எள்ளெண்ணெய் எரிக்கவும் வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

## நவராத்திரி பூஜை

இக்காலத்தில் காலையில் அம்பாளுக்கு அபிஷேகத்துடன் பூசைகள் இடம்பெற்றும் மாலையில் வசந்த மண்டபத்தில் கொலு வைத்து விசேட பூசைகள் இடம்பெற்று சகலகலாவல்லி மாலைப் பாடல்கள் பாடப்படும்.

**மகிஷாசுரன் வதை**

இத்தினத்தில் மாலை 3.00 மணிக்கு அபிஷேகம் இடம்பெற்று அம்பாள் சிங்க வாகனத்தில் எழுந்தருளி மகிஷாசுரன் வதை செய்யும் நிகழ்வு சிறப்பாக நடைபெறும். அதனைத் தொடர்ந்து பிராயச்சித்த அபிஷேகம் வசந்த மண்டபத்தில் இடம்பெறும்.

இன்றைய நாளில் பயன்படுத்தப்படும் தலைகளின் ஒழுங்கு

1. மகிஷாசுரன் (எருமைத்தலை)
2. சூரன்
3. சிங்கத்தலை
4. மான்
5. பன்றித்தலை
6. புலி
7. குதிரைத்தலை
8. கிருஷ்ணர்
9. பிரம்மா
10. மகிஷாசுரன்

**விஜயதசமி**

விஜயதசமியன்று மாலை 4 மணிக்கு அபிஷேகம் இடம்பெற்று, அம்பாள் சிவப்பு நிற குதிரை வாகனத்தில் வெளிவீதி உலாவந்து ஈசான மூலையில் வாழை வெட்டு இடம்பெறும். அதனைத் தொடர்ந்து பிராயச்சித்த அபிஷேகம் நடைபெறும்.

**கௌரி நோன்பு**

21 நாட்களும் விசேட பூசைகள் இடம்பெற்று நிறைவு நாளன்று கௌரிக் காப்பு கட்டப்படும்.

# 10. ஐப்பசி மாதம்

மாதப்பிறப்பு, பௌர்ணமி, சதுர்த்தி, கார்த்திகை, ஐப்பசி வெள்ளி போன்றவை இடம்பெறும் தினங்களில் அபிஷேகம் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஐப்பசி வெள்ளி**

இம் மாதத்தில் வரும் வெள்ளிக்கிழமைகளில் முருகப்பெருமானுக்கு அபிஷேகம் நடைபெறும் மாதத்தில் வரும் கடைசி வெள்ளிக்கிழமை விசேட சண்முக அர்ச்சனை இடம்பெற்று முருகப் பெருமான் வீதி உலா வருவார்.

**ஐப்பசிப்பௌர்ணமி**

ஐப்பசிப்பௌர்ணமி தினத்தன்று காலையில் அபிஷேகம் இடம்பெற்று அன்னப்பாவாடை சாத்தப்படும். மாலையில் அன்னப்பாவாடை அகற்றப்பட்டு கேணியில் கரைக்கப்படும்.

**தீபாவளி தினம்**

தீபாவளி தினத்தில் அம்பாளுக்கு விசேட அபிஷேகம் நடைபெறும்.

ஆலயத்தின் சகல மூர்த்திகளுக்கும் புத்தாடை அணிவிக்கப்படும்.

## 11. கார்த்திகை மாதம்

மாதப்பிறப்பு, பௌர்ணமி, சதுர்த்தி, கார்த்திகை, கார்த்திகைத் திங்கள் (சோமவாரம்) போன்றவை இடம்பெறும் தினங்களில் அபிஷேகம் நடைபெறும்.

**கார்த்திகைத் தீபம்**

அன்றைய தினம் மாலையில் அபிஷேகம் இடம்பெற்று ஆலயத்தில் தீபம் ஏற்றப்படும், பூஜைகளைத் தொடர்ந்து சுக்கிரவார அம்மன் உள்வீதி உலாவந்து கோபுர வாயிலில் நிற்கும் போது சொக்கப்பானை இடம்பெறும் அதன் பின்னர் அம்பாள் வெளிவீதி உலாவருவார்.

**கந்தசஷ்டி**

கந்தசஷ்டி காலங்களில் காலையில் வசந்தமண்டபத்தில் முருகப் பெருமானுக்கு அபிஷேகம் இடம்பெற்று சண்முக அர்ச்சனை இடம்பெறும். மாலை 4.00 மணியளவில் முருகன் சந்நிதானத்தில் கந்தஷஷ்டி கவசம் பாடப்பட்டு தொடர்ந்து முருகப்பெருமானுக்கு அபிஷேகம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து வசந்த மண்டபத்தில் விசேட பூசைகள் இடம்பெற்று முருகப்பெருமான் உள்வீதி உலாவருவார்.

இக்காலப் பகுதியில் விரதமிருக்கும் அடியார்களுக்கு தெற்பை வழங்கப்படும்.

**சூரன்போர்**

கந்தசஷ்டி நிறைவு நாளில் மாலை 3.00 மணிக்கு அபிஷேகம் நடைபெற்று சுப்பிரமணியர் கடா வாகனத்தில் எழுந்தருளி சூரனைச் சங்காரம் செய்யும் நிகழ்வு இடம்பெறும். தொடர்ந்து பிராயச்சித்த அபிஷேகம் இடம்பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சூர சங்காரத்தின் போது கீழ்வரும் ஒழுங்கில் காட்சிகள் இடம்பெறும்.**

உள் வீதியில் இருந்து வெளிவீதிக்கு எழுந்தருளி வரும் சுப்பிரமணியப் பெருமான் அக்கினி மூலைக்கு நகரும் சம நேரத்தில் சூரபன்மன் ஆலயத்தை இடஞ்சுழியாக வலம் வந்து அக்கினி மூலையில் சுப்பிரமணியரை ஒரு முறை வலம் வந்து திரும்பிச் செல்லல்.

தொடர்ந்து, சுப்பிரமணியப் பெருமான் தெற்கு வாயிலை நோக்கி நகர்ந்து செல்ல தாரகாசுரன் போருக்கு வந்து தெற்கு வாயில் நேரில் சுப்பிரமணியப் பெருமானால் சங்காரம் செய்யப்படுதல்.

அதனைத் தொடர்ந்து சுப்பிரமணியப் பெருமான் நிருதிமூலை (தென்மேற்கு) நோக்கி நகர பானுகோபன் போர் செய்து இயலாது திரும்பிச் செல்லல்.

மீண்டும் பானுகோபன் போருக்கு வந்து கொல்லப்படுதல்.

தொடர்ந்து சுப்பிரமணியப் பெருமான் மேற்கு திசைக்கு நகர்ந்து செல்ல சிங்கமுகாசுரன் போருக்கு வந்து சுப்பிரமணியப் பெருமானுடனான போர் புரிந்து வாயு மூலையில் (வடமேற்கு மூலை) மடிந்து போவார் .

தொடர்ந்து வடக்கு வீதியில் சூரபன்மன் சுப்பிரமணியர் போர் இடம்பெறும்.

- உத்தரியம், மாலையை இழத்தல்
- அம்பு, வில் இழத்தல்.
- வாள் உடைதல்.
- இருளில் மறைந்து வந்து தோற்றுப்போதல்.
- மாமரத்தில் மறைந்து இருந்த போது சங்காரம் செய்யப்படுதல்.
- நிறைவாக ஈசான மூலையில் (வடகிழக்கு) நெஞ்சு பிளக்கப்பட்டு சேவலும் மயிலுமாக வெளிப்படல்.

தொடர்ந்து சூர சங்காரத்திற்கு மறுநாள் காலையில் பாறணை அபிஷேகமும் தொடர்ந்து சண்முக அர்ச்சனையும் இடம்பெறும் அன்றைய தினம் மாலை திருக்கல்யாணமும் திருவூஞ்சலும் இடம்பெற்று வள்ளி தெய்வானை சமேதராக முருகப்பெருமான் உள்வீதி, வெளிவீதி உலா வருவார்.

## 12. மார்கழி மாதம்

மாதப்பிறப்பு, பௌர்ணமி, சதுர்த்தி, கார்த்திகை, திருவெம்பா,விநாயகர் சஷ்டி போன்றவை இடம்பெறும் தினங்களில் அபிஷேகம் நடைபெறும்.

**திருவெம்பா**

திருவெம்பா தினங்களில் காலை 5 மணிக்கு திருப்பள்ளியெழுச்சி, அபிஷேகம் நடைபெற்று வசந்தமண்டபத்தில் உற்சவ மூர்த்திக்கு விசேட பூசைகள் இடம்பெற்று திருவெம்பாப் பாடல்கள் பாடப்படும். பத்தாம் நாள் (நிறைவு நாள்) ஆருத்ரா தரிசனம் அன்றைய தினம் உதயம் 4.30 மணிக்கு ஆரம்பித்து அபிசேகம் பூசைகள் நடைபெற்று, திருவூஞ்சல் பாடப்பட்டு அம்பாள் உள் வீதி உலா வருவாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதி துணை

# கொக்குவில் கிழக்கு நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் பேரில்

பாடிய

# திருவூஞ்சல்

**காப்பு**

சீரேறு செம்பதும மலரில் ஏறும்
திருவேறு மார்பனுடன் அயனும் தேடும்
தாரேறு கொன்றைமலர் முடியி லேறச்
சங்கவெண் குழைதோடு பொலிந்தே யேற
ஏரேறு கொக்குவிற்கற் புலத்தில் மேவும்
எழிலேறு மனோன்மணிமேல் ஊஞ்சல் பாட
காரேறு மங்குசத்தி னோடு பாசம்
கரத்தேறு கணபதிதாள் கருத்துள் வைப்பாம்

**நூல்**

கொண்டல்வளர் கனகவரை விட்ட மாகக்
குலவுகுலா சலங்கள்மணிக் கால்க ளாக
பண்டைமறை யொருநான்கும் கயிற தாகப்
பலபுவனக் கோடிகள்பொற் பலகை யாக
அண்டர்நடு அமரர்கோன் பதியே நல்ல
அரிகொள்நவ ரத்தினமணிப் பீட மாக
மண்டல மெலாம்புகழ்கற் புலத்தின் மேவும்
மாதுமையாம் மனோன்மணியே ஆடீர் ஊஞ்சல் -01-

விண்ணுலவு மிருசுடர்கள் தீப மாக
விளங்குபல தாரகைகள் விதான மாக
தண்ணுலவு சந்தான முதலா வைந்து
தனமலர்கள் நறுமலர்ப்பூம் பந்த ராக
எண்ணுலவு மிளந்தென்றல் கவரி யாக
இலங்குபகி ரண்டமணி மஞ்ச மாக
அண்ணல்வளந் திகழ்தருகற் புலத்தில் வாழும்
அம்மையாம் மனோன்மணியே ஆடீர் ஊஞ்சல் -02-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யவெண்டா மரைமலரிந் திரைசீர் வாணி
செகமுழுது நிழற்றுவெள்ளைக் கவிகை கொள்ள
துய்யபகீ ரதிதவளக் கவரி வீசத்
தோகைஅயி ராணிசெம்பொற் படிக மேந்த
ஜயைபயி ரவிமுதலோர் அடைப்பை தாங்க
அஞ்சுகமும் குயில்கூவ மஞ்ஞை யாட
பெய்முகில் வளர்சோலைக் கற்புலத்தின்
பெண்ணரசி மனோன்மணியே ஆடீர் ஊஞ்சல் -03-

தகரமணங் கமழ்மண்பொன் மலிவு மின்ன
சகிக்கலைகள் மானுநெற்றி அணிகள் துன்ன
மகரவணி குண்டலத்தோ டிகலி நீல
வரியக்கயல்கள் பாய்கழனி ஆம்பல் மேவ
நிகரில்லா மைந்தர்கள் நியப்பூ வார
நிரைவடமுத் தரியமிசை நிழல்கள் வீச
புகரில்மறை தேடுகின்ற கற்புலம் சேர்
பொற்பதிவாழ் மனோன்மணியே ஆடீர் ஊஞ்சல் -04-

தும்புருநா ரதர்முதலோர் கீதம் பாட
துய்யஉருப் பசிமுதலோர் நடன மாட
அம்பரமே லவர்பாரி சாத மேவு
மலர்மழைபொன் மழைபோல மகிழ்ந்து வீச
செம்பதுமக் கன்னியொடு நாவு மாதும்
திகழுமிரு கரத்தாலும் வடந்தொட் டாட்ட
அப்புவியில் வளம்மிகும்கற் புலத்தில் வாழும்
அம்மையாம் மனோன்மணியே ஆடீர் ஊஞ்சல் -05-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரமே முதலான ஆதிதேவர்
மன்றில்நட ராசன்பர் மனதில் வாச
சிந்தையுவந் தினிதிருக்கும் வானு லாவும்
திங்கள்வே றெனத்திகழும் புருடர் ஒன்றைத்
தந்தனுடன் கந்தன்மடி மிசையே மேவ
சகலவுயிர் களுமேவாழ்க தரையோ ருய்யச்
செந்திருவாழ் கொக்குவிற்கற் புலத்தில் மேவும்
தேவியுமா மனோன்மணியே ஆடீர் ஊஞ்சல் -06-

கதிராரு மணியணிகுண் டலங்க ளாடக்
கனகபணி யணிவளைகொள் கவின்க ளாடப்
புதிதான கொன்றையணிக் குஞ்ச மாட
பொற்றருவின் மலர்மாலை பொலிந்தே யாட
மதிபோலு நுதலிலணி சுட்டி யாட
வனசமல ரடியிணைகள் சிலம்பு மாட
அதிகவளக் கொக்குவிற்கற் புலத்தில் வாழும்
அம்மையாம் மனோன்மணியே ஆடீர் ஊஞ்சல் -07-

பவர்முதலாம் உருத்திரர்பண் ணவர்கள் மூன்று
பத்துடனே முக்கோடி பதுமன் மாலோர்
இவர்களுடன் இந்திரனக் கினியோன் காலன்
இனியகூர் மாண்டனுடன் ஆட கேசன்
தவர்களுமா கமங்கள்சதுர் வேத மோத
சதகோடி சக்திகளும் பாங்கின் மேவ
அவனிபுகழ் கொக்குவிற்கற் புலத்தில் வாழும்
அபிராமி மனோன்மணியே ஆடீர் ஊஞ்சல். -08-

உரகபதி நகரெட்டுங் கால்க ளாக
ஓங்குபுவி தவிசிருப்ப உம்பர் மேலா
விரவுமொரு விதானமா யுடுங்கள் பூவாய்
விதுவுடனே கதிர்களொளி யாடி யாக
பொருவிலகி லாண்டநிறை மன்ற மாக
பொருந்திஉயிர் பரந்தருளு மன்னர் மன்னன்
வரைமகளாம் கொக்குவிற்கற் புலத்தில் மேவும்
மாதுமையா மனோன்மணியே ஆடீர் ஊஞ்சல் -09-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழி

சங்கராதம் இருகருணை விழிகள் வாழி
சாரும் அருட் சிவகாம வல்லி வாழி
பொங்குகடல் சூழ்வாயிற் புலவர் வாழி
பூசுரரும் கோவினமும் பொலிந்து வாழி
ஜங்கரரோ டருஞ்ஷேத்திர பாலர் வாழி
அரசர்கோன் முறைவாழி அமரர் வாழி
திங்கள்முகில் மும்மாரி பொழிந்து வாழி
செகம்புகழ்கொக் குவில்நகரம் சிறந்து வாழி -10-

## மங்களம்

பூரணி புராதனிக்கு ஜெயமங்களம் - சுப
புவனேஸ்வரி யம்மைக்கு சுபமங்களம்
நாரணியாம் நந்தினிக்கு ஜெய மங்களம் - சுப
தாரணி உமாதேவிக்கு சுபமங்களம்
தாட்சாயணி யம்மைக்கு ஜெயமங்களம் - சுப
புவனேஸ்வரி யம்மைக்கு சுபமங்களம்
மோட்சமருள் மோகினிக்கு ஜெயமங்களம் - சுப
மாலினி மனோன்மணிக்கு சுபமங்களம்
பார்வதி பரஞ்சோதிக்கு ஜெயமங்களம் - ஜெயமங்களம் - சுப
பரமேஸ்வரி யம்மைக்கு சுபமங்களம்
கார்குழற்கற் புலத்தாய்க்கு ஜெயமங்களம் - சுப
கருணாகரி யம்மைக்கு சுபமங்களம்
திக்கு எட்டுப் பாலகர்க்கு ஜெயமங்களம் - சுப
தீனதயா பரியார்க்கு சுபமங்களம்
கொக்குவில்கற் புலத்தார்க்கு ஜெயமங்களம் - சுப
கோதை மனோன்மணிக்கு சுபமங்களம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்புலத்து மனோன்மணியம்மை பேரிலான கீர்த்தனைகள்

**ராகம் : கல்யாணி** **தாளம் : ஆதி**

**பல்லவி**

கற்புலம் வாழும் மனோன்மணியே - உந்தன்
பொற்பாதம் பாடிப் பணிவேனே - தினம்

**அனுபல்லவி**

கற்பகமே நித்திய கல்யாணி அம்மா
நற்கதி யருள்வாய் தாரணியே உமா

**சரணம்**

கொக்குவிற் பதியில் கொண்டிலங்கு நந்தாவில்
கற்புல மமர்ந்த பொற்கொடியே தேவி
திக்கு பேறில்லையம்மா தீனதயாபரி
திரிபுர சுந்தரி சேயெனை ஆதரி

**ராகம் : ரஞ்ஜனி** **தாளம் : ஆதி**

**பல்லவி**

மாமனோன் மணித்தாயே உந்திரு
மலரடி பணிய வரமது தாராய்

**அனுபல்லவி**

தாமதமேனோ தயாபரி சங்கரி
தேமலர் மலியும் சோலைக்கற் புலத்து

**சரணம்**

அன்னையே நின்னடி அன்றியிவ் வுலகினில்
ஆதர வேது? நீயறி யாயோ?
பன்னக பூஷண பார்வதி ஈஸ்வரி
மன்னன் சிவன்மருவும் மனோஹரி ரஞ்ஜனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ராகம்: பாகேஸ்ரீ** **தாளம்: ஆதி**

**பல்லவி**

புன்னகை ஒன்று போதுமம்மா தாயே
மன்னிடும் கற்புலத்து மனோன்மணியே உந்தன்

**அனுபல்லவி**

பொன்னும் பொருளும் வேண்டேன்
புகழும் பொய்வார்த்தை வேண்டேன்
அன்னமே அம்பிகையே
அன்பனெனக் கருளும்

**சரணம்**

நந்தாவில் கற்புலத்து நாயகியே உமா
இந்தா வென்றெனக்கருள் இரங்கிடுவாய் அம்மா
செந்தாமரை முகத்தோய் ஜெயதீஸ்வரி தேவி
நிந்தாளைநான் துதிக்க நீயும் அருள் புரியும

# வரலட்சுமி விரதம்



ஆவணி மாதத்தில் பௌர்ணமிக்கு முன் வரும் வெள்ளிக்கிழமையன்று வரலட்சுமி விரதம் கடைப்பிடிக்கப்படும் (இது சில சமயங்களில் ஆடிமாதத்தில் வரலாம்)

இவ் விரதமிருப்பவர்கள் வீட்டிலே பூசையறையில் பூசைக்கான இடத்தைத் தயார் செய்து அதில் நுனி வாழையிலையில் முழு நெல் அல்லது பச்சை அரிசி பரப்பி அதன் மேல் பூசைக்கான கலசத்தை வைப்பர். அக் கலசத்தினுள் அட்சதை போட்டு (முழு நெல் அல்லது பச்சையரிசி) வரலட்சுமியை ஆவாகனம் செய்து பூமாலை சாத்தி விளக்கேற்றி நைய்வேத்தியம் படைத்து வரலட்சுமி பாடல்களைப் பாடி பூக்களால் அர்ச்சித்து தூபதீபம் காட்டி வணங்குவர்.

பூசையிலே ஒன்பது இழைகளைக் கொண்ட நூலில் ஒன்பது முடிச்சுக்களை முடிந்து மஞ்சள் பூசி கும்பத்திலே வைத்து வழிபாடாற்றுதல். பூசை நிறைவில் கும்பத்திலே வைக்கப்பட்ட நூலினை எடுத்து பெண்கள் வலது மணிக்கட்டில் கட்டிக் கொள்ள வேண்டும்.

இவ்விரதமிருப்பதால் திருமணமான பெண்களுக்கு வீட்டிலே சுபீட்சமும் குடும்ப ஒற்றுமையும் கை கூடி மாங்கல்ய பலம் அதிகரிக்கும். பிள்ளை இல்லாதவர்களுக்கு பிள்ளைப் பாக்கியம் கிடைக்கும். திருமணமாகாத பெண்களுக்குத் திருமண பாக்கியமும் சகல சௌபாக்கியங்களும் கிடைக்கும். வீட்டிலே இவற்றைச் செய்ய வசதி இல்லாதவர்கள் ஆலயங்களில் நடைபெறும் பூசைகளில் கலந்து கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி வீதி உலா வரும் விசேட தினங்கள்

## உள்வீதி உலா

- சுக்கிரவார உற்சவம் - வெள்ளிக்கிழமை தோறும் நடைபெறும் மாலை உற்சவம்
- மாதப்பிறப்பு
- கந்தசஷ்டி தினம்
- கௌரி நோன்பு நிறைவு
- ஆவணிச்சதுர்த்தி
- விநாயகர் சஷ்டி

## வெளிவீதி உலா

- வருடாந்த மகோற்வசம்
- சூரசங்காரம்
- மகிஷாசூரசங்காரம்
- மானம்பூ திருவிழா (வாழை வெட்டு)
- தைப்பூசம்
- ஆடிப்பூரம்
- சிவராத்திரி
- மணவாளக்கோலம்
- இலட்சார்ச்சனை பூர்த்தி
- கந்தசஷ்டி - திருக்கல்யாணம்
- மார்கழித் திருவாதிரை (ஆருத்ரா தரிசனம்)
- திருக்கார்த்திகை

## தெரு வீதி உலா

- தைப்பொங்கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலயத்தில் அடியார்கள் நிறைவு செய்யக்கூடிய வழிபாடுகள்

**அபிஷேகங்கள்**

- திரவிய அபிஷேகம்
- உருத்திர அபிஷேகம்
- ஸ்நபன அபிஷேகம்
- 108 சங்காபிஷேகம்
- 1008 சங்காபிஷேகம்
- நவக்கிரக சாந்தி அபிஷேகம்
- சந்தனக்காப்பு
- வீபூதிக்காப்பு
- குங்குமக்காப்பு
- நவக்கிரகங்களுக்கு தண்ணீரால் அபிஷேகம்

**அர்ச்சனைகள்**

- சாதாரண அர்ச்சனை
- காளாஞ்சி அர்ச்சனை
- பூசைப்பெட்டி
- அஷ்டோத்திர அர்ச்சனை (108 வில்வம்)
- சகஸ்ரநாம அர்ச்சனை (1008)
- குங்கும அர்ச்சனை

## ஆலயத்தில் அடியார்கள் பெற்றுக்கொள்ளக் கூடிய ஏனைய வசதிகள்

- திருமண நிகழ்வு
- திருமண நிகழ்வு மண்டபம்
- குடிபுகுதல் படம் எடுத்தல்
- அன்னப் பிராசனம் (சோறு தீத்துதல்)
- நூல் கட்டுதல்
- ஏடு தொடக்குதல்
- சாந்தி செய்தல்
- பிதிர் தர்ப்பணங்கள் (துடக்குக் களித்தல்)
- வீட்டுக்கிருத்தியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயத்தில் பூசை செய்த சிவாசாரியார்கள்

வரலாற்றுக்குறிப்புகளின்படி இவ்வாலயம் பிராமண குலத்தைச்சேர்ந்த சிவாசாரியார்களாலேயே பூசை செய்யப்பட்டு வந்துள்ளது. 1940 ஆம் ஆண்டுக்கு முன் இவ்வாலயத்தில் கடமை செய்த சிவாசாரியார்களின் பெயர்களையும் ஆண்டுகளையும் ஒழுங்கு முறையாக குறிப்பிட முடியவில்லை. ஆயினும் இக்கால கட்டத்தில் நீண்ட காலமாக பூசைகளை சிவஸ்ரீ சின்னையா ஐயர் என்பவர் சிறந்த முறையில் மேற்கொண்டு வந்துள்ளார் என அறியமுடிகிறது. அவருக்குப்பின் அவரது பிள்ளைகளான மார்க்கண்டு ஐயர், சின்னத்தம்பி ஐயர், வேதர் ஐயர் ஆகியோர் கடமையாற்றினராயினும் சிவஸ்ரீ சின்னத்தம்பி ஐயரே 1942 ஆம் ஆண்டுகளில் பூசைகளை ஆலய வீதியில் உள்ள வீட்டில் தங்கியிருந்து ஆற்றி வந்தார். இவ்வாண்டிலே ஆலயத்தைப்பரிபாலனம் செய்ய உருவாக்கப்பட்ட பரிபாலனசபை உறுதியானதாக இருந்ததுடன் புதிய சட்டதிட்டங்களை உருவாக்கி ஆலயத்தைப் பரிபாலனம் செய்ய முற்பட்டது. இவற்றிற்கு கட்டுப்பட விரும்பாத காரணத்தினால் தர்மகர்த்தா சபையினால் அவர் பணியிலிருந்து நீக்கப்பட்டார்.

அவருக்குப்பின் கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த சதாசிவம் சிவாசாரியாரும் அவருக்குப்பின் சிவஸ்ரீ சண்முகநாத சிவாசாரியார் அவர்களும் பூசை செய்து வந்தனர். 1945 ஆம் ஆண்டளவில் வேதர் ஐயரின் மகனான நடராசா சிவாசாரியார் தர்மகர்த்தாக்களால் பூசகராக நியமிக்கப்பட்டார். அவரது மறைவின் பின் அவரது மருமகனான சிவஸ்ரீ முத்துக்குமார சாமி குருக்கள் பூசகராக நியமிக்கப்பட்டார். இவர் நீண்ட காலம் சிறப்பாகப் பூசைகளை ஆற்றியதுடன் ஆலய வளர்ச்சிக்கும் உதவினார். சிவஸ்ரீ முத்துக்குமார சாமி குருக்களின் மறைவிற்கு பின் அவரது மகனான சிவஸ்ரீ ஜெயந்திநாத குருக்கள் பிரதான பூசகராக நியமிக்கப்பட்டார். இவர் நித்திய நைமித்திய பூசைகளை மிகச்சிறப்பாக மேற்கொண்டதுடன் மக்களது பாராட்டிற்கும், நன்மதிப்பிற்கும் உரியவராக இருந்தார்.

1995 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட போர்ச்சூழல் காரணமாக இடம்பெயர்ந்து வவுனியாவிற்கு சென்ற சிவஸ்ரீ ஜெயந்திநாதக் குருக்கள் மீண்டும் திரும்பிவராத காரணத்தினால் அவரது சகலனான சிவஸ்ரீ வரதராஜசர்மா சில காலம் பூசைகளை மேற்கொண்டார். அவரால் தொடர்ந்து கடமையாற்ற முடியாது போகவே 1997 ஆம் ஆண்டு தை மாதம் முதல் புன்னாலைக்கட்டுவனைச்சேர்ந்த சிவஸ்ரீ சபாரத்தினக்குருக்கள் சிவஸ்ரீ சந்தனக்குருக்கள் பரிபாலன சபையினரால் ஆலயப்பிரதம குருவாக 2 வருடங்களிற்கு ஒப்பந்த அடிப்படையில் பூசைகளை ஆற்றுவதற்கு நியமிக்கப்பட்டார். இவரது சேவையின் திருப்தி காரணமாக காலத்திற்குக் காலம் நியமனம் புதுப்பிக்கப்பட்டு 2013 ஆம் ஆண்டுவரை கடமையாற்றச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

தொடர்ந்து கடமையாற்ற சிவஸ்ரீ சந்தனக்குருக்கள் விரும்பாதமையால் அவரைத் தொடர்ந்து சிவஸ்ரீ பால சுப்பிரமணியக் குருக்கள் 2013மார்ச் மாதம் முதல் பூசைகளை ஆற்ற நியமிக்கப்பட்டார். அவரைத் தொடர்ந்து 2013 யூலை மாதம் முதல் சிவஸ்ரீ நடேசக்குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- குமரகுருபரகுருக்கள் பூசைகளை ஆற்ற ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டார். காலத்திற்கு காலம் அவரது ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டு கடமையாற்ற அனுமதிக்கப்பட்டார். அவர் வெளிநாடு செல்வதற்கு அனுமதி கோரிய போது அதற்கு அனுமதித்து 01.02.2020 முதல் சங்கத்தானை சாவகச்சேரியைச் சேர்ந்த சிவஸ்ரீ முரளீதரக் குருக்கள் - வித்தியானந்தக் குருக்கள் ஒப்பந்த அடிப்படையில் பூசகராக நியமிக்கப்பட்டார்.

சிவஸ்ரீ வித்தியானந்தக் குருக்களும் தனிப்பட்ட காரணங்களினால் தொடர்ந்து கடமையாற்ற முடியாது போகவே அவ்விடத்திற்கு 04.02.2021 முதல் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சிவஸ்ரீ மனோகரக்குருக்கள் நிரூபன் குருக்கள் நியமிக்கப்பட்டு கடமையாற்றி வருகின்றார்.

## கேதாரகௌரி விரதம்



புரட்டாதி மாத சுக்கிலபட்ச தசமி திதிமுதல் ஐப்பசி மாத கிருஷ்ணபட்ச தீபாவளி வரையிலும் இவ்விரதம் அனுஷ்டிக்கப்படுகின்றது. இவ்விரதம் இருப்பவர்கள் சிவலிங்கத்தை அமைத்து கும்பம் வைத்து வில்வம், கொன்றை, தும்பை முதலான மலர்களால் அர்ச்சித்து 21 எண்ணிக்கை கொண்ட வெற்றிலை, பாக்கு, பழம், வடை, அப்பம், பாயாசம், சர்க்கரை சாதம், புளிச்சாதம், லட்டு முதலிய நெய்வேத்தியம் படைத்து தூபதீபம் காட்டி சோடோபசார பூசை செய்து கேதீஸ்வரரை நினைத்து வழிபாடாற்ற வேண்டும். 21 நாட்களும் பூசையில் வைக்கப்பட்ட 21 முடிச்சுக் கொண்ட நூலினை 21ஆவது திதியான அமாவாசைத்திதியில் இடது கையில் கட்டிக் கொள்ள வேண்டும்.

## விரதம் அனுஷ்டிப்பதால் கிடைக்கும் பலன்

- ♣ நோய் பிணியிலிருந்து விடுபட்டு சுகம் கிடைக்கும்,
- ♣ வறுமை நீங்கிச் செல்வம் கிடைக்கும்,
- ♣ கன்னியர்களுக்குத் திருமணம் கைகூடும்,
- ♣ கணவன் மனைவிக்கிடையில் ஒற்றுமை நிலைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலயத்தில் நிறைவேற்றப்பட்ட முக்கிய திருப்பணிகளும் நிகழ்வுகளும்

| ஆண்டு | நிறைவேற்றப்பட்ட திருப்பணி |
|---|---|
| 1784 | கற்கோவில் அமைக்கப்பட்டது |
| 1921 | இராஜ ராஜேஸ்வரி அம்பாள் பிரதிஸ்டை |
| 1922 | மனோன்மணி அம்பாள் பிரதிஷ்டை மகா கும்பாபிஷேகம் |
| 1930 | பரிவாரக்கோவில் அமைப்பு |
| 1938 | பொது நிர்வாகம் உருவாதல் |
| 1943 | கோவில் நிர்வகிப்பதற்கான சட்ட விதிகள் |
| 1953 | தீர்த்தக்கேணி, செங்கழுநீர்த்தொட்டி அமைக்கப்பட்டமை |
| 1966 | புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் |
| 22.01.1966 | புனராவர்த்தன மஹா கும்பாபிடேகம் - மலர் வெளியீடு |
| 1968 | வடக்குப்பக்க காண்டாமணிக்கோபுரம் அமைப்பு |
| 19.01.1982 | கோபுர மஹா கும்பாபிடேகம் |
| 03.09.1982 | புனராவர்த்தன மஹா கும்பாபிடேகம் - மலர் வெளியீடு |
| 19.03.1985 | மஹா கும்பாபிடேகம் புதிய அம்பாள் விக்கிரகம் பிரதிஷ்டை<br>தம்பப்பிள்ளையார் பிரதிஷ்டை<br>சண்டேஸ்வரி, நவக்கிரகக் கோவில்கள் நிர்மாணிப்பும் பிரதிஷ்டையும் |
| 1986 - 1991 | வழிபடுவோர் சங்கம் இயங்குதல் |
| 18.03.1991 | பரிபாலனசபை, வழிபடுவோர் சங்கம் இணைந்து இடைக்கால நிர்வாக சபை உருவாதல் |
| 27.03.1991 | புனராவர்த்தன மகாகும்பாபிடேகம் - புதிய அம்பாள் விக்கிரகம் பிர-திஷ்டை |
| 13.12.1992 | முதலாவது வழிபடுவோர் மகாசபைக்கூட்டம், பரிபாலன சபை உறுப்பினர் தெரிவு |
| 25.05.1994 | கைலாச வாகன வெள்ளோட்டம் |
| 30.12.1995 - 26.04.1996 | கோயில் பூட்டப்பட்டிருத்தல், இராணுவ நடவடிக்கை |
| 18.01.1997 | ஒப்பந்த அடிப்படையில் சிவஸ்ரீ சந்தனக்குருக்கள் நியமனம், அர்ச்சனைச்சீட்டு, வவுச்சர் முறை அறிமுகம் |
| 1999 | வில் வடிவமான உள் சுற்றுப்பிரகார கொட்டகை சீமெந்தினால் அமைக்கப்பட்டது. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 2001 | பிரமாணத்திற்கமைவாக முருகன், சண்டேஸ்வரி சந்நிதானங்க-ளின் இருப்பிட அமைப்பில் மாற்றம் செய்யப்பட்டு கும்பாபிடேகம் இடம் பெற்றது. |
| 28.01.2001 | மனோன்மனி அம்பாள் திருமண மண்டபம் திறப்பு விழா |
| 08.07.2001 | மூன்றாவது வழிபடுவோர் மகாசபைக்கூட்டம் பரிபாலனசபை உறுப்பினர் தெரிவு |
| 11.06.2003 | பிரமாணத்திற்கமைவாக பிள்ளையார் சந்நிதானம் புனருத்-தாரணம் செய்யப்பட்டு கும்பாபிடேகம் இடம்பெற்றது. |
| 2004 | மஞ்சம் வெள்ளோட்டம் |
| 2004 | தீர்த்தக் கொட்டகை அமைத்தல், கேணியைச் சுற்றி கற்சுவர் அமைத்தல் |
| 21.03.2008 | புனராவர்த்தன மகாகும்பாபிடேகம், அதிகார நந்தி பிரதிஷ்டை |
| 29.08.2010 | நான்காவது வழிபடுவவோர் மகாசபைக்கூட்டம், பரிபாலனசபை உறுப்பினர் தெரிவு |
| 2010 | குருக்களுக்கான வீடு நிர்மாணம் |
| 2011 | உதவி ஐயா வீடு நிர்மாணம் |
| 20.04.2013 | ஒப்பந்த அடிப்படையில் சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக் குருக்கள் நியமனம் |
| 28.07.2013 | ஒப்பந்த அடிப்படையில் சிவஸ்ரீ குமரகுருபரக்குருக்கள் நியமனம் |
| 05.05.2014 | தெற்குவாசல் கோபுர கும்பாபிடேகம், 5ஆவது வழிபடுவோர் மகாசபைக்கூட்டம், பரிபாலன சபை உறுப்பினர் தெரிவு |
| 15.01.2020 | ஒப்பந்த அடிப்படையில் சிவஸ்ரீ வித்தியாதரக்குருக்கள் நியமனம் |
| 24.06.2020 | புனராவர்த்தன மகா கும்பாபிடேகம் |

## சதுர்த்தி, கார்த்திகை

சதுர்த்தி, கார்த்திகை தினங்களில் அந்தந்த பரிவார மூர்த்தி சந்நிதானங்களில் கும்பங்களை வைத்து பிரதானமாகக் கருதுகின்ற கும்பத்தை வீதிப்பிரதட்சணம் செய்து அபிஷேகம் பூசைகளை நிறைவேற்றுதல்.

பிரசாதமானது அனைவருக்கும் அம்பிகையின் பார்வையிலேயே வழங்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

கொக்குவில் கிழக்கு நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தின் 2020ஆம் ஆண்டிற்கான ஜீர்ணோர்த்த அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் அம்பாளது அருட்பார்வையினால் சிறப்பாக நிறைவேறியுள்ளது. எமது பரிபாலனசபையில் கும்பாபிஷே கத்தை 2020இல் நடாத்தவேண்டும் எனத் தீர்மானித்து, புனருத்தாரண வேலைகளை 31.10.2019இல் ஆரம்பித்து, மிகக் குறுகிய காலத்தில் நிறைவு செய்துள்ளோம். இக்கைங்கரியத்திற்குரிய வலுவினையும் வல்லமையையும் வழங்கி தோன்றாத் துணையாக நின்று வழி நடத்திய அன்னை மனோன்மணியின் அருளை எண்ணி வியந்து அவள் தாள் பணிந்து வணங்குகின்றோம்.

ஆலயத்தின் சுற்றுப்புறச் சுவரில் அமைக்கப்பட வேண்டிய கர்ணக்கூடுகள், மையசாலைகள் என்பவற்றுடன் அவற்றிலே வைக்கப்படவேண்டி அம்பாளின் திருவுருவங்கள் போன்றவற்றை 15.03.2020 இற்கு முன் நிறைவு செய்து தரவேண்டும் என அராலியூர் ஸ்தபதி நவரத்தினம் கங்கை அமரன் அவர்களிடம் நாம் கேட்ட போது அதற்கு அவர் உடன்பட்டு உள்ளூர்க் கலைஞர்களையும் இந்தியக் கலைஞர்களையும் ஈடுபடுத்தி உரிய காலத்திற்கு முன்னதாகவே அவ்வேலைகளை மிகச்சிறப்பாக நிறைவு செய்து தந்திருந்தார். அவரிற்கும் அவரோடு பணியாற்றிய அத்தனை உள்ளங்களிற்கும் பரிபாலன சபையின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆலயத்தின் கோபுரம், சுவர்கள், சிற்பங்கள் போன்றவற்றிற்கு அழகுற வர்ணம் தீட்டியும், சிற்பங்களை கலை நுணுக்கத்துடன் அழகுபடுத்தியும் சுவர் ஓவியங்களை பேசும் படைப்புகளாக வரைந்தும் உதவிய ஓவியர் தே. தணிகாசலம் (ரவி) அவர்களிற்கும் அவரோடு இணைந்து பணியாற்றிய பணியாளர்களிற்கும் உளங்கனிந்த நன்றிகள்.

ஆலய புனருத்தாரண வேலைகளிற்குப் பெருமளவு நிதி தேவைப்படும் வேளைகளில் எல்லாம் அவற்றை உள்ளூரிலும் வெளியூரிலும் உள்ள அடியார்கள் வாரி வழங்கியிருந்தார்கள். உள்ளூர் அடியவர்கள் சிறுதுளியாக நினைத்து வழங்கிய நிதி பெருமளவு பயன் தந்துள்ளமை பற்றி இங்கு குறிப்பிட்டுக் கூறவேண்டியது எமது கடமையாகும். அதே போல் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் தாம் நினைந்துருகி வழிபட்ட அம்பாளுக்கு அவ்வப்போது தம்மாலான நிதியை வழங்கியுதவும் வெளிநாடுகளில் வாழும் அம்பாள் அடியவர்களது பங்கு எமக்கு மிகப்பெரிய பலமாகும்.

கனடா நாட்டிலிருந்து திரு.து.சுபாஸ்கரன், திரு.இ.பரமேஸ்வரன், திரு.இ.உதயகுமார் ஆகியோரும் லண்டனிலிருந்து தொழிலதிபர் திரு.க.சுசீந்திரன் அவர்களும் திரு.த.பிரேமராஜன் அவர்களும் அவுஸ்திரேலியாவிலிருந்து திரு.த.அருள் வர்மன் அவர்களும் தாம் வசிக்கும் நாடுகளிலிருக்கும் அம்பாளின் அடியவர்களிடம் இருந்து பணத்தைச் சேர்த்து அனுப்பியதுடன் திருப்பணிக்காக தங்களுடைய பங்களிப்புக்களையும் நல்கியுள்ளார்கள். அவர்களுக்கும் வெளிநாடுகளிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரடியாக நிதியுதவி அளித்தோருக்கும் ஆலய பரிபாலன சபை சார்பில் எமது நன்றியைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகிறோம்.

மேலும் கனடாவில் இருந்து தேவைப்படும் போதெல்லாம் ஆலயத்திற்கு நிதியுதவி வழங்கும் அம்பாளின் அடியவர் வர்த்தகர் திரு.மகேந்திரன் சுரேந்திரன் அவர்கள், ஆலய வீதியின் ஒரு பகுதிக்கு (தார் மற்றும் கொங்கிறீட் இட்டு) செப்பனிடுவதற்கும் தேர் முட்டியில் ஏறுவதற்குரிய படியின் மேற்பகுதியில் கர்ணக்கூடுகள் அமைத்து அழகுபடுத்தவும் பண உதவியினை நல்கியுள்ளார், அவருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் எமது மனப்பூர்வமான நன்றியை இச் சந்தர்ப்பத்தில் பகிர்வதில் மனநிறைவடைகிறோம்.

ஆலயத்திற்கு வர்ணம் தீட்டி அழகுபடுத்துவதற்காக பெரும்தொகை நிதி வேண்டும் என்று சிந்தித்த போது அமெரிக்காவில் வசிக்கும் திரு.மு.சண்முகரத்தினத்தின் பிள்ளைகளான திரு.ச.சாந்திகுமார், திரு.ச.சுகுமார் ஆகியோர் கோபுரத்திற்கு வர்ணம் தீட்டும் செலவை பொறுப்பேற்று பெரும் நிதிப் பங்களிப்பை செய்திருக்கிறார்கள். திரு நல்லைநாதனின் பிள்ளைகள் அம்பாள் கர்ப்பக்கிருக விமானம், ஸ்தூபி ஆகியவற்றிற்கு வர்ணம் தீட்டும் செலவை தாம் பொறுப்பேற்கிறோம் என்று கூறி குறித்த திருப்பணி வேலைகள் சிறப்புற அமைய பங்களிப்பினை நல்கியிருந்தார்கள். அதேபோன்று ஆலய மணிமண்டபத்திற்கு ரெறாசோ இடுவதற்கு வேண்டிய நிதியை இங்கிலாந்தில் வசிக்கும் திரு.க.சுசீந்திரன் அவர்களும் மணிமண்டபத்தை பாதுகாப்பதற்காக வெள்ளிரும்பிலான படல் போடுவதற்குரிய செலவை வைத்திய நிபுணர் திரு.சி.இராஜேந்திரா அவர்களும் தந்து உதவியிருக்கிறார்கள். அம்பாளின் அடியவர்களாக இருந்து அவள் ஆலயம் அழகுற வேண்டும் என்ற அவாவுடன் தங்கள் பங்களிப்புக்களை வழங்கிய அத்தனை பெரு மக்களுக்கும் அம்பாளது அருளை வேண்டி ஆலய பரிபாலன சபையின் சார்பில் நன்றி பகர்ந்து மகிழ்வடைகிறோம்.

ஆலயத்தின் பல்வேறு திருப்பணிகளுக்கும் காலத்திற்கு காலம் தன்னாலான உதவிகளை மனநிறைவோடு வழங்குவதுடன் அம்பாளின் திருப்பணிகளை நேரடியாக வந்து பார்வையிட்டு எம்மை ஊக்கப்படுத்தும் உள்ளூர் வர்த்தகர்களான திரு. சே.வேல்முருகு அவர்களும் திரு.ச.கதிர்காமதம்பி அவர்களும் மாபிள் பதிப்பதற்கும் ஸ்நபன மண்டப மேற்புற பிரிசுவரில் பிள்ளையார், அம்பாள், முருகன் திருவுருவங்களை சீமெந்தினால் செய்விப்பதற்கும் தெற்கு வாசல் வில்லு மண்டபத்தை அமைப்பதற்கும் தேவையான செலவை வழங்கியிருந்தார்கள். அதே போன்று ஆலயத்தின் தெற்குப்புற சுற்றுப்பிரகார சுவரில் கபோதகம் அமைத்து அதில் அம்பாளின் அஷ்டலக்சுமி திருவுருவங்களை வைப்பதற்கான பெரும்பகுதி செலவை திருவாளர் சிங்கராஜா சிவகிரிநாதன் அவர்கள் தானாகவே முன்வந்து வழங்கியுதவினார். அம்பாள் மீது கொண்ட பக்தியினால் அவளது திருக்கோயிலின் திருப்பணிக்காக இவர்கள் வழங்கிய உதவிகளுக்கு ஆலய பரிபாலன சபையின் சார்பில் உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் பரிவாரமூர்த்தி கோவில்களான பிள்ளையார், முருகன், வைரவர் போன்றவற்றின் புனர்நிர்மாண நடவடிக்கைகளுக்கும் வசந்தமண்டபம், நவக்கிரக மண்டபம், சண்டேஸ்வரி கோவில்களினது புனர்நிர்மாணப் பணிகளுக்கும் முறையே அவற்றின் உபயகாரர்களான திரு.சரவணபவன் காண்டீபன் குடும்பத்தினர், திருமதி.சு.தியாகராசா குடும்பத்தினர், திருமதி சி.வி. சிவானந்தி சிவானந்தன் குடும்பத்தினர், திரு.க.இராமநாதன் குடும்பத்தினர், திரு.கு.அருட்குமரன் குடும்பத்தினர் உதவியுள்ளனர். கர்ப்பக்கிருகம், அர்த்தமண்டபம், நந்திபலிபீடம், கொடித்தம்ப பீடம் முதலியவற்றிற்கு கருங்கல் (கிரனைட்) பதிக்க ஏற்பட்ட செலவுகளை திரு.இ.ரஞ்சனும் அமெரிக்காவில் வசிக்கும் கா.உதயரூபனும் வழங்கியிருந்தனர். புனருத்தாரண நிகழ்வோடு கொடித்தம்பத்தை சுற்றிச் செப்பினாலான தகடு பொருத்தப்பட்டது. இதற்கான செலவை கொடியேற்ற உபயகாரர்களான திரு.எஸ்.இராசதுரை குடும்பத்தினர் தந்துதவியுள்ளனர். மேற்படி திருப்பணிகளைச் செவ்வனே நிறைவு செய்யப் பணஉதவிகளை வழங்கிய அத்தனை பெரு மக்களுக்கும் ஆலய பரிபாலனசபையின் சார்பில் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

எமது பரிபாலன சபை உறுப்பினர் திருவாளர் ப.பகீரதன் (ஹரீன் ரேடர்ஸ்) அவர்கள் ஏற்கனவே ஆலயத்தில் இருந்த மின்னிணைப்புக்களைச் சீரமைத்ததுடன் வெளிப்புறத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சிற்பங்களுக்குரிய மின்னிணைப்பு வேலைகளையும் பொறுப்பெடுத்து தனது செலவிலேயே செய்து உதவியுள்ளார். அவருக்கும் ஆலய கும்பாபிஷேகத்திற்குத் தேவையான அத்தனை அபிஷேகப் பொருட்களையும் தானே நேரே இந்தியா சென்று சில இலட்ச ரூபா செலவில் கொள்முதல் செய்து கொண்டுவந்து தந்துதவியதோடு தனது மனைவியார் சகிதம் வருகை தந்து எம்மோடு ஒருவராக இருந்து சேவையாற்றிய திரு.சரவணபவன் காண்டீபன் அவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றோம்.

ஆலய வெளிவீதியினைச் செப்பனிடுவதற்குத் தனது நிதி ஒதுக்கீட்டிலிருந்து பணம் ஒதுக்கித் தந்ததுடன் கும்பாபிஷேக நிகழ்வில் நேரடியாகக் கலந்து எமக்கு ஊக்கம் தந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ஈ.சரவணபவன் அவர்களுக்கும் இந்த சந்தர்ப்பத்தில் ஆலய பரிபாலன சபை சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மரக்கதவுகளையும், கலசத்திற்கான கருங்காலிக் கட்டைகளையும் செய்து உதவிய திரு மா.றதீஸ்குமார் ஆசாரியாருக்கும், யந்திரங்களை வரைந்து உதவியும், கலசங்களைச் சரிபார்த்துச் சீர்செய்தும் தந்த ஆசாரியார் திரு S. கௌரிசங்கரிற்கும் கலசங்கள், விளக்குகள், செம்புகள், திருவாசிகள் போன்றவற்றை எல்லாம் சீர் செய்து மினுக்கித் தந்த திருவாளர்.எஸ்.கமலநாதன் அவர்களுக்கும் எமது நன்றியை உரித்தாக்கி மகிழ்கிறோம்.

இக்கும்பாபிஷேக மலருக்கு ஆசியுரையினை வழங்கி உதவிய நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனக்குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளுக்கும் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களிற்கும், வேலன் சுவாமிகளிற்கும் நல்லூர்ப் பிரதேச செயலருக்கும் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ வித்தியானந்தக் குருக்களிற்கும், கும்பாபிஷேகப் பிரதமகுரு சிவஸ்ரீ முரளீதரக் குருக்களிற்கும் எமது நன்றி.

கும்பாபிஷேக மலரில் வெளியிடப்பட்ட அம்பாளின் திருத்தோற்றத்தை அழகுற வரைந்துதவிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறை விரிவுரையாளர் திருவாளர் வரதராஜன் பாலமுருகன் அவர்களுக்கும் எமது நன்றி உரித்தாகட்டும். கும்பாபிஷேக மலருக்கான "ஆலய அமைப்பும் கட்டடக்கலையும்" என்ற கட்டுரையை எழுத வழிகாட்டிய சைவப்புலவர் திரு கந்த சத்தியதாசன் அவர்களிற்கும் இவற்றை எல்லாம் தொகுத்து "கும்பாபிஷேக மலராக" வெளிவர உதவிய மலர்க்குழுவிற்கும் குறிப்பாக திரு.ந.ஐங்கரனிற்கும் மலரினைச் சிறந்த முறையில் அச்சிட்டுத்தந்துதவிய அன்ட்றா அச்சகத்தினரிற்கும் எமது நன்றி.

மகா கும்பாபிஷேகத்தினைப் பிரதம குருவாக இருந்து நடாத்திய சிவஸ்ரீ முரளீதர குருக்களிற்கும் சர்வசாதகராக இருந்து வேண்டிய ஆலோசனைகளை வேண்டிய போதெல்லாம் தந்துதவிய பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் தேவஸ்தான குருக்கள் சிவஸ்ரீ சோமஸ்கந்த குருக்களிற்கும் எமது ஆலயத்தில் கடமையேற்றுக் குறைந்த காலமாயினும் கும்பாபிஷேகத்தையும் தொடர்ந்து மண்டலாபிடேகத்தையும் மிகச்சிறப்பாக நடாத்தி உதவிய ஆலயக்குருக்கள் சிவஸ்ரீ முரளீதர குருக்கள் - வித்தியானந்த குருக்களுக்கும் உதவிப்பூசகர் வைத்தியநாத சர்மா ஸ்ரீகாந்த சர்மாவிற்கும் ஏனைய சிவாசாரியார்களிற்கும் எமது உளம் கனிந்த நன்றி தெரிவித்து மகிழ்கிறோம்.

கும்பாபிஷேகம் மண்டலாபிஷேகம் போன்றவற்றிற்கு தவில் நாதஸ்வர இசை வாசித்த ஆலய மங்கள வாத்திய கலைஞர் திரு சு.கௌரிசாமி அவர்களிற்கும் விசேட மங்கள வாத்திய இசை மழை பொழிந்த நாச்சிமார் கோவிலடி திரு விமலன் குழுவினருக்கும் கும்பாபிஷேகத்திற்கான யாகசாலைகளை அமைத்து தேவையான மலர்கள், சமித்து வகைகள், மாலைகள் போன்றவற்றை எல்லாம் தந்துதவிய திரு ஸ்ரீ.நவநீதன் அவர்களிற்கும் எமது நன்றி.

மகா கும்பாபிஷேக நிகழ்ச்சிகளை சக்தி TV, டான் TV, ஓம் TV, [BC TV போன்றவற்றில் தொகுத்து ஒளிபரப்பு செய்த தொலைக்காட்சி நிறுவனங்களிற்கும், கும்பாபிஷேக நிகழ்வுகளை சிறந்த முறையில் காணொளி மூலம் ஒளிப்பதிவு செய்து தந்த திரு.குமணன் அவர்களிற்கும் [BC ஒளிபரப்புச் சேவையில் நேரடி ஒளிபரப்பு செய்ய ஒழுங்குகளைச் செய்த திரு.க.சுசீந்திரன் அவர்களிற்கும் எமது நன்றி.

ஆலயத்தில் அம்பாளை வெவ்வேறு அழகுக்கோலங்களில் அலங்கரித்து சாத்துப்படி வேலைகளை செய்து உதவிய திருவாளர்.சு.ஜெயரட்ணசிங்கம் அவர்களிற்கும் ஆலயத்திலே நித்திய கடமைகளை ஆற்றி வருகின்ற திரு. செ.விக்னேஸ்வரன் அவர்களிற்கும் அம்பாளின் தொண்டர்களாக இருந்து திருப்பணி வேலைகளின் போதும் மகா கும்பாபிஷேகத்தின் போதும் உடலுழைப்பினால் எமக்கு உறுதுணை புரிந்த திரு க.ஜெயராஜா அவர்களிற்கும் திரு சி.நகுலன், திரு சி.தியாகராஜா ஆகியோரிற்கும் திரு வே.சுரேஸ்குமாரிற்கும் எமது நன்றி. கும்பாபிஷேகத்திற்கு நாள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்தது முதல் ஆலயத்திற்கு செய்ய வேண்டிய வேலைகளை செய்வதில் உதவிய பரிபாலன சபை உறுப்பினர்களிற்கும் நல்லடியார்களிற்கும் மனோன்மணி சனசமூக நிலைய உறுப்பினர்களிற்கும் மனோன்மணி விளையாட்டுக்கழக இளைஞர்களுக்கும் எமது மனம் கனிந்த நன்றி.

நிறைவாக பரிபாலன சபையின் தலைவர் திரு.சி.ஜெயபாலசிங்கம் அவர்கள் எடுத்த கருமத்தை செவ்வனே செய்பவர், பணியாளர்களைக் கொண்டு வேலைகளைச் செய்விப்பதில் கைதேர்ந்தவர்; குறைந்த காலத்தில் திட்டமிட்டவாறு அத்தனை வேலைகளையும் செய்து அம்பாள் சந்நிதானத்தைப் புதுப்பொலிவோடு கும்பாபிஷேகம் காண உழைத்தவர், அவரிற்கும் எமது நன்றி.

ஆலய கணக்கு வழக்குகளை எல்லாம் மிகவும் செம்மையாகவும் நேர்த்தியாகவும் பேணி ஆலயப் பணிகளுக்கு நிதி தேவைப்படும் பொழுதெல்லாம் உடனுக்குடன் அவற்றை வழங்கி உதவிய பொருளாளர் திரு.கு.சண்முகநாதன் மற்றும் அவருக்கு உதவியாக இருந்த திரு.ச.நிரோசிகன் ஆகியோருக்கும் எமது நன்றி.

ஆலய கும்பாபிஷேக திருப்பணிக்கு பொருளாகவோ பணமாகவோ உதவியோர் ஒவ்வொருவரையும் இங்கு தனித்தனியாகக் குறிப்பிட முடியவில்லை. குறித்த வேலைகளிற்காக நிதிப்பங்களிப்பு செய்தோரின் பெயர்களை மட்டும் குறிப்பிட்டுள்ளோம். ஆயினும் நிதி உதவி செய்த சகலரினதும் பெயர்ப்பட்டியல் இம்மலரில் முன்வைக்கப்பட்டுள்ளது.

இங்கு - எம்மால் பகிரப்பட்ட நன்றியறிதல்கள் அனைத்தும் 2020 ஆண்டு நடைபெற்ற கும்பாபிஷேகத்துடன் இணைந்த திருப்பணி வேலைகளுக்காக உதவிகளை வழங்கியவர்களுக்கானது மட்டுமே என்பதை பணிவோடு கூறிக்கொள்வதுடன், இது தவிர காலத்திற்கு காலம் ஆலயத்தில் மேற்கொள்ளப்படும் பல்வேறு திருப்பணி வேலைகளுக்கு நிதி மற்றும் உடலுழைப்புக்களை வழங்கி வரும் உள்ளூர் வெளியூர் அடியவர்களை நாம் என்றும் மனதார நன்றியோடு நினைவில் கொண்டுள்ளோம் என்பதனையும் அவர்களது விபரங்கள் எமது பொதுக்கூட்டத்தின் போது வழங்கப்படும் கணக்கறிக்கை மற்றும் செயலறிக்கையில் உள்ளடக்கியுள்ளோம் என்பதனையும் இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் இந்த சந்தர்ப்பத்தில் யாருக்காவது நன்றி கூறத் தவறவிடப்பட்டிருப்பின் அவர்கள் எம்மை மன்னித்துக்கொள்ளுமாறு வேண்டுவதுடன் சிறு உதவியாகவோ பேருதவியாகவோ நிதி உதவியளித்தோர், அம்பாள் அடியார்கள், பரிபாலன சபை உறுப்பினர்கள், வழிபடுவோர் மகா சபை உறுப்பினர்கள் அனைவருக்கும் அம்பாளின் அருட்கடாட்சம் கிடைக்கவேண்டும் என அம்பாளை பிரார்த்தித்து நன்றி பகிர்தலை நிறைவு செய்கிறோம்.

**"இன்பமே சூழ்க எல்லாரும் வாழ்க"**

**சி.மாதவகுமாரன்**

செயலாளர் ஆலய பரிபாலன சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம் கும்பாபிஷேகத் திருப்பணிக்கு நிதி உதவி செய்தோர் விபரம் (01.04.2018 - 30.11.2020)

| இல | பகீஇல | பெயர் | இடம் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | 3114 | இராசையா முருகையா | ஜேர்மனி | 190,200.00 |
| 2 | 3115 | பா.தமிழ்நிலா | கொக்குவில் | 5000.00 |
| 3 | 3116 | இ.சிவபாதசுந்தரம் | கொக்குவில் | 1000.00 |
| 4 | 3117 | க.சர்வசொரூபராசா (லண்டன்) | கொக்குவில் | 4500.00 |
| 5 | 3119 | சி.செல்வக்குமார் | கொக்குவில் | 50,000.00 |
| 6 | 3120 | கு.பிறேமா | கோண்டாவில் | 1,000.00 |
| 7 | 3121 | ம.ரவிதாஸ் | லண்டன் | 10,000.00 |
| 8 | 3122 | S.நிசாந்தன் | கொக்குவில் | 1,000.00 |
| 9 | 3123 | ந.கஜீபன் | கொக்குவில் | 10,000.00 |
| 10 | 3124 | S.ஜெயசீலன் | கொக்குவில் | 2,000.00 |
| 11 | 3125 | மா.சந்திரசேகரம் | கோண்டாவில் | 1,000.00 |
| 12 | 3126 | ந.ஞானாம்பிகை | கோண்டாவில் | 25,000.00 |
| 13 | 3127 | S.மனோறஞ்சன் | கொக்குவில் | 1,000.00 |
| 14 | 3128 | செ.கருணசீலன் | கனடா | 5,000.00 |
| 15 | 3129 | ச.அக்சவி | சுழிபுரம் | 5,000.00 |
| 16 | 3130 | நா.சிறீதரன் | சுவிஷ் | 5,000.00 |
| 17 | 3131 | கு.நடராசா | கொக்குவில் | 5,000.00 |
| 18 | 3132 | ச.கதிர்காமத்தம்பி | கோண்டாவில் | 200,000.00 |
| 19 | 3133 | செ.சிவராஜா | கொக்குவில் | 1,000.00 |
| 20 | 3134 | ச.கதிர்காமத்தம்பி | கோண்டாவில் | 200,000.00 |
| 21 | 3135 | ஜெ.ஜெயந்திகா | டென்மார்க் | 10,000.00 |
| 22 | 3136 | சி.சிவயோகேஸ்வரி | கொக்குவில் | 5,000.00 |
| 23 | 3137 | ஆ.ராமநாதன் | கொக்குவில் | 500.00 |
| 24 | 3138 | லலிதா சிவானந்தன் | கொக்குவில் | 18,000.00 |
| 25 | 3139 | ரஞ்சினி சிறீமகிழ்காந்தன் | கொக்குவில் /USA | 103,500.00 |
| 26 | 3140 | மகேஸ்வரன் பிரதீபன் | கொக்குவில் | 10,440.00 |
| 27 | 3141 | மகேந்திரன் சுரேந்திரன் | கனடா | 5,000.00 |
| 28 | 3142 | பாலசிங்கம் குடும்பம் | கொக்குவில் | 100,000.00 |
| 29 | 3143 | சி.மகிழ்நன் | கொக்குவில் | 1,000.00 |
| 30 | 3144 | பாலசிங்கம் குடும்பம் | கொக்குவில் | 45,000.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 31 | 3192 | பாலினி பரணீதரன் | கொக்குவில் | 1,000.00 |
| 32 | 3193 | தேவானந்தன் ஜீவிதன் | கனடா | 5,000.00 |
| 33 | 3194 | சுதர்சன் வைசாலி | ஜேர்மனி | 2,000.00 |
| 34 | 3195 | நா.சஞ்சீவா | கொக்குவில் | 500.00 |
| 35 | 3196 | ராஜினி செல்லத்துரை | லண்டன் | 5,000.00 |
| 36 | 3197 | ச.கதிர்காமத்தம்பி | கோண்டாவில் | 200,000.00 |
| 37 | 3198 | பொன்னுத்துரை ரஞ்சன் | கொக்குவில் | 5,000.00 |
| 38 | 3199 | சி.சிவதாஸ் | ஜேர்மனி | 1,000.00 |
| 39 | 3200 | நந்தினி மகேசன் | தென்ஆபிரிக்கா | 5,000.00 |
| 40 | 3201 | கண்ணஞானி குடும்பம் | கோண்டாவில் | 30.000.00 |
| 41 | 3202 | க.சாந்தகுமார் | தாவடி | 500:00 |
| 42 | 3203 | க.சறோஜினிதேவி | கொழும்பு | 5.000.00 |
| 43 | 3204 | இ.சுதர்சன் | கொக்குவில் | 10,000.00 |
| 44 | 3205 | பா.யோகதீசன் | சுவிஷ் | 800.00 |
| 45 | 3206 | ரா.அஜித் | கொக்குவில் | 500.00 |
| 46 | 3207 | அ.அருணா | டோகா/கட்டார் | 390.00 |
| 47 | 3208 | M.திருஞானசம்பந்தர் | கொக்குவில் | 70,000.00 |
| 48 | 3209 | பொன்னுத்துரை கணேசன் | கொக்குவில் | 50,000.00 |
| 49 | 3210 | கனகாம்பிகை சுப்பிரமணியம் | கொக்குவில் | 100,000.00 |
| 50 | 3211 | முருகையா முரளி | கொக்குவில் | 5,000.00 |
| 51 | 3212 | ஞா.வத்சன் | கொக்குவில் | 200.00 |
| 52 | 3213 | சி.தட்சணாமூர்த்தி | லண்டன் | 1,000.00 |
| 53 | 3214 | P.சயந்திரா | அவுஸ்ரேலியா | 5,000.00 |
| 54 | 3215 | ஞா.வத்சன் | கொக்குவில் | 300.00 |
| 55 | 3216 | வி.வசந்தி | கொக்குவில் | 1,000.00 |
| 56 | 3217 | மயூரன்சாரா சிவானந்தன் | USA | 18,000.00 |
| 57 | 3218 | மகேந்திரன் சுரேந்திரன் (கொக்குவில்) | கனடா | 1,000,000.00 |
| 58 | 3220 | சண்முகரத்தினம் சாந்திக்குமார் | கொக்குவில் | 300,000.00 |
| 59 | 3221 | சி.இராமச்சந்திரன் | கொக்குவில் | 1,000.00 |
| 60 | 3222 | இ.சிவபாதசுந்தரம் | கொக்குவில் | 1,000.00 |
| 61 | 3223 | ஜெ.ஜெயசோதி | கொக்குவில் | 1,000.00 |
| 62 | 3224 | மனோகரன் குடும்பம் | கொக்குவில் | 1,000.00 |
| 63 | 3225 | சி.கலைச்செல்வி | கோண்டாவில் | 1,000.00 |
| 64 | 3226 | கஜீவன்,கபிதன் | கொக்குவில் | 10,000.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 65 | 3227 | வைத்திலிங்கம் குடும்பம் | கொக்குவில் | 1,000.00 |
| 66 | 3228 | சகானா கிருஸ்ணதாஸ் | லண்டன் | 4,250.00 |
| 67 | 3229 | சுகுமார் சண்முகரத்தினம் | கொக்குவில் | 300,000.00 |
| 68 | 3230 | Dr.S.ராஜா குடும்பம் | கொக்குவில் | 45,000.00 |
| 69 | 3231 | ச.கதிர்காமத்தம்பி | கோண்டாவில் | 200,000.00 |
| 70 | 3232 | ந.குகராஜா | கொக்குவில் | 5,000.00 |
| 71 | 3233 | வசந்தா பூபாலசிங்கம் | கொக்குவில் | 10,000.00 |
| 72 | 3234 | S.மயூரன் | ஜேர்மனி | 5,000.00 |
| 73 | 3235 | தே.சியாமளா | கொக்குவில் | 10,000.00 |
| 74 | 3237 | இராசதுரை குடும்பம் | கொக்குவில் | 300,000.00 |
| 75 | 3238 | மகேந்திரன் சுரேந்திரன் | கனடா | 400,000.00 |
| 76 | 3239 | மகாலிங்கம் இராசமலர் | கோண்டாவில் | 10,000.00 |
| 77 | 3240 | ச.கதிர்காமத்தம்பி | கோண்டாவில் | 200,000.00 |
| 78 | 3241 | சண்முகரட்ணம் பூபதி | கொக்குவில் | 5,000.00 |
| 79 | 3242 | சுப்பையா நாகரத்தினம் | கொக்குவில் | 5,000.00 |
| 80 | 3243 | அருளானந்தன் குடும்பம் | லண்டன் | 5,000.00 |
| 81 | 3244 | பஞ்சலிங்கம் குடும்பம் | கொக்குவில் | 5,000.00 |
| 82 | 3245 | வ.சரண்ஜா | கொக்குவில் | 1,000.00 |
| 83 | 3246 | தி.யதுசன் | கொக்குவில் | 1,000.00 |
| 84 | 3247 | பாலசிங்கம் குடும்பம் | கொக்குவில் | 60,000.00 |
| 85 | 3248 | R.கணேஸ் | கொக்குவில் | 1,000.00 |
| 86 | 3249 | சு.ஜக்சித் | கொக்குவில் | 1,000.00 |
| 87 | 3250 | பிரபாகரன் சிவலிங்கராஜா | திருநெல்வேலி | 1,000.00 |
| 88 | 3300 | சத்தியானந்தராஜாவும் பிள்ளைகளும் | கொக்குவில் | 100,010.00 |
| 89 | 3301 | ஓர் அடியார் | | 3,975.00 |
| 90 | 3302 | அகிலேஸ்வரன் மாதேஷ் | லண்டன் | 10,950.00 |
| 91 | 3303 | குலநாதன் கௌதமன் | அமெரிக்கா | 17,650.00 |
| 92 | 3304 | பாலசிங்கம் குடும்பம் | கொக்குவில் | 45,000.00 |
| 93 | 3306 | முருகையா சர்மிலன் | ஜேர்மனி | 5,000.00 |
| 94 | 3307 | சுலக்சன் குடும்பம் | கொக்குவில் | 95,000.00 |
| 95 | 3308 | பா.சத்தியகுமார் | கொக்குவில் | 1,000.00 |
| 96 | 3309 | சதிசுதன் குடும்பம் | கொக்குவில் | 2,000.00 |
| 97 | 3310 | நிர்மலா பத்மநாதன் (இராசநாயகம் குடும்பம்) | நியூசிலாந்து | 5,025.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 98 | 3311 | R.சுரேந்திரன் | வவுனியா | 1,000.00 |
| 99 | 3312 | கந்தையா பாஸ்கரன் | கொக்குவில் | 10,000.00 |
| 10 | 3313 | மயூரிகா மகேசன் (சுசீந்திரன்) | தென்.ஆபிரிக்கா | 100,000.00 |
| 101 | 3314 | சி.சிவலிங்கம் | கொக்குவில் | 1,000.00 |
| 102 | 3315 | சிவசுப்பிரமணியம் குடும்பம் | கோண்டாவில் | 2,000.00 |
| 103 | 3316 | நிசாந் யாழினி | கோண்டாவில் | 900.00 |
| 104 | 3317 | ஜெயகாந்தன் அன்பரசி | கொக்குவில் | 5,000.00 |
| 105 | 3318 | யோகானந்தன் இன்பமணி | திருநெல்வேலி | 1,000.00 |
| 106 | 3319 | சி.அகானா | கொக்குவில் | 1,000.00 |
| 107 | 3320 | சிங்கராஜா சிவகிரிநாதன் | கொக்குவில் | 550,000.00 |
| 108 | 3321 | த.ஜெயக்குமாரி | கோண்டாவில் | 20,000.00 |
| 109 | 3322 | கீர்த்தன் சுதர்சன் | கொக்குவில் | 500.00 |
| 110 | 3323 | மு.கந்தசாமி சிவசக்தி | கொக்குவில் | 25,000.00 |
| 111 | 3324 | நவரெத்தினம் யோகசுந்தரம் | கொக்குவில் | 200,000.00 |
| 112 | 3325 | ஜெயகாந்தன் ஜெனிற் | கொக்குவில் | 1,000.00 |
| 113 | 3326 | ச.தட்சணாமூர்த்தி | கோண்டாவில் | 10,000.00 |
| 114 | 3327 | சண்முகரத்தினம் சாந்திக்குமார் | கொக்குவில் | 217,800.00 |
| 115 | 3328 | லலிதா சிவானந்தன் (மில் மணியம் மகள்) | கொக்குவில்/ அமெரிக்கா | 18,200.00 |
| 116 | 3329 | சிறீதரன் குடும்பம் | கோண்டாவில் | 2,000.00 |
| 117 | 3330 | சு. சந்திரகுமாரன் | கொக்குவில் | 1,000.00 |
| 118 | 3331 | மகேந்திரன் சுரேந்திரன் (சுரேஸ்) | கனடா | 500,000.00 |
| 119 | 3332 | இராமநாதன் நவீன்திரா | அமெரிக்கா | 500,000.00 |
| 120 | 3333 | ந.கரீந்திரன் | கொக்குவில் | 6,000.00 |
| 121 | 3334 | N.சந்திரசேகரா | கொக்குவில் | 2,000.00 |
| 122 | 3335 | விமலாதேவி நமசிவாயம் | கனடா | 100,000.00 |
| 123 | 3336 | சி.சிவசுப்பிரமணியம் | கோண்டாவில் | 10,000.00 |
| 124 | 3337 | சுயம்புலிங்கம் சொர்ணமலர் | கொக்குவில்/ கனடா | 136,000.00 |
| 125 | 3338 | மகேஸ்வரன் வசந்தரூபி | கொக்குவில்/ கனடா | 50,000.00 |
| 126 | 3339 | அஸ்வின் இரவிச்சந்திரன் | கோண்டாவில் | 5,020.00 |
| 127 | 3340 | லிங்கேஸ் சர்மிலா | கொக்குவில் | 15,000.00 |
| 128 | 3341 | சுஜேந்தினி சுயம்புலிங்கம் | கொக்குவில் | 10,000.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 129 | 3342 | செ.மனோகரன் | கொக்குவில் | 25,000.00 |
| 130 | 3343 | நல்லநாதன் குடும்பம் | கொக்குவில் / சுவிஸ் | 400,000.00 |
| 131 | 3344 | சி.சிவகிரிநாதன் | கொக்குவில் / கனடா | 280,000.00 |
| 132 | 3345 | மகேந்திரன் சுரேந்திரன் (சுரேஸ்) | கொக்குவில் / கனடா | 500,000.00 |
| 133 | 3346 | சண்முகரத்தினம் சாந்திக்குமார் | கொக்குவில் / லண்டன் | 200,000.00 |
| 134 | 3347 | இ.சிவபாதசுந்தரம் | கொக்குவில் | 1,000.00 |
| 135 | 3348 | இராசதுரை சிறீகாந்தா குடும்பம் | கொக்குவில் / லண்டன் | 115,000.00 |
| 136 | 3349 | கமலா குடும்பம் | கொக்குவில் | 30,000.00 |
| 137 | 3350 | மனோகரன் கஜகிஸ்ணா | கொக்குவில் | 5,000.00 |
| 138 | 3351 | சண்முகரத்தினம் சாந்திக்குமார் | கொக்குவில் | 250,000.00 |
| 139 | 3352 | செ.மனோகரன் | கொக்குவில் | 2,000.00 |
| 140 | 3353 | S.சத்தியநாதன் | கொக்குவில் | 25,000.00 |
| 141 | 3354 | சி.அருளம்பலம் குடும்பம் | கொக்குவில் | 550,000.00 |
| 142 | 3355 | கிசோபன் வர்மிலா | கொக்குவில் / பிரான்ஸ் | 15,000.00 |
| 143 | 3356 | மகேந்திரன் சுரேந்திரன் (சுரேஸ்) | கொக்குவில் / கனடா | 200,000.00 |
| 144 | 3358 | உத்தமி அநுரதன் குடும்பம் | கொக்குவில் | 100,000.00 |
| 145 | 3359 | சிவகுமாரதாசன் அம்பிகா | கொக்குவில் / கனடா | 10,000.00 |
| 146 | 3360 | பகீரதி சிவகுமார் | கொக்குவில் / லண்டன் | 100,000.00 |
| 147 | 3361 | பத்மினி நவீனகுமார் | கொக்குவில் | 25,000.00 |
| 148 | 3362 | Dr.சிற்றம்பலம் ராஜேந்திரா | கொக்குவில் | 480,000.00 |
| 149 | 3363 | பொ.ஆனந்தராசா | கோண்டாவில் | 500.00 |
| 150 | 3364 | முகுந்தன் குடும்பம் | கொக்குவில் / லண்டன் | 2,000.00 |
| 151 | 3365 | சே.வேல்முருகன் | கொக்குவில் | 200,000.00 |
| 152 | 3366 | கந்தையா நவரத்தினம் | கொக்குவில் / கொழும்பு | 25,000.00 |
| 153 | 3367 | சண்முகரத்தினம் சாந்திக்குமார் | கொக்குவில் | 250,000.00 |
| 154 | 3368 | ஜ.சிவனேசன் | கொக்குவில் | 25,000.00 |
| 155 | 3369 | கனகரத்தினம் குடும்பம் | கொக்குவில் | 200,000.00 |
| 156 | 3370 | இ.இரஞ்சன் | கொக்குவில் | 200,000.00 |
| 157 | 3371 | க.ஜெனித்திரா | கொக்குவில் | 100,000.00 |
| 158 | 3372 | தா.நாகேஸ்வரி | கொக்குவில் | 25,000.00 |
| 159 | 3373 | இ.நடராசா | கொக்குவில் | 5,000.00 |
| 160 | 3374 | மகேந்திரன் சுரேந்திரன் (சுரேஸ்) | கொக்குவில் / கனடா | 100,000.00 |
| 161 | 3375 | செல்லத்துரை இராசையா பிள்ளைகள் | கொக்குவில் | 200,000.00 |
| 162 | 3376 | வ.இந்திஜா | கொக்குவில் | 1,000.00 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 163 | 3377 | சே.வேல்முருகன் | கோண்டாவில் | 200,000.00 |
| 164 | 3378 | சின்னதம்பி குடும்பம் | கொக்குவில் | 10,000.00 |
| 165 | 3379 | மகாதேவன் குடும்பம் | கந்தரோடை | 3,000.00 |
| 166 | 3380 | தம்பிநாதன் குடும்பம் (யோகரன்) | கொக்குவில் / கனடா | 133,700.00 |
| 167 | 3381 | விமலேந்திரன் குடும்பம் | கொக்குவில் | 50,000.00 |
| 168 | 3382 | தாமிரா நவரெத்தினம் | கொக்குவில் / லண்டன் | 15,000.00 |
| 169 | 3383 | கனகசபாபதி கணேசன் | கொக்குவில் / அவுஸ்ரேலியா | 20,100.00 |
| 170 | 3384 | ரஞ்சன்குமார் விராஜ் | கொக்குவில் | 50,000.00 |
| 171 | 3385 | ரூபா நவரத்தினம் | கொக்குவில் | 5,000.00 |
| 172 | 3386 | துரைராஜா கமலாதேவி | கொக்குவில் | 17,000.00 |
| 173 | 3387 | இராமநாதன் சுதந்திரன் | கொக்குவில் | 100,000.00 |
| 174 | 3388 | ரட்ணம் மாஸ்ரர் குடும்பம் | கொக்குவில் / அவுஸ்ரேலியா | 203,000.00 |
| 175 | 3389 | இ. இரஞ்சன் | கொக்குவில் | 25,000.00 |
| 176 | 3390 | கந்தையா சுசீந்திரன் | லண்டன் | 58,250.00 |
| 177 | 3391 | சிவபூசம் சுகுமார் | லண்டன் | 58,250.00 |
| 178 | 3392 | த.பிறேம்குமார் | லண்டன் | 58,250.00 |
| 179 | 3393 | ஆ.குகனேசன் | லண்டன் | 58,250.00 |
| 180 | 3394 | முருகுப்பிள்ளை சர்வேந்திரன் | லண்டன் | 34,950.00 |
| 181 | 3395 | மயில்வாகனம் ரகுராஸ் | லண்டன் | 58,250.00 |
| 182 | 3396 | வேலாயுதபிள்ளை கருணாணந்தன் | லண்டன் | 58,250.00 |
| 183 | 3397 | யாழ்விசன் கொக்குவில் | கொக்குவில் | 94,948.00 |
| 184 | 3398 | நாகரட்ணம் லகுபரன் | லண்டன் | 50,095.00 |
| 185 | 3399 | கமலா பத்மநாதன் | லண்டன் | 58,250.00 |
| 186 | 3400 | பொ.பிறேமலதா | கொக்குவில் | 10,000.00 |
| 187 | 3401 | கனகராஜா சத்தியமூர்த்தி | கொக்குவில் | 51,695.00 |
| 188 | 3402 | ச.பரமானந்தம் | கோண்டாவில் | 1,000.00 |
| 189 | 3403 | கந்தையா சுசீந்திரன் | லண்டன் | 300,000.00 |
| 190 | 3404 | ர.அருணா | கனடா | 1,000.00 |
| 191 | 3405 | மகேந்திரன் சுரேந்திரன் (சுரேஸ்) | கனடா | 300,000.00 |
| 192 | 3406 | வே.சுரேஸ்குமார் | கொக்குவில் | 20,000.00 |
| 193 | 3407 | கோபாலகிருஸ்ணன் குடும்பம் | சுவிஷ் | 200,000.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 194 | 3408 | விஜயலக்சுமி சேனாதிராஜா | கனடா | 40,000.00 |
| 195 | 3409 | கோணேஸ்வரி வன்னியசிங்கம் | லண்டன் | 100,000.00 |
| 196 | 3410 | கிருஸ்ணாதேவி கரிச்சந்திரன் | லண்டன் | 6,000.00 |
| 197 | 3411 | இன்பம் சியாமளா | கொக்குவில் | 50,000.00 |
| 198 | 3412 | செ.சிவாஜினி | கனடா | 150,000.00 |
| 199 | 3413 | பொ.பரராஜசிங்கம் | கனடா | 50,000.00 |
| 200 | 3414 | ப.தெய்வேந்திரம் | கொழும்பு | 50,000.00 |
| 201 | 3415 | லீலாதேவி தர்மராஜா | கனடா | 20,000.00 |
| 202 | 3416 | தா.சனாதனன் | தாவடி | 10,000.00 |
| 203 | 3417 | "இராசநாயகம் குடும்பம்(ராணி,நிர்மலா, பத்மா,சியாமளா)" | கொக்குவில் | 40,000.00 |
| 204 | 3418 | அமரர். நாகரத்தினம் அருணாசலம் | கனடா | 50,000.00 |
| 205 | 3419 | குலேந்திரன் குடும்பம் | கொக்குவில் | 25,000.00 |
| 206 | 3420 | சாந்தகுலநாதன் குடும்பம் | கோண்டாவில் | 20,000.00 |
| 207 | 3421 | பா.கஜானன் | கொக்குவில் | 50,000.00 |
| 208 | 3422 | கலா புஸ்பராஜா | கனடா | 10,000.00 |
| 209 | 3423 | இராஜமனோகரன் ஜெயகரன் | கோண்டாவில் | 50,000.00 |
| 210 | 3424 | யோகலா முகுந்தன் | கொக்குவில் | 1,000.00 |
| 211 | 3425 | சின்னத்துரை சுபத்திரை | கொக்குவில் | 5,000.00 |
| 212 | 3426 | த.சேந்தன் | சண்டிலிப்பாய் | 500.00 |
| 213 | 3427 | சுமதி திவ்யா | கொக்குவில் | 10,000.00 |
| 214 | 3428 | ச.கிருபவன் | கொக்குவில் | 1,000.00 |
| 215 | 3429 | T.பாலசிங்கம் | கோண்டாவில் | 1,000.00 |
| 216 | 3430 | சுந்தரலிங்கம் திருமுருகன் | கொக்குவில் | 5,000.00 |
| 217 | 3431 | சுப்பிரமணியம் சந்திரா,கரிசுதன்,தாரணி(டிலானி) | கனடா | 5,000.00 |
| 218 | 3432 | கோபாலசிங்கம் குடும்பம் | கொக்குவில் | 10,000.00 |
| 219 | 3433 | கௌரி இந்திரலிங்கம் | கொக்குவில் | 5,000.00 |
| 220 | 3434 | து.யோகேஸ்வரி | கோண்டாவில் | 1,100.00 |
| 221 | 3435 | க.ஜெயராஜ் | கொக்குவில் | 50,000.00 |
| 222 | 3436 | சு.தியாகராசா குடும்பம் | கனடா | 410,000.00 |
| 223 | 3437 | ஜெகதீஸ்வரன் மஞ்சுளா | பிரான்ஸ் | 10,000.00 |
| 224 | 3438 | ப.மனோன்மணிதேவி | லண்டன் | 25,000.00 |
| 225 | 3439 | பத்மா சுந்தரலிங்கம் | கனடா | 7,500.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 226 | 3440 | K.விசாகன் | கொக்குவில் | 1,000.00 |
| 227 | 3441 | லோகன் ராமசாமி குடும்பம் | கனடா | 27,400.00 |
| 228 | 3442 | பிறேமரூபன் வல்லிபுரம் | கனடா | 27,400.00 |
| 229 | 3443 | சுரேந்திரன் நடராசா(இராசையா) குடும்பம் | கனடா | 20,550.00 |
| 230 | 3444 | நாகராசா சுப்பையா குடும்பம் | கனடா | 13,700.00 |
| 231 | 3445 | ஜெயரட்ணம்(பரமேஸ்வரி) குடும்பம் | கனடா | 13,700.00 |
| 232 | 3446 | விமல் (கவிதா) குடும்பம் | கனடா | 13,700.00 |
| 233 | 3447 | சண்முகரட்ணம்(பூபதி) குடும்பம் | கனடா | 13,700.00 |
| 234 | 3448 | செந்தில்குமரன்(அபிராமி கார்த்திகன்) குடும்பம் | கனடா | 13,700.00 |
| 235 | 3449 | முகுந்தன் சுப்பையா குடும்பம் | கனடா | 6,850.00 |
| 236 | 3450 | ஜெனித்தா ஜெகதீஸ்வரன் | கனடா | 20,550.00 |
| 237 | 3451 | நாதன் இராசையா குடும்பம் | கனடா | 13,700.00 |
| 238 | 3452 | நவரட்ணராஜா இராசையா குடும்பம் | கனடா | 27,400.00 |
| 239 | 3453 | சிறீகாந்தன் சிங்கராசா குடும்பம் | கனடா | 6,850.00 |
| 240 | 3454 | சின்னக்கண்ணன் சிங்கராசா குடும்பம் | கனடா | 6,850.00 |
| 241 | 3455 | ஈசன்(ஜெயந்தி) குடும்பம் | கனடா | 13,700.00 |
| 242 | 3456 | அரியரட்ணம் (அற்புதமலர்) குடும்பம் | கனடா | 13,700.00 |
| 243 | 3457 | ரவீந்திரன் வல்லிபுரம் குடும்பம் | கனடா | 27,400.00 |
| 244 | 3458 | தலைவீரசிங்கம்(கண்ணன்,) குடும்பம் | கனடா | 139,055.00 |
| 245 | 3459 | ஜெயரட்ணராசா நடராசா குடும்பம் | கனடா | 27,400.00 |
| 246 | 3460 | ஜீவரட்ணராஜா நடராசா குடும்பம் | கனடா | 27,400.00 |
| 247 | 3461 | விஜயன் ராசா குடும்பம் | கனடா | 13,700.00 |
| 248 | 3462 | நந்தன் நடராசா குடும்பம் | கனடா | 13,700.00 |
| 249 | 3463 | சிறீகாந்தன் (நிறஞ்சனா) குடும்பம் | கனடா | 4,110.00 |
| 250 | 3464 | மதுசுதன் பேரம்பலம் குடும்பம் | கனடா | 13,700.00 |
| 251 | 3465 | சுபாஷ்கரன் துரைரத்தினம் குடும்பம் | கனடா | 13,700.00 |
| 252 | 3466 | உதயகுமார் (சுதர்சனா) குடும்பம் | கனடா | 13,700.00 |
| 253 | 3467 | பரமேஸ்வரன் சின்னத்தம்பி குடும்பம் | கனடா | 27,400.00 |
| 254 | 3468 | சிந்துசன் பரமேஸ்வரன் | கனடா | 13,700.00 |
| 255 | 3469 | றகுநாதன் சின்னத்தம்பி | கனடா | 47,950.00 |
| 256 | 3470 | சதீசன் சுமதி குடும்பம் | கனடா | 27,400.00 |
| 257 | 3471 | சிறீறங்கன் தேவராசா குடும்பம் | கனடா | 13,700.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 258 | 3472 | ஆனந்தன் தேவராசா குடும்பம் | கனடா | 6,850.00 |
| 259 | 3473 | பரராஜலிங்கம் சபாரட்ணம் குடும்பம் | கனடா | 20,550.00 |
| 260 | 3474 | ராமசந்திரா(சின்னகுஞ்சா இரத்தினக்கா) குடும்பம் | கனடா | 21,920.00 |
| 261 | 3475 | தேவராசா (பெரியகுஞ்சா)குடும்பம் | கனடா | 13,700.00 |
| 262 | 3476 | பஞ்சலிங்கம் சபாரட்ணம் குடும்பம் | கனடா | 13,700.00 |
| 263 | 3477 | உதயகுமார் இரட்ணகோபாலபிள்ளை குடும்பம் | கனடா | 13,700.00 |
| 264 | 3478 | பத்தகுமார் முருகையா குடும்பம் | கனடா | 13,700.00 |
| 265 | 3479 | சண்முகதாஸ் முத்துத்தம்பி குடும்பம் | கனடா | 13,700.00 |
| 266 | 3480 | ரகு பொன்னம்பலம் குடும்பம் | கனடா | 6,850.00 |
| 267 | 3481 | சிவபாலன்(லலிதகுமாரி)குடும்பம் | கனடா | 13,700.00 |
| 268 | 3482 | சசிநாயகம் இராசநாயகம் குடும்பம் | கனடா | 6,850.00 |
| 269 | 3483 | ரவீர்திரன் சிவராஜா குடும்பம் | கனடா | 6,850.00 |
| 270 | 3484 | சண்முகம் குடும்பம் | கனடா | 13,700.00 |
| 271 | 3485 | சாந்தன் தேவசுந்தரம்(தம்பிகராஜ்) குடும்பம் | கனடா | 13,974.00 |
| 272 | 3486 | மதிபாலன் மாணிக்கசிங்கம் குடும்பம் | கனடா | 20,550.00 |
| 273 | 3487 | தவலிங்கம் யோகராசா குடும்பம் | கனடா | 6,850.00 |
| 274 | 3488 | பாஸ்கரன்(ஈசன்)வேலுப்பிள்ளை குடும்பம் | கனடா | 27,400.00 |
| 275 | 3489 | London Giftaid For Charitable Donations | கனடா | 202,911.00 |
| 276 | 3490 | சி. மாதவகுமாரன் | கோண்டாவில் | 50,000.00 |
| 277 | 3491 | 5ஆம் திருவிழா உபயம் | | 25,000.00 |
| 278 | 3492 | பாமினி இராஜகுலசிங்கம் | கோண்டாவில் | 47,764.00 |
| 279 | 3493 | யோகேஸ்வரன் குடும்பம் | கொக்குவில் | 10,000.00 |
| 280 | 3494 | ஜெ. சுபசங்கர் | கொக்குவில் | 2,000.00 |
| 281 | 3495 | சிறீதரன் குடும்பம் | கொக்குவில் | 1,000.00 |
| 282 | 3496 | ந. பிறேம்குமார் | கோண்டாவில் | 22,500.00 |
| 283 | 3497 | R.பாலசுப்பிரமணியம் | கோண்டாவில் | 1,000.00 |
| 284 | 3498 | பாலசிங்கம் நிராகவன் (லக்கியா) | கொக்குவில் | 5,000.00 |
| 285 | 3499 | சண்முகநாதன் குடும்பம் | நல்லூர் | 10,000.00 |
| 286 | 3500 | சிவதாசன் குடும்பம் | கொழும்பு | 5,000.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 287 | 3501 | சாந்தனி கேதன் குடும்பம் (புஸ்பராணி குடும்பம்) | கொக்குவில் | 10,000.00 |
| 288 | 3502 | துரைராஜசிங்கம் உமாதேவி | ஜேர்மனி | 80,000.00 |
| 289 | 3503 | கு. அருட்குமரன் (சண்டேஸ்வரர்) | கொக்குவில் | 200,000.00 |
| 290 | 3504 | உதயரூபன் ரூபதர்சினி | கொக்குவில் | 170,000.00 |
| 291 | 3505 | V.சுதர்சன் | கொக்குவில் | 10,000.00 |
| 292 | 3506 | ஞா.சஞ்சய் | கொக்குவில் | 1,000.00 |
| 293 | 3507 | சுமங்கல்யா கபிலன் | கொக்குவில் | 25,000.00 |
| 294 | 3508 | சின்னத்துரை குடும்பம் (ஜெயபாலசிங்கம்) | கொக்குவில் | 500,000.00 |
| 295 | 3509 | ஜனந்தன் குடும்பம் | கொக்குவில் | 5,000.00 |
| 296 | 3510 | அமரர். நாகரத்தினம் அருணாசலம் | கனடா | 200,000.00 |
| 297 | 3511 | சச்சிதானந்தன் குடும்பம் (தேர்) | கொக்குவில் | 50,000.00 |
| 298 | 3512 | பிறேம்குமார் சீனிவாசன் குடும்பம் | கொக்குவில் | 14,000.00 |
| 299 | 3513 | பாலகிருஷ்ணன் காசிப்பிள்ளை | கொக்குவில் | 7,000.00 |
| 300 | 3514 | சுந்தரங்கன் ரட்ணசிங்கம் | கொக்குவில் | 14,000.00 |
| 301 | 3515 | சந்திரகுமார் அரசநாயகம் | கொக்குவில் | 7,000.00 |
| 302 | 3516 | துரை குடும்பம் | கொக்குவில் | 21,000.00 |
| 303 | 3517 | உதயகுமார் ரட்ணகோபாலபிள்ளை | கொக்குவில் | 7,000.00 |
| 304 | 3518 | கு.குமரேசன் | கொக்குவில் | 10,000.00 |
| 305 | 3519 | சு.சந்திரகுமார் | மண்டைதீவு | 1,000.00 |
| 306 | 3520 | செல்லையா ஜெகதீஸ்வரன் | கொக்குவில் | 100,000.00 |
| 307 | 3521 | வனுசியா உதயராஜ் | அவுஸ்ரேலியா | 50,000.00 |
| 308 | 3522 | கோபிராஜ் கோபாலகிருஷ்ணன் | அவுஸ்ரேலியா | 25,000.00 |
| 309 | 3223 | பரமஞானம் குடும்பம் | வண்ணார்பண்ணை | 1,000.00 |
| 310 | 3524 | ப.திவ்யா | கொக்குவில் | 2,000.00 |
| 311 | 3525 | சி.வி.சிவானந்தி சிவானந்தன் | கொக்குவில் | 225,000.00 |
| 312 | 3526 | சதீஸ்குமார் குடும்பம் | கொக்குவில் | 7,754.00 |
| 313 | 3527 | நடராஜபெருமாள் குடும்பம் | கொக்குவில் | 201,750.00 |
| 314 | 3528 | இ.இரஞ்சன் | கொக்குவில் | 13,000.00 |
| 315 | 3529 | தியாகராசா குடும்பம் | கொக்குவில் | 10,000.00 |
| 316 | 3530 | த.விபூர்சனா | கொக்குவில் | 1,000.00 |
| 317 | 3531 | த.பழனிநாதன் | கொக்குவில் | 500.00 |
| **மொத்தம்** | | | | **14,653,914.00** |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செலவுகள்

| | |
|---|---|
| கோபுரவாசற் திருவாசி அமைத்தல் வேலை | 1,511,260.00 |
| தெற்கு பக்க திருவாசி அமைத்தல் வேலை | 1,823,585.00 |
| பாலஸ்தாபனம் | 209,577.00 |
| கொடி மரம் | 332,000.00 |
| சில்வர் கதவுகள் | 500,000.00 |
| மாபிள்கள் வாங்கியமை, பதித்தமை | 790,946.00 |
| பொலிசிங் செய்தமை | 100,000.00 |
| ரெறாசோ இட்டமையும் பொலிசிங் செய்தமையும் | 572,400.00 |
| தீந்தை பூசியமை | 2,846,300.00 |
| தீந்தை வாங்கியமை | 2,212,896.00 |
| கும்பாபிஷேக செலவுகள் | 2,503,397.00 |
| விக்கிரகங்கள் செய்தமையும் ஏனைய வேலைகளும் மற்றும் திருத்தங்களுக்குமான மேசன் கொடுப்பனவுகள் | 1,726,750.00 |
| ஏனைய கொடுப்பனவுகள் | 1,076,066.00 |
| ஆலய மேற் கூரை வேலைகள் | 3,910,399.00 |
| ஆதிமூலத்தைச் சுற்றி கம்பி நெற் அடித்தமைக்கான மூலப்பொருட்களும் கூலியும் | 289,706.00 |
| கைலாச வாகன கொட்டகைக்கு தகரம் மாற்றியமையும் கூலியும் | 102,430.00 |
| சிறிய தேர் கொட்டகைக்கு தகரம் மாற்றியமையும் கூலியும் | 75,610.00 |
| மஞ்ச கொட்டகை கதவுகள் திருத்தமும் கூலியும் | 15,060.00 |
| இடிதாங்கி பூட்டியமைக்கான மூலப் பொருட்களும் கூலியும் | 201,750.00 |
| முருகன் ஸ்தூபி சில்வர் கதவு செய்தமை | 25,000.00 |
| **மொத்தம்** | **20,825,132.00** |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிற்சேர்க்கை :**

மஹா கும்பாபிடேக மலர் அச்சுக்கு போன காலப்பகுதியில் கொவிட் 19 பெருந்தொற்று அனர்த்தம் ஏற்பட்டமையால் உலகம் முழுவதுமே பெரும் பாதிப்பிற்குள்ளானது. அதன் பாதிப்பினால், எமது கும்பாபிடேக மலர் உரிய காலத்தில் அச்சுப்பதிப்பு செய்யப்பட்ட போதும், அதனை வெளியிட்டு வைப்பதில் கால தாமத்தினை ஏற்படுத்தியிருந்து.


மேலும் கொவிட் 19 தொற்றுக் காலத்தில் அம்பாளது பூஜைகள் தடையின்றி நடைபெறுவதற்கான ஒழுங்குகள் எம்மால் மேற்கொள்ளப்பட்டதுடன், முக்கியத்துவம் மிக்க ஆலய திருப்பணி வேலைகளையும் தேவையான சுகாதார ஏற்பாடுகளுடன் செய்து முடித்திருந்தோம். அவை தொடர்பான விடயங்கள் வரலாற்றுத் தேவை கருதி பிற்சேர்க்கையாக இங்கு தரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 01.01.2021 | – | ஒப்பந்த அடிப்படையில் சிவஸ்ரீ நிரூபன் குருக்கள் நியமிக்கப்பட்டார் |
| 05.03.2021 | – | சுற்றுப்பிரகார கொங்கிறீற் கொட்டகைக்கு மேல் Asbestos Sheet கூரை பொருத்தப்பட்டது. |
| 14.04.2021 | – | ஆலயத்திற்கான காரியாலயம் மற்றும் மடப்பள்ளி புதிதாக கனடாவில் வசிக்கும் திரு மாணிக்கசிங்கம் மதிபாலசிங்கம், திரு இரத்தினகோபால் உதயன் ஆகியோரின் பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்டன. |
| 15.10.2021 | – | கேதார கௌரி நோன்பு பூசைகள் ஆரம்பிக்கப்பட்டது. |
| 07.02.2022 | – | ஒப்பந்த அடிப்படையில் சிவஸ்ரீ . வி.விஜியகுமாரக் குருக்கள் நியமனம் செய்யப்பட்டார் |






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கூரை வேலை பூர்த்தியாக்கப்பட்ட பின்



காரியாலயம் மற்றும் மடப்பள்ளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1982 ஆம் ஆண்டு திரைச்சீலைக் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PRINT@ANDRA 021 222 8929